
தர்மசக்கரம்










ரௌத்திரி ௵ மாசி ௴ சக்கரம் 30 ஆரம் 2

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115, திருச்சி ஜில்லா

ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்திவிழா

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115, எலமனூர் ரயில்வே ஸ்டேஷன், திருச்சிராப்பள்ளி Dt.

அன்புடையீர்,

ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்திவிழா 1981 மார்ச் மீ 15ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5-30 மணிமுதல் 8-30 மணிவரை இங்குக்கொண்டாடப்பெறும். நீங்கள் அனைவரும் அதில் கலந்துகொண்டு திருவருளுக்குப் பாத்திரமாவீர்களாக.

இங்ஙனம்
சித்பவானந்த

நிகழ்ச்சி முறை

15—3—81 ஞாயிறு மாலை

5-30 மணிமுதல் 7-00 மணிவரை
குருகுலமாணுக்கர் ஆடல், பாடல், பேச்சு முதலியன

7-00 மணிமுதல் 8-30 மணிவரை குருகுல மாணுக்கர்களால்
மார்க்கண்டேயன் என்னும் நாடகம்

தாய்மார்களுக்குத் தனி இடவசதி உண்டு. சிற்றுண்டிச்சாலை உண்டு.

திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தில் அந்தர்யோகம்

1981 ஞு மார்ச் மாதம் 17, 18, 19 தேதிகளாகிய மூன்று தினங்களில் கீழ்க் கண்ட வாழ்க்கை முறைப்படி இங்கு அந்தர்யோகம் நடைபெறும். இதில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் மார்ச் மீ 16ஆம் தேதி இரவே நேரில் நாள் ஒன்றுக்கு ரூ. 6-00 வீதம் செலுத்திப் பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளவேண்டும். தாய்மார்களுக்குத் தனி இடவசதி உண்டு. பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும், கைக் குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

வாழ்க்கை முறை

காலை

	மணிமுதல்	மணிவரை
துயில் எழுந்திருத்தல்	4-30	
எல்லாரும் ஒன்றுகூடி நாமஜபம்	5-00	5-30
காவேரி ஸ்நானம் முதலியன	5-30	6-30
காலை தியானம்	6-30	7-00
சிற்றுண்டி	7-00	
காலை உபந்யாசம்	8-30	9-30
மௌனம்	9-30	10-30
பஜனை	10-30	11-30
அர்ச்சனை, பூஜை	11-30	12-00

மாலை

	மணிமுதல்	மணிவரை
போஜனம், ஓய்வு	12-00	2-30
மாலை உபந்யாசம்	2-30	3-30
தனியாக வாசித்தல்	3-30	4-30
பானம், யோகாசனம், உலாவல், நீராடல் முதலியன	4-30	6-00
நாம ஜபம்	6-00	6-15
ஆரத்ரிகம், தியானம்	6-15	7-00
இரவு போஜனம்	7-00	
ஸத் ஸம்பாஷணை	8-30	9-30
நித்திரை	10-00	

உபந்யாசங்கள் :— யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத் சம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக் கொள்ளலாம்.

ருத்தமிழ்ம்ணவை
11.2 81

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 30	ரௌத்திரி ஹூ மாசி மீ	ஆரம் 2

பொருளடக்கம் — பக்கம்

வருட சந்தா: உள்நாடு ரூ. 12-00 வெளிநாடு ரூ. 25-00
தனி இதழ் ,, ரூ. 1-25 ,, ரூ. 2-25

ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் திருப்பணி

29—1—81ல் திட்டப்படி கும்பாபிஷேகமும் குருபூஜையும் சிறப்பாக நடந்தன. இன்னும் சில்லரை வேலேகள் பாக்கி உள்ளன. அவைகள் விரைவில் முடிவுபெறும். சித்திரை மாதம் 1ம் தேதி முதல் கந்தன் களிக்கூடம் என்னும் பெயருடன் அங்கு நர்சரி ஆரம்பிக்கப்படும்.

1981 ஜனவரி மாத நன்கொடை விபரம் வருமாறு :

	விலாசம்	ரூபாய்
	1980 டிசம்பர் மாதம் முடிய நன்கொடை வசூல்	*10 04 396*
ஸ்ரீ N. P. தங்கவேல்	நரசீபுரம், கோவை	*1 250*
,, M. B. ராமச்சந்திரன் செட்டியார்	பெரியகடைவீதி, திருச்சி	*1 001*
M/s சாரதாஸ்	N. S. B. ரோடு, ,,	*1 001*
ஸ்ரீ சித. பழ. சிதம்பரம்	தில்லேநகர், ,,	*1 001*
,, R. சாமியப்பன்	மேகலா டிரான்ஸ் போர்ட், சாலேரோடு, ,,	*1 000*
ஸ்ரீ K. S. திருவரசுப்பிள்ளே, அறங்காவலர், ஸ்ரீ செல்லமணிஅம்மாள்	கோவில்கள், கூடப்பள்ளி, ,,	*1 000*
,, PL. A. சுப்ரமணியம்	PL. A. ரோடுவேஸ், கண்டோன்மெண்ட், ,,	*501*
,, S. S. T. சிதம்பரம் செட்டியார்	PL. A. டிரான்ஸ்போர்ட், தில்லேநகர் ,,	*500*

ஸ்ரீ க. இளங்கோ	ஏழாயிரம் பண்ணை, இராமநாதபுரம்	500
,, A. ராமசாமி	கமிஷன் வியாபாரம், ஈரோடு	300
,, M. வைரப்பெருமாள் செட்டியார்	ஸ்ரீனிவாசபுரம், கரூர்	251
,, A. காமாக்ஷி செட்டியார்	தில்லைநகர், திருச்சி	251
,, G. அருணாசல ரெட்டியார்	ஏந்தல், தென்னாற்காடு மாவட்டம்	250
,, A. N. பாலகிருஷ்ணன்	கிருஷ்ணராயபுரம், கோவை	234
,, O. P. முத்துகவுண்டர்	ஓ. நஞ்சகவுண்டம்பாளையம், பவானி	200
,, K. R. நாச்சிமுத்துகவுண்டர்	கொண்டையம்பாளையம் ,,	200
சுவாமி விவேகானந்தா உயர்நிலைப்பள்ளி	வைரிசெட்டிப்பாளையம்	200
ஸ்ரீமதி அன்னக்கொடி	அசோகபுரம், ஈரோடு	175
ஸ்ரீ N. K. பாண்டியராஜ்	காமயகவுண்டன்பட்டி	125
ஸ்ரீமதி S. M. R. S. அமராவதி அம்மாள்	வெளிப்பட்டணம், இராமநாதபுரம்	111
ஸ்ரீ S. சந்தனம் ஆசாரி	கயத்தாறு, திருநெல்வேலி	111
,, P. K. நடராஜன் அண்டு கோ	R. S. புரம், கோவை	106
,, P. N. மருதாசலக் கவுண்டர்	கணபதி, கோவை	101
,, E. ராமலிங்கசுவாமி	லக்ஷ்மணபுரம், பொள்ளாச்சி	101
,, J. K. கிரிராஜ்	பீமண்ண முதலிதோட்டத்தெரு, சென்னை	101
,, K. S. சண்முகம்	சூலூர், கோவை	101
,, V. R. சந்திரசேகரன்	நிலக்கிழார், வெள்ளாங்கோவில்	100
,, V. N. வெங்கடாசலம்	இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ், சென்னை	100
,, K. K. காளியணகவுண்டர்	வடுகப்பாளையம்புதூர், கோபிசெட்டிபாளையம்	100
,, M. பொங்கியண கவுண்டர்	நாகதேவம்பாளையம், கோபிசெட்டிப்பாளையம்	100
,, சின்னகவுடர்	பெரிய கௌரம்பாளையம் ,,	100
,, ரங்கசாமி கவுண்டர்	,, ,,	100
,, செல்லப்ப கவுண்டர்	,, ,,	100
,, கா. ராசாக் கவுண்டர்	,, ,,	100
,, K. R. பழனிசாமி	கல்வெட்டுப்பாளையம், கோவை	100
,, N. மருதநாயகம் பிள்ளை	கூத்தைப்பார், திருச்சி	100
,, A. சுந்தரராஜன் சோமநாயக்கர்	,, ,,	100
,, A. ரெங்கராஜ் சோமநாயக்கர்	,, ,,	100
,, சி. கண்ணையன் தொண்டைமான்	தொண்டைமான்பட்டி ,,	100
,, து. முத்துசாமி பாண்டுரார்	கூத்தைப்பார், திருச்சி	100
,, ஆ. தியாகராஜன் சோமநாயக்கர்	,, ,,	100
ஸ்ரீ T. லக்ஷ்மண பெருமாள்	ஹேடோஸ் ரோடு, சென்னை	100
,, V.N. சீனிவாசன்	அசோசியேடட் டிம்பர் இண்டஸ்ட்ரீஸ், கொல்லம், கேரளா	100
,, A. L. ஜனார்த்தனன்	ஸ்ரீனிவாஸ் டிரேடிங் கம்பெனி ,, ,,	100
M/s. கேரளா பப்ளிசிட்டி ப்ரு	கோட்டயம், கேரளா	100
M/s. G. பத்மாவதி கணேசன்	தூத்துக்குடி	100
ஸ்ரீமதி பிரபாவதி கனகசபை	தூத்துக்குடி	100
ஸ்ரீமதி கமலம்மாள்	ஸ்ரீரங்கம், திருச்சி	100
ஸ்ரீ S. V. P. கிருஷ்ணசுவாமி செட்டியார்	யானைக்கல் தெரு, மதுரை	100
ரூபாய் நூறுக்குக் கீழ்வந்த நன்கொடைகள்		9 872
	ஆகக் கூடுதல் ரூ.	10 27 240

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 30 ‖ *ரௌத்திரி ஞூ மாசி மீ* ‖ *ஆரம் 2*

பிரார்த்தனை

हे चन्द्रचूड मदनान्तक शूलपाणे स्थाणो गिरीश गिरिजेश महेश शम्भो ।
भूतेश भीतभयसूदन मामनाथं संसारदुःखगहनाज्जगदीश रक्ष ॥

— शंकराचार्य

ஹே சந்த்ரசூட மதநாந்தக சூலபாணே
ஸ்தாணோ கிரீச கிரிஜேஸ மஹேச சம்போ ।
பூதேச பீதபயஸூதன மாமநாதம்
ஸம்ஸார துக்ககஹநாஜ்ஜகதீச ரக்ஷ ॥

— சங்கராச்சாரியர்

ஜகதீசா, சந்திரனை முடியில் அணிந்திருப்பவனே, மன்மதனை ஒழித்தவனே, சூலத்தைக் கையில் ஏந்தியிருப்பவனே, அசைவற்றவனே, கைலயங்கிரியில் வசிப்பவனே, மலைமகளுக்கு ஈசனே, மகாதேவனே சம்போ, உயிர்களுக்கு இறைவா, அஞ்சுபவர்களின் அச்சத்தை ஓட்டுபவனே, ஆதரவற்ற என்னைத் துன்பம் நிறைந்த சம்சார வாழ்க்கையினின்று காப்பாற்றுவாயாக.

தன்னைத்தந்து என்னைத் தடுத்துஆண்ட நின்கருணைக்கு
என்னைக்கொண்டு என்னபலன் எந்தாய் பராபரமே.

— தாயுமானவர்

அருள் விருந்து

மனம் தெளிவடைவதும் கடவுள் வழிபாடும் ஒன்றேயாம்.

மனதைப் பாழ்படுத்துபவை பொருந்தாத எண்ணங்களாம்.

ஆத்மாவின் மகிமைக்கு விளக்கம் கலை எனக் கூறப்படுகிறது.

தன்னுடைய சிற்றியல்பை வென்றவனே நல்ல வீரனாகிறான்.

சுயநலத்தை வென்றவன் தீமையனைத்தையும் வென்றவனாகிறான்.

உபாசகனுடைய பாங்குக்கேற்றவாறு பரமனை அவன் பொருள்படுத்துகிறான்.

திருந்தாத மனதுக்குச் சூழ்நிலைகள் யாவும் பொருந்தாதனவாகத் தென்படுகின்றன.

உறுதிப்பாடுடைய ஆத்ம சாதகனுக்கு உண்மையை அடைவதற்கான வழி தெரிகிறது.

மனிதனுக்குப் பகைவன் புறத்தில் இல்லை; அவன் மனத்தினுள்ளேயே மறைந்திருக்கிறான்.

யாண்டும் நிமிர்ந்து உட்கார்ந்திருப்பது ஆத்மசாதனத்தின் முன்னேற்றத்துக்கு அறிகுறியாம்.

பரஞானம் புத்தகத்தினின்று அடையப்படுவதன்று. அது உள்ளத்தினின்று உருவெடுக்கிறது.

தான் செய்த குற்றத்தைக் குறித்து வருந்துபவன் அக்கணமே அக்குற்றத்தினின்று விடுபட்டவனாகிறான்.

உடலைப் பேணுதலில் வீண்காலம் போக்காதவனுக்குச் சாதனத்துக்கு வேண்டியவாறு நேரம் வாய்க்கிறது.

நேரான வாழ்வு என்னும் மனநிலையினின்று பார்க்குமிடத்து முக்காலங்களிலும் ஒழுங்குப்பாடு தென்படுகிறது.

கூரையைப் பொத்துக்கொண்டு மழைத்துளி வீட்டுக்குள் வருவதில்லை. அதுபோன்று நல்ல மனதைத் துளைத்துக்கொண்டு காமம் உள்ளத்தினுள் நுழைவதில்லை.

விலங்குக்கும் தெய்வத்துக்கும் இடைநிலையிலிருப்பவன் மனிதன் எனப்படுகிறான். அன்னவன் விலங்கு இயல்பைத் துடைத்துவிட்டுத் தெய்விகத்தில் திளைத்திருக்க முயலவேண்டும்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

தக்ஷிணேசுவர ஆலயத்தில் பரமஹம்ச தேவர் தம் அறையிலே சிறிய கட்டிலின்மீது அமர்ந்திருந்தார். பக்தர்கள் பலர் தரையின் மீது அமர்ந்திருந்தனர். சுரேந்திரன் பரம ஹம்சதேவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந் தான். பரமஹம்சதேவர் அன்புடன் அவனைப் பார்த்து இயம்பினர்.

பரமஹம்சதேவர்: "அடிக்கடி இங்கு வா. நிர் வாணியாயிருந்த சான்ரேர் ஒருவர் பித்தளைப் பாத்திரம் ஒன்றை நாள்தோறும் துலக்கவேண் டும் என்று இயம்புவார். அப்படிச் செய்யா விட்டால் அது துருப்பிடித்துப் போம். பார மார்த்திகப் பண்பிலே வளர்ந்து வரும் இளை ஞன் அடிக்கடி சான்ரேர்களுடன் சத்சங்கம் நாடவேண்டும். காமத்தையும், காசு ஆசை யையும் ஒதுக்குதற்கேற்ப மானுடன் ஒருவன் மேலோன் ஆகிருன். இந்த இரண்டு பந்த பாசங்களில் நீ அகப்பட்டுக்கொள்ளாதே. வசதி வாய்க்கின்றபொழுதெல்லாம் நீ ஏகாந் தத்தை நாடிச் செல். அங்கே தன்னந்தனிய ஞக இருந்துகொண்டு அருள்தாகம் பிடித்தவ ஞக இறைவனிடம் பிரார்த்தனை பண்ணு. இந்தப் பாங்கிலே உன்னுடைய அகப்பற்று தல்களை ஒதுக்கித்தள்ள முயலவேண்டும்.

"பக்தன் ஒருவன் உறுதியான மனப்பான்மை படைத்தவனுக இருக்கவேண்டும். மன உறுதி அவனிடத்து இருக்குமாகில் உலகப்பற்று தலில் அவன் அகப்பட்டுக்கொள்ளமாட்டான். கடவுள் பற்றுதல் ஒன்றையே அவன் உறுதி யாக நாடி வருவான். ஜனக மகாராஜன் பிரபஞ்ச வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு முன்பு கடும் தவம் புரிந்தும் பிரார்த்தனைகள் பல பண்ணி யும் தன்னைப் பண்படுத்தினுன். அப்படி அவன் பெற்றிருந்த பரிபாகமே உலகப்பற்று தல்களினின்று அவனைக் காப்பாற்றியது. இரண்டுவித வாள்களை ஜனகன் உடைத்தவ ஞக இருந்தான். ஒன்று ஞானவாள். மற்றது தீவிர கர்மவாள்."

இப்பொழுது பரமஹம்சதேவர் பாடல் ஒன்றைப் பாடினுர். அதில் அடங்கியிருந்த கருத்துக்களாவன: 'இவ்வுலகம் ஆபத்து நிறைந்தது என்கின்றனர். ஆனல் இதே உலகம் பக்தனெருவனுக்கு ஆனந்த மாளிகை யாக அமைந்திருக்கிறது. இவ்வுலகிலே பக் தன் ஒருவன் உண்டு, உடுத்து, பூண்டு உல கத்தவன்போல் விளையாடலாம். ஆயினும் அவன் உலக பந்த பாசங்களில் அகப்பட்டுக் கொள்ளமாட்டான். இத்துறையில் ஜனக னுடைய வல்லமை ஒப்பு உயர்வு அற்றது. இவ்வுலக வாழ்க்கையில் அவனுக்குக் குறை ஏதுமில்லை. பின்பு பாரமார்த்திகப் பண் பிலோ அவன் தலைசிறந்து முன்னேறியிருந் தான். இகம் பரம் ஆகிய இரண்டையும் முற்றிலும் பயன்படுத்தியவன் அவனே. மானுட வாழ்வில் அமைந்திருக்கும் மகிமைகள் அனைத்தையும் கண்டறிந்தவனும் அவை யாவையும் நன்கு பயன்படுத்தியவனும் ஆவான் ஜனகன்.'

பரமஹம்சதேவர்: "மகாப்பிரபு ஆகிய கிருஷ்ணசைதன்யர் பகர்ந்துள்ள மேலாம் கோட்பாடுகளை நீ பழக்கத்தில் கொண்டு வரு வாயாக. உயிர்களிடத்தும் அன்பாயிரு. பக்தர் களிடத்துப் பணிவிடை பண்ணு. இறைவனு டைய திருநாமத்தை ஓதிக்கொண்டிரு.

"இவை யாவையும் நான் உனக்கு ஏன் எடுத்து இயம்புகிறேன் தெரியுமா? ஒரு வர்த்தகருடைய காரியாலயத்தில் ஒரு காரி யஸ்தனுக நீ அமர்ந்திருக்கிருய். ஆதலால் ஆற்றுதற்குப் பல பணிவிடைகள் உனக்கு அமைந்திருக்கின்றன.

"காரியாலயத்தில் நீ பொய் சொல்லுகின் ருய். அப்படியிருந்தும் உன் கைப்பட்ட உணவை நான் ஏன் அருந்துகிறேன்? நீ சம்பாதித்த பணத்தைத் தானமிடுவதில் நீ செலவு பண்ணுவதால் நீ மனத் தூய்மையை இழந்து விடவில்லை. உன்னுடைய வருவாய்க் குச் சற்று அதிகமாகவே நீ செலவு பண்ணு கின்ருய். முந்திரிக்கொட்டை முந்திரிப்பழத்தை விடப் பெரியதாயிருக்கிறது. பரந்த மனம் படைத்தவனே சுயநலத்தை விடப் பரநலத்தில் கருத்தை அதிகமாகச் செலுத்துகிருன்.

"கஞ்சத்தனம் படைத்திருக்கிறவர்கள் கைப்

பட்ட பண்டம் எதையும் ஏற்க எனக்கு இயலாது. உலோபிகளுடைய செல்வம் எப்படி எப்படியோ வீண்விரயம் ஆகிறது. நியாயஸ்தல வழக்கில் அவர்களுடைய செல்வத்தில் ஒரு பகுதி கரைந்து போகிறது. மற்றும் ஒரு பகுதி களவாடப்படுகிறது. மூன்ருவதாக வைத்தியம் பண்ணுவதில் அவர்களுடைய செல்வம் விரயமாகிறது. நான்காவதாகக் கட்டிலடங்காத அவர்கள் புதல்வர்கள் ஆடம்பர வாழ்வு வாழ்ந்து செல்வமனைத்தையும் இழக்கின்றனர். நல்வழியில் தானம் பண்ணத் தெரியாதவர்களுடைய தனம் இந்த விதத்தில் அழிந்துபட்டுப்போகிறது.

"பணத்தை நீ தானமாக எடுத்து வழங்குவது மிக நன்று. யாரிடத்தில் செல்வம் இருக்கிறதோ, அவர்கள் அதை மற்றவர்களுக்கு எடுத்து வழங்குவது முற்றிலும் அவசியம். உலோபியினுடைய செல்வம் எப்படியோ அழிந்துபட்டுப் போகிறது. ஆனல் கொடையாளியினுடைய செல்வமோ யாண்டும் வளர்ந்து வருகிறது. கொடையாளி ஒருவன் தன் செல்வத்தை நல்ல காரியங்களில் செலவிடுகிருன். கமார்புகூரில் வயல்களுக்கு நீர் பாய்ச்சக் குடியானவர்கள் வாய்க்கால்கள் வெட்டுவதை நான் பார்த்திருக்கிறேன். சில வேளைகளில் அந்த வாய்க்கால் வழியாகப் பாய்ந்து வரும் நீரின் வேகம் படைச்சால்களை உடைத்துத் தள்ளுகிறது. அதன் விளைவாகப் பயிர்கள் பாழ்படுத்தப்படுகின்றன. இக்காரணத்தை முன்னிட்டே படைச்சால்களில் ஆங்காங்குத் துவாரங்கள் அமைக்கப்படுகின்றன. அவைகளின் வழியாகச் சிறிது சிறிதாக நீர் போவதால் படைச்சால்கள் பாழாவதில்லை. அது மட்டுமன்று. தேங்கிப் பாய்கிற தண்ணீர் வண்டல்களைக் கொண்டுவந்து நிலத்தில் பரப்புகிறது. அதன் விளைவாக நிலத்துக்கு உரம் அதிகரிக்கிறது. விளைவும் அதிகமாகிறது. கொடையாளி ஒருவனுடைய பாங்கு வயல் உரத்தைப் பெறுவதற்கு நிகர். நேர்மையாக வாழுகிற கொடையாளி தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகிய புருஷார்த்தங்கள் நான்கையும் அடையப் பெறுகின்ருன்."

பரமஹம்சதேவர் திருவாய் மலர்ந்தருளிய இந்த மேலாம் கோட்பாடுகளைப் பக்தர்கள் ஆழ்ந்து கவனித்துக் கேட்டு வந்தார்கள்.

சுரேந்திரன்: "நன்கு தியானிக்க எனக்கு இயலுவதில்லை. சில வேளைகளில் அன்னை பராசக்தியின் நாமத்தை நான் ஜபம் பண்ணுகிறேன். படுக்கையில் படுத்துக் கொண்டு அன்னையின் நாமத்தை உச்சரித்துக்கொண்டு நான் தூங்கி விடுகிறேன்."

பரமஹம்சதேவர்: "அது போதும்: அன்னையை நீ நினைவில் வைத்திருக்கிருய் அல்லவா? யோகத்தில் இரண்டு விதங்கள் உண்டு. ஒன்று மானசயோகம்; மற்றது கர்மயோகம். குருவின் ஆணைப்படி தெய்வவழிபாடு செய்தல், தீர்த்த யாத்திரை போதல், மக்களுக்குப் பணிவிடை பண்ணுதல் ஆகிய புண்ணியச் செயல்களுக்குக் கர்மயோகம் என்று பெயர். நாடு ஆளும் விஷயத்தில் ஜனகன் செய்த செயல்களும் கர்மயோகம் எனப்படுகின்றன. பின்பு தியானம் பண்ணுவது, மேலான விஷயங்களைச் சிந்தனை பண்ணுவது ஆகியவைகள் மானசயோகம் எனப்படுகின்றன:

"காளிகோயிலில் அன்னையின் சந்நிதியில் அமர்ந்துகொண்டு சில வேளைகளில் எனக்கு நானே சொல்லிக்கொள்வதாவது: ஓ தாயே, மனம் என்பதும் நீயே! ஆதலால் சுத்தமனம், தெளிந்தபுத்தி, தூய ஆத்மன் எனப்பகரப் படுவன யாவும் ஒன்றேயாம்."

மாலை நேரம், இருண்டு வந்துகொண்டிருந்தது. பக்தர்களில் பலர் பரமஹம்சதேவரை வணங்கிவிட்டு வீட்டுக்குப்போகப் புறப்பட்டனர். பரமஹம்சதேவர் மேற்குத் திண்ணைக்குப் போனர். அப்பொழுது பவநாதனும், மகேந்திரரும் அவருடன் இருந்தார்கள்.

பரமஹம்சர் (பவநாதனைப் பார்த்து): "இங்கு நீ ஏன் அடிக்கடி வருவதில்லை?"

பவநாதன் (புன்னகை பூத்தவனுக): "ஐயனே நான் தங்களை மாதமிருமுறை வந்து தரிசிக்கிறேன். அன்ருெரு நாள் நான் தங்களை வீதியில் சந்தித்தேன். ஆதலால் அப்பொழுது நான் இங்கு வரவில்லை."

பரமஹம்சதேவர்: "நீ பகர்வது யாது? ஒருவரை வெறுமனே பார்ப்பதால் ஆவதென்ன? பாதஸ்பரிசமும், பேச்சும் நிகழ்வது அவசியமாகின்றன."

ஆலயங்களுள் மாலை ஆராதனை நிகழ்வன வாயின. அன்றைக்குச் சுக்லபக்ஷம் அஷ்டமி. கோயில் கோபுரங்கள், முற்றம், பூந்தோட்டங்கள், மரங்கள் ஆகியவைகளின் மீது நிலா வெளிச்சம் படிந்து அவைகளுக்குச் சோபை தந்தது. வடதிசையை நோக்கி கங்காநதி பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது. சலசல வென்ற சப்தம் அதனிடத்திருந்து வந்து கொண்டிருந்தது. பரமஹம்சதேவர் தம்முடைய அறையில் சிறிய கட்டிலின் மீதமர்ந்து அன்னை பராசக்தியின் தியானத்தில் ஆழ்ந்து மூழ்கியிருந்தார்.

ஆலயங்களுள் மாலை ஆராதனை முற்றுப் பெற்றது. பக்தர்களுள் ஒரு சிலர் மட்டும் ஆலயத்தில் தென்பட்டனர். நரேந்திரன் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுப் போயாயிற்று. பரமஹம்சருடைய அறைக்கு வடகிழக்குப் பக்கமிருந்த திண்ணையில் அவர் உலாவிக் கொண்டிருந்தார். அவரைப் பார்த்த வண்ணமாக மகேந்திரர் ஆங்கு நின்றுகொண்டிருந்தார். பரமஹம்சதேவர் மகேந்திரரிடம் திடீரென்று தெரிவித்ததாவது: " ஆ! நரேந்திரனுடைய பாடல்களுக்குச் செவிமடுப்பதில் உண்டான ஆனந்தந்தான் என்னே !"

மகேந்திரர்: "ஆம் ஐயனே, அவனுடைய பாடல்களுள் 'காரிருளிலே' என்று துவங்கிய பாடல் கேட்பதற்கு மிக அற்புதமாயிருந்தது."

பரமஹம்சதேவர்: "நீ சொல்லுவது முற்றிலும் சரி. அப்பாடலில் ஆழ்ந்த கருத்தொன்று புதைந்திருக்கிறது. என் மனதில் ஒருபகுதி இப்பொழுதும் அக்கருத்திலேயே உலவிக் கொண்டிருக்கிறது. கார் இருளிலே ஆழ்ந்து தியானம் பண்ணும்படி தந்த்ர சாஸ்திரங்கள் கூறுகின்றன."

கிரீஷ்சந்திரகோஷ் பரமஹம்சதேவருக்கு அருகில் வந்து நின்றார். அப்பொழுது பரமஹம்சதேவர் பாடியதாவது: "என் அன்னை காளி உண்மையில் கரிய நிறம் உடையவளா? அவள் திகம்பரி. காரிருளை விடப் பன்மடங்கு அதிகம் கறுப்பு நிறம் உடையவள். அத்தகையவள் ஹிருதய கமலத்தில் ஞான விளக்கேற்றி வைக்கிறாள்."

பரமஹம்சதேவர் ஆழ்ந்த பரவசநிலையில் மூழ்கி இருந்தார். அவருடைய கரங்களில் ஒன்று கிரீஷ்சந்திரகோஷருடைய மேனியின் மீது நாட்டப் பெற்றதாயிருந்தது. நின்று கொண்டிருந்தபடியே அவர் பாடியதாவது: "கங்கை, கயை, காசி, காஞ்சி, பிரயாகை ஆகிய புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு நான் ஏன் போகவேண்டும்? காளியின் நாமத்தை உச்சரித்துக்கொண்டு உயிர்நீக்கும் திறமை என்னிடத்திலிருப்பது போதாதா? மானுடனொருவன் கிரியைகள் பல பண்ணுவதற்கு அவசியம் யாது? மேலும் பக்தி பண்ணுவது எதற்காக? திரிசந்தியாவாகிய காலை, நண்பகல், மாலை ஆகிய புண்ணிய நேரங்களில் அன்னை பராசக்தியின் நாமத்தை உச்சரிப்பது போதாதா? கிரியைகள் பல பண்ணுவது அவனுடைய பழக்கமாக இருக்கலாம். ஆனால் அக்கிரியைகள் அவன் படைத்துள்ள பரிபாகத்துக்கு நிகராகமாட்டா."

மற்றும் ஒரு பாடலை பரமஹம்சதேவர் பாடியருளினர். அப்பாடலில் அடங்கியிருந்த கருத்துக்களாவன:

"இறுதியாக இப்பொழுது என் உள்ளத்தினுள்ளே விவேகம் உதயமாயிருக்கிறது. இதில் குழப்பத்துக்கு இடமில்லை. செந்நெறி சார்வதற்கும் செம்பொருளை அடைவதற்கும் இதுவே உற்ற உபாயமாகிறது. யாண்டும் தன்மயமாயிருப்பவள் அன்னை பராசக்தி. அவள் ஞானக் களஞ்சியம். வாலறிவு சொரூபிணி. பிரபஞ்சத்தை ஒதுக்கிவைத்துவிட்டுப் பரம்பொருளைச் சமாதி நிலையில் சார்ந்திருக்கும் பாங்கை அன்னை பராசக்தி எனக்குப் புகட்டியுள்ளாள். அவள் எனக்குக் காட்டியருளியுள்ள ஞான பூமியோ இரவு பகலற்ற இடம். காலாதீதத்தில் அது இருக்கிறது. அத்தகைய பிரதேசத்தில் வசித்து வருகிற எனக்கு எது பகல் எது இரவு என்னும் வேற்றுமை இல்லை. கிரியைகள் பல புரிந்து அன்னையை வழிபட வேண்டிய அவசியம் இந்த ஞானபூமியில் இல்லை. பாடுவதற்கும் தேடுவதற்கும் ஈண்டு அவசியமில்லை. யாவும் பரமானந்தப் பெருவெளியாக இலங்குகிறது. மண்ணுலக வாழ்வில் இருந்தபொழுது எனக்கு உறக்கமும் விழிப்பும் மாறி மாறி அமைந்தன. அத்தகைய உறக்கத்தினின்று நான் இப்பொழுது விழித்து எழுந்திருக்கிறேன்."

எந்நாள்கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

2. பொன்ஞரும் மன்றுள் மணிப்பூவைவிழி வண்டு [சுற்றும்
என்னூரமுதின் நலம் இச்சிப்ப தெந்நாளோ.

பொன்ஞரும் மன்றுள்—பொன்னம்பலத்தில்; மணிப்பூவை விழி வண்டு சுற்றும்—அழகிய சிவகாமசுந்தரியின் விழிகளாகிய வண்டுகள் சுற்றிக்கொண்டிருக்கும்; என்னுர் அமுதின் நலம்—அரிய அமுதம் போன்ற என்னுடைய நடராஜப் பெருமானின் கிருபையை.

ஆத்ம சாதகனுடைய பரிபாகத்துக்கேற்பப் பிரபஞ்சத்தின் காட்சி அவனுக்குத் திருந்தியமைகிறது. மனபரிபாகம் அடைந்திருப்பவனுக்குச் சாதாரண உலகம் பொன்னம்பலமாகக் காட்சி கொடுக்கிறது. நிறத்தில் அது உருக்கி எடுத்த தங்கம் போன்று காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறது. அதனுள் அம்பிகையின் சாந்நித்தியம் ஆனந்தத்தை ஊட்டுகிறது. அன்னே பராசக்தியின் கண்பார்வை பூவைப் பறவையின் கண்கள் போன்று கவர்ச்சிகரமாக இருக்கிறது. இந்த அரிய அம்பலத்திலே எழுந்தருளியிருக்கும் நடராஜப் பெருமான் அமிர்த சொருபமாக இலங்குகின்ருர். அத்தகைய பரமனிடத்து அன்பு வைக்கும் அருள் நாட்டம் அடியேனுக்கு வாய்க்கவேண்டும் என்று விண்ணப்பிக்கிறேன்.

3. நீக்கிமலக்கட் டறுத்து நேரே வெளியில் எம்மைத் தூக்கிவைக்கும் தாளைத் தொழுதிடுநாள் எந்நாளோ.

நீக்கி—மாயையை ஒழித்து.

ஜிவாத்மன் காண்கின்ற காட்சி அவன் அடைந்துள்ள மனபரிபாகத்திற்கு விளக்கமாகிறது. இப்பிரபஞ்சம் ஒன்று எனினும் அது எல்லார்க்கும் ஒரேவிதமான காட்சியைத் தருவதில்லே. கெட்டவன் ஒருவனுக்குக் கேடு சூழ்ந்ததாக இவ்வையகம் விளங்குகிறது. நல்லவன் ஒருவனுக்கு நலன் நிறைந்துள்ளதாக இவ்வுலகம் மிளிர்கிறது. இவ்வுலகைப்பற்றிய உண்மையை ஒரு சான்றின் மூலமாகப் பெரியோர்கள் விளக்குகிருர்கள். இருண்டு வருகிற நேரத்தில் பாதையில் நடந்துபோன ஒருவன் பாம்பு ஒன்று சுருண்டு படுத்திருந்ததைப் பார்த்தான். மருண்டுபோன அவன் எட்ட நின்றுகொண்டு அதன் பக்கத்தில் போகவேண்டாமென்று வழியில் வந்தவர்களுக்கும் எச்சரிக்கை பண்ணிஞன். வந்தவர்களுள் ஒருவன் கையில் மின் விளக்கு வைத்திருந்தான். அதைப் போட்டுப் பார்த்தவுடனே அது பாம்பு அன்று, ஒரு கயிறு சுருண்டு கிடந்தது வெளியாயிற்று. பாம்பைப் பார்த்தவன் கயிற்றைப் பார்க்கவில்லே. கயிற்றைப் பார்த்தவன் பாம்பைப் பார்க்கவில்லே. இவ்வுண்மை பார்க்கப்படு பொருளாகிய பிரபஞ்சத்துக்கும் ஒத்ததாயிருக்கிறது. அதைப் பிரபஞ்சமாகப் பார்ப்பவனுக்குப் பரம்பொருள் காட்சியில் இல்லே. பரம்பொருளாகக் காண்பவனுக்குப் பிரபஞ்சம் காட்சியில் இல்லே. ஆக நீக்கி என்னும் சொல் அறிவு மயக்கத்தை ஒதுக்கித் தள்ளு எனப் பொருள்படுகிறது.

மனதின் துணைகொண்டு ஜீவாத்மன் பிரபஞ்சத்தைப் பார்க்கிருன். ஒவ்வொரு ஜீவனுடைய மனப்பான்மைக்கு ஏற்ப உலகம் அவனுக்குக் காட்சி அளிக்கிறது. இனி, எத்தனே மாந்தரோ அத்தனே வித மனப்பாங்குகள் இருக்கின்றன. மனம் திருந்தியமைவதற்கேற்ப ஆத்ம சாதகனுக்கு மெய்ப்பொருள் காட்சி உள்ளபடி வந்தமைகிறது. அப்படி அமையவேண்டிய நிலேயானது மலக்கட்டறுத்து என்னும் சொல்லில் அடங்கியிருக்கிறது. ஆக மலம் அல்லது அழுக்கு மனதைச் சார்ந்திருக்கிறது. இந்த அழுக்கை நீக்குதல் வாழ்க்கையின் குறிக்கோள். மனதின்கண்ணுள்ள மாசு நீங்குதற்கேற்ப ஆத்மசாதகன் இறைவனுடைய சாந்நித்தியத்துக்குப் பக்கத்தில் வருகிருன். அப்படி அவன் பக்கத்தில் வருவதற்கு இறைவனுடைய திருவருள் துணே புரிகிறது. திருவருளுக்குச் சான்ருகச் சிவனுடைய தூக்கிய பாதம் திகழ்ந்துகொண்டிருக்கிறது. அப்பாதத்தைச் சேவிப்பதும் அவனுடைய அருளே நாடுவதும் ஒன்றேயாம். பிரபஞ்சத்தை ஒதுக்கி வைத்துவிட்டுப் பரமனுடைய அருளேயே நாடிநிற்கும் நல்ல காலம் எப்பொழுது வாய்க்குமோ என்பது இந்தக் கண்ணியின் கருத்தாகும்.

4. கருமுகங்காட் டாமல் என்றும் கர்ப்பூரம் வீசும் திருமுகமே நோக்கித் திருக்கு அறுப்பது எந்நாளோ.

ஒவ்வொரு ஜீவனும் தான் பூண்டுள்ள ஆசையை நிறைவேற்றுவதற்குப் பிரபஞ்சத்தில் வந்து பிறப்பெடுக்கிறான். பிறப்பெடுக்கிற ஒவ்வொரு ஜீவனும் அன்னையின் கருவை நாடியாகவேண்டும். அது பிறவிப் பெருங்கடலாக வளர்ந்துகொண்டே போகிறது. அத்தகைய பிறவி வேண்டாமென்று அதில் பற்றை ஒழிக்கிற பாங்கு 'கருமுகங்காட்டாமல்' என்னும் சொல் தொடரில் அடங்கியிருக்கிறது. அதில் பற்று நீங்கப் பெறுபவனுக்கே தெய்வப்பற்று ஓங்குகிறது. தெய்வப்பற்று ஓங்க ஓங்க உலகப்பற்று என்னும் குற்றம் நீங்குகிறது. ஒன்றோடொன்று ஒவ்வாத இரண்டுவித ஆசைகள் மனதில் குடிகொள்ளுவதில்லை. இக்கோட்பாட்டை ராமன் உள்ள இடத்தில் காமன் இல்லை, காமன் உள்ள இடத்தில் ராமன் இல்லை என்று ராமகிருஷ்ண பரமஹம்சர் பகர்ந்தருளுகிறார். திருக்கறுப்பது என்பது மாசை நீக்குதல் எனப் பொருள்படுகிறது. உலகப் பற்றை அறவே ஒழித்துவிட்டுத் தெய்வப்பற்றில் நான் ஆழ்ந்து மூழ்குவேனாகில் உய்வு அடைவதற்கு எனக்கு அதுவே உற்ற உபாயமாகிறது என்பது இந்தக் கண்ணியின் பொருள்.

5. வெஞ்சேல் எனும்விழியார் வேட்கைநஞ்சுக்கு [அஞ்சினரை அஞ்சேல் எனும்கைக்ந அபயம்என்பது எந்நாளோ.

போகத்தில் ஆசை வைக்கிறவன் விஷத்தை உண்பவனுக்குச் சமானமாகிறான். போகம் மனிதனைப் பிறவிப்பிணியில் ஆழ்த்துகிறது. அது சுகம் போன்று தோன்றிப் பிறகு துக்கமாக மாறுகிறது ஆதலால் அதற்கு நிகரான நஞ்சு உலகில் இல்லை போகத்துள் சம்போகமாயிருப்பது ஆண் பெண் இணக்கம். அதை வென்றவனே யோகியாகிறான். யோகியாவதற்கு முன்பு பலதடவை அப்படுகுழியில் வீழ்ந்தே அவன் பாடம் கற்கிறான். போகத்தில் அவன் மயக்குறுவதற்குக் காரணமாயிருப்பது பெண்பாலைப் போகக் கருவியாகக் கருதுவதாம். விருப்பத்தினை நிறைவேற்றுகின்ற கவர்ச்சிகரமான கெண்டைமீன் போன்ற விழிகளையுடைய மாதர் ஆசையை வெஞ்சேல் என்னும் விழியார் வேட்கை என இக்கண்ணியில் விளக்கப்படுகிறது. அது நஞ்சுக்கு நிகர் என அஞ்சி அதனிடத்திருந்து விலகி ஓடுபவனே யோகத்திற்குத் தகுதியுடையவன் ஆகின்றான். அத்தகையவனை அஞ்சேல் எனும் கைகாட்டி அதாவது அபயகரத்தைக் காட்டி இறைவனார் உய்விக்கிறார். அவருடைய அருள் நோக்கத்துக்கு இலக்காகின்றவன் பாக்கியவான். இறைவனிடம் அடைக்கலம் புகுந்தவன் பிறகு மாயப்பிரபஞ்சத்தில் ஒருபொழுதும் அகப்பட்டுக்கொள்ளமாட்டான். அத்தகைய அச்சம் நீங்கிய நிலையைப் பெறுவது எந்நாளோ என்பது இக்கண்ணியின் கருத்து.

6. ஆறுசமயத்தும் அதுஅதுவாய் நின்று இலங்கும் வீறு பரைதிருத்தாள் மேவுநாள் எந்நாளோ.

வீறுபரைதிருத்தாள்-மேலான பராசக்தியின் திருவடி.

ஹிந்துமதம் என்று இயம்பப்படுகிற நம் நாட்டு வைதிகக்கோட்பாடுகள் இக்கண்ணியில் அற்புதமாக அமைந்திருக்கின்றன. இவ்வுலக சம்பந்தமான அனைத்தையும் விளக்குபவைகள் நான்கு வேதங்கள். அவ்வேதங்களில் உச்ச நிலையிலிருப்பவை உபநிஷதங்கள்: உபநிஷதங்களுக்கு வேதாந்தம் என்பது வேறொரு பெயர். மறை முடி என்றும் வேதத்தின் அந்தம் என்றும் உபநிஷதங்களை இயம்பலாம்: வேதாந்தம் என்னும் அடிமரத்தில் ஆறுகிளைகள் முளைத்து வந்துள்ளன. அந்த ஆறுகிளைகளும் முறையே சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணபத்யம், கௌமாரம், சௌரம் எனப் பெயர் பெறுகின்றன. மெய்ப்பொருள் ஒன்று; அதற்குப் பெயர்கள் பல. மெய்ப்பொருளாகிய பரப்பிரம்மம் சைவசமயத்தில் சிவபெருமான் என்னும் பெயர் பெறுகிறது. வைஷ்ணவத்தில் அப்பெரிய பொருளுக்கு மஹாவிஷ்ணு என்பது பெயர். சக்தி மதத்தில் அப்பொருளுக்குப் பராசக்தி என்பது பெயர். காணபத்தியத்தில் அதற்கு மஹா கணபதி என்பது பெயர். கௌமாரத்தில் குமரக்கடவுள் என்பது அதற்குப் பெயர். சௌரமதத்தில் அப்பொருளுக்குச் சூரியநாராயணன் என்பது பெயர். இவ்வுண்மையை அறிகிறவன் வீணாகச் சமயப் போரில் அகப்பட்டுக்கொள்ளமாட்டான் என்பது இக்கண்ணியின் கருத்து.

இயேசுவின் மலை உபதேச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

16. நீ நிறைவேற்ற வேண்டிய கடமைகளைத் தெய்வப் பணிவிடையாகச் செய்துவா. ஆணையிடுவதோ, சத்தியம் பண்ணுவதோ கூடாது என்று பண்டைக் காலத்துப் பெரியோர்கள் பகர்ந்துள்ளார்கள். அவர்கள் பகர்ந்ததையே நான் திரும்பவும வற்புறுத்திச் சொல்லுகின்றேன். ஆணையிடுவதன்மூலம் ஆணவம் வளர்கிறது; அஹங்காரம் அதிகரிக்கிறது. சிலர் ஆகாயத்தின்பேரில் சத்தியம் பண்ணுவார்கள். ஆகாயத்தின்பேரில் ஆணையிட்டுச் செய்து முடிப்பதாகக் கூறுவார்கள். யார் பார்க்காவிட்டாலும் ஆண்டவன் கவனிக்கிறான் என்பது அதற்குப் பொருள். அப்படி ஆணையிட்டவர்கள் செய்து முடிக்காவிட்டால் ஆண்டவன் கோபித்துக் கொள்ளமாட்டாரா? பூமி சாட்சியாக ஆணையிடுகிறேன் என்று ஒருவன் பகர்வான். அப்படிச் சபதம் கூறிவிட்டு ஒன்றும் செய்யாது மறைந்து போனவர்கட்கு இம்மண்ணுலகம் சாட்சியாக இருக்கிறது. பின்பு இந்த வீண் பேச்சு எதற்காக? புண்ணிய க்ஷேத்திரத்தின் பெயரால் ஒருவன் ஆணையிட்டுச் சொல்லுவான். கடவுளின் சாந்நித்தியத்துக்கு அப்புண்ணிய க்ஷேத்திரம் உறைவிடமாக இருக்கிறது. எனவே அப்புண்ணிய க்ஷேத்திரத்தின் மீது ஆணையிட்டவன் அவ்வாணையை நிறைவேற்றாவிட்டால் பொருளற்றவனாகப் போய்விடுவான்.

என்தலை போனாலும் என்சொல் பொய்போகாது என்று மற்றொருவன் ஆணையிடுகிறான். ஆனால் அவன் தன் தலைமுடியில் ஒன்றை நரைத்துப் போகும்படி செய்யவோ நரைத்துப் போன ரோமம் ஒன்றைக் கறுத்துப் போகும்படி செய்யவோ அவனுக்கு இயலாது. அப்படி இருந்தும் அவன் இறுமாப்புடன் சொல்லும் சொற்கள்தாம் என்னே!

ஆம் என்று சொல்லலாம். இல்லை என்று இயம்பலாம். இறைவன் திருவுள்ளப்படி நடக்கட்டும் என்று தெய்வத்தைச் சார்ந்திருக்கலாம். அதற்குமேல் ஆணையிடுவதோ, சபதம் பண்ணுவதோ, சத்தியம் செய்வதோ பொருளற்ற பேச்சுக்களாகின்றன. அப்பேச்சுக்கள் நம் பண்புக்குக் கேடு விளைவித்து விடும்.

சத்தியம் வேறு, கடவுள் வேறு அல்ல. சத்தியமே கடவுள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் சத்தியத்தைத் தவிர மற்ற எல்லாவற்றையும் அம்பிகையினிடத்தில்ஒப்படைத்துவிட்டார். "தாயே, நீ சத்தியமயமாக இருப்பதால் சத்தியத்தை நான் ஒப்படைக்க முடியவில்லை" என்று பகர்கிறார். தெய்வநம்பிக்கை மக்களுடைய உள்ளத்தில் ஆழ்ந்து இடம் பெற்றிருந்த காலத்தில் சத்தியத்துக்கு மக்கள் தலைவணங்கினார்கள். சத்தியம் செய்து கொடுத்த வாக்கை நிறைவேற்றியே தீருவார்கள். நிறைவேற்ற முடியாத செயலுக்கு நிறைவேற்றுவோம் என்று சத்தியம் செய்யமாட்டார்கள்.

இன்று கடவுள் நம்பிக்கை குன்றி வருகிறது. அதனால் நேர்மையிலும் சத்தியத்திலும் உள்ள நம்பிக்கை குன்றிப் போய்விட்டது. எத்தனை தடவை வேண்டுமென்றாலும் சத்தியம் செய்துதரத் தயாராக இருக்கிறார்கள். ஆணையிடுதல் அல்லது சத்தியம் பண்ணித்தருதல் இன்று மக்களிடையே சர்வசாதாரணமாகிவிட்டது. நேர்மையிலோ, கடவுள் பேரிலோ நம்பிக்கை இல்லாதவர்கள் சத்தியம் பண்ணுவதிலும், சத்தியம் செய்வதிலிருந்து பிறழ்ந்து போவதிலும் சிறிதும் தயங்கமாட்டார்கள்.

தங்களுக்குமேல் பெரிய சக்தி ஒன்று இருக்கிறது என்பதையும் அச்சக்தியைச் சத்தியம் என்று அழைக்கிறோம் என்பதையும் மறந்துவிட்டு ஆணவ அகங்காரமுடையவர்களாகச் சிறுபிள்ளைகள் போன்று நடந்துகொள்கிறார்கள். பேய் ஓட்டுவதற்கு மந்திரிக்கும் கடுகுக்குள் பேய் புகுந்துவிட்டால் வேறு ஒன்றும் செய்ய முடியாது. அதுபோன்று சத்தியத்தைக் காக்கும் நீதிமன்றத்திலேயே இன்றைக்குப் பொய்யும் புளுகும் புகுந்துவிட்டன. சத்தியத்துக்கு மதிப்புத் தராத வரையிலும் மக்கள் மேல்நிலையை அடையமுடியாது. சத்தியத்திலுள்ள நம்பிக்கைதான் மக்களைக் குற்றங்களில் இருந்து விடுவிக்கும்.சத்தியத்தில் நம்பிக்கை குன்றிப்போய்விட்டால் காவலில்லாத வீட்டுக்குள் திருடன் சுலபமாக நுழைந்துவிடுவதுபோன்று மக்களுடைய உள்ளத்தில் தவறு செய்கின்ற பான்மை புகுந்துவிடுகின்றது. நீதிமன்றமோ, நீதிபதிகளோ இதற்கு விமோசனம் காணமுடியாது. சத்தியத்தின்மீது நம்பிக்கை உடையவர்களாகவும், ஆணையிடுவதற்கு அஞ்சுபவர்களாகவும், நேர்மையைக் கடைப்பிடிப்ப

தற்கு உயிரைக் கொடுப்பவர்களாகவும் மக்கள் திருந்தி அமையவேண்டும்.

மனிதனுடைய செயல் நகைப்புக்குரியதாக இருக்கிறது. இரண்டு சமயங்களில் கடவுள் மனிதனைப் பார்த்துப் புன்னகை புரிகின்ருர். இரண்டு சகோதரர்கள் கையில் அளவுகோலை எடுத்துக்கொண்டு அவர்களுக்குரிய நிலத்தை அவர்களுக்கிடையில் பங்கு போடும்பொழுது ஒருவன் மற்றொருவனைப் பார்த்து இந்தப் பகுதி எனக்குச் சொந்தம், அந்தப் பகுதி உனக்குச் சொந்தம் என்று தீர்மானம் செய்வதைப் பார்த்துக் கடவுள் சிரிக்கின்ருர். அண்டமனைத்தும் தெய்வத்துக்குச் சொந்தம். தெய்வத்துக்குச் சொந்தமான ஒரு சிறு பகுதி மண்ணைத் தங்களுக்குச் சொந்தம் பாராட்டுவதைப் பார்த்துத் தெய்வம் நகைக்கின்ருர்.

இன்னொரு சமயத்திலும் கடவுள் நகைக்கின்ருர். மரணம் அடையப்போகும் நோயாளியைப் பார்த்து வைத்தியர் தாம் காப்பாற்றி விடுவதாகச் சொல்லுவதைக் கேட்கும்பொழுது கடவுள் நகைக்கின்ருர். உயிர் அழியவேண்டும் என்பது கடவுள் திட்டமாயின் அவ்வுயிரைக் காப்பாற்றுவதற்கு யாருக்கும் இயலாது. இவ்வுண்மையை அறிந்துகொள்ளாத வைத்தியர் தாம் காப்பாற்றி விடுவதாகச் சத்தியம் பண்ணுகின்ருர்.

ஒரு கறுப்பு ரோமத்தை வெள்ளை ரோமமாகவோ, வெள்ளை ரோமத்தைக் கறுப்பு ரோமமாகவோ மாற்ற முடியாது. மனிதன் அக்ஞானத்தால் அனைத்தையும் தான் செய்வதாக நினைக்கின்ருன். இறைவனுடைய சக்தியால் அனைத்தும் நிகழ்ந்துகொண்டிருக்க, தன்னுடைய சக்தியால் நிகழ்கின்றன என்று நினைக்கின்ருன். தான் எண்ணும் ஒவ்வொரு எண்ணத்துக்கும், செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் இறைவனிடமிருந்து சக்தி வருகிறதென்பதை மறந்த மனிதன் அஹங்காரத்தை வளர்க்க முயல்கின்ருன். இப்பிரபஞ்சத்தில் எதனிடத்தும் மனிதனுக்கு உரிமையில்லை. ஆனல் மனிதன் ஒவ்வொன்றையும் தனக்கு உரியதாக ஆக்க முயல்கின்ருன். அப்படி உரியதாக்குவேனென்று சபதமும் செய்கின்ருன். இதனல் அவன் ஆணவத்தையும், அஹங்காரத்தையும் வளர்ப்பவனுகின்ருன். ஆணவத்தையும் அஹங்காரத்தையும் வளர்க்கும்படியாக ஆணையிடுதல் வேண்டாமென்று இயேசுநாதர் எச்சரிக்கை செய்கின்ருர்.

அஹங்காரம் பிடித்த மனிதன் ஒவ்வொரு காரியத்தையும் தான் செய்வதாக நினைக்கின்ருன். லௌகீக புத்தி மனிதனை அப்படி நினைக்கச் செய்கின்றது. மனதைப் பண்படுத்தும் ஆத்ம சாதகன் அஹங்காரத்தை அழிக்க முயல்கின்ருன். மனதில் தெய்வீக உணர்வு ஓங்கி வருகின்றபொழுது இறைவன் இச்சையால் எல்லாம் நிகழ்ந்து வருகின்றன என்பது தெளிவாக விளங்குகின்றது. ஆகையால் தெய்வீக உணர்வு ஓங்கப்பெற்ற மனிதன், "நான் இதைச் செய்வேன்; நான் அதைச் செய்வேன்" என்று திட்டம் எதுவும் போடுவதில்லை. தெய்வாதீனமாகத் தனக்கு அமைந்த செயலைத் தெய்வத்தின் கையில் கருவியாக இருந்து செய்கின்ருன். அஹங்காரத்தைத் தெய்வத்தின் திருவடிகளில் சமர்ப்பித்துவிட்டால் கடவுள் இச்சைப்படி செயல்கள் நிகழ்வது விளங்கும். இறைவனுடைய சக்தி உயிர்கள் மூலமாக இயங்கி வருகிறது என்ற உண்மை ஆத்மானுபூதி அடைந்தவர்களுக்கு விளங்குகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்வதாவது: "தாயே! நான் யந்திரம், நீ யந்திரீ; நீ இயக்குகின்றபடி நான் இயங்குகின்றேன்." இங்ஙனம் உண்மையான பக்தன் ஒருவன் எண்ணுகின்ருன். வாழ்க்கையின் ஒவ்வொரு படித்தரத்திலும் இறைவன் வழிகாட்டிச் செல்லுகின்ருர் என்ற உண்மை பக்தனுக்குத் தெளிவாக விளங்குகிறது.

"நான் அல்லேன்; நான் அல்லேன். இறைவா, எல்லாம் நீயே" என்று உணர்வதுதான் சாந்திக்கு வழியாகும். அந்த உணர்வில் நாம் நிலைபெறுகின்ற அளவு அஹங்காரத்தைஅழித்தவர்களாகின்ருேம். அஹங்காரம் ஒழிகின்ற அளவு சாந்தி நிலவுகிறது.

தற்பெருமை கூடாது. தன்னைச் சிறுமைப்படுத்திக் கொள்ளவும் கூடாது. இறைவன் பெருமையை உணர்ந்து உள்ளதை உள்ளபடி ஏற்றுக்கொண்டு இறைவன் கையில் கருவியாக இருந்து காரியம் பண்ணும் மனநிலை வேண்டும் என்பது இயேசுநாதர் அருளிய இவ்வுபதேசத்தின் கருத்தாகும்.

நிலையாமையும் நிலைபேறும்

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலகத்துக்காக ஒருவன் உழைப்பானாகில் உலகம் அவனைக் காப்பாற்றுகிறது. பயன் எதையும் எதிர்பாராது பணிவிடை செய்கின்றவனுக்குப் பயன் அவனைத் தேடிக்கொண்டு வருகிறது. பயன் கருதிப் பணிவிடை செய்கின்றவன் பெறுகின்ற லாபத்தைவிடப் பயன் கருதாது பணிவிடை செய்கின்றவன் அதிக லாபம் பெறுகின்றான். தொழிலதிபர் ஒருவரிடத்தில் ஒருவன் வேலைகேட்க வந்தான். வேலைகேட்க வந்தவன் தனக்குத் தெரிந்த தொழிலைக் கூறி வேலை கொடுக்கும்படி கேட்டான். அத்தொழில் அதிபரும் அத்தொழிலுக்குத் தாம் ஒரு வேலைக்காரனை எதிர்பார்த்து இருந்ததாகக் கூறி அவனை அத்தொழிலில் அமர்த்தினார். "நீ மாதச் சம்பளம் என்ன கேட்கிறாய்?" என்று தொழில் அதிபர் வேலைக்காரனைக் கேட்டார். "நான் உங்களிடம் வேலை கேட்கத்தான் வந்தேன். சம்பளம் கொடுப்பது உங்களுடைய விருப்பம். என் வேலைத் திறமைக்கேற்ப சம்பளத்தை நீங்களே நிர்ணயுங்கள். நீங்கள் என்ன கொடுத்தாலும் நான் அதை ஏற்றுக்கொள்கிறேன்" என்றுகூறினான். இன்றைய சமுதாயத்தில் இத்தகைய மனப்பான்மை படைத்த வேலையாளைப் பார்ப்பது அரிது. வேலையில் அமர்ந்தான பிறகு தான் எடுத்துக்கொண்ட காரியத்தைச் சிரத்தையோடு செய்தான். அவன் வேலை செய்யும் விதத்தை இரண்டுநாட்கள் தொழிலதிபர் கவனித்துப் பார்த்தார். பின்னர் அவனைக் கவனிப்பது அவசியம் இல்லை என்று தீர்மானம் பண்ணினார். அவன் காரியத்தை அவன் ஒழுங்காகப் பண்ணுகின்றான். நம் காரியத்தை நாம் பார்ப்போம் என்று தொழில் அதிபர் தம் காரியத்தில் ஈடுபட்டார். இன்றைக்கு வேலையாளுடைய பாங்கு முதலாளியின் முன்னிலையில் வேலை செய்வதாகவும், முதலாளி இல்லாவிட்டால் ஏமாற்றுவதாகவும் இருக்கும். அந்த வேலைக்காரன் அப்படியல்லாது தான் எடுத்துக்கொண்ட வேலையைக் கிரமமாகச் செய்து வந்தான். மாதம் முடிந்ததும் சம்பளம் கொடுக்கவேண்டிய நாள் வந்தது. வேலைக்காரன் சம்பளத்தைப் பற்றி நினையாது வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்தான். தொழில் அதிபரே வேலைக்காரனை அழைத்து "என்ன சம்பளம் எதிர்பார்க்கிறாய்?" என்று கேட்டார். "நான் வேலைக்கு அமர்ந்தபோதே சம்பளம் நிர்ணயிப்பது உங்களுடைய பொறுப்பு என்றும், நீங்கள் கொடுப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்றும் கூறினேன். அதன்படி நீங்கள் கொடுப்பதைப் பெற்றுக்கொள்கிறேன்" என்றான். அத்தொழில் அதிபரிடம் கருமித்தனம் இருந்தது. அவர் மனதில் நூறு ரூபாய் போட்டுக்கொடுக்கலாம் என்று தோன்றியது. ஆனால் அவர் அவனுக்கு எழுபத்தைந்து ரூபாய் போட்டுத்தந்து தம் கருமித்தனத்தை வெளிப்படுத்தினார். இன்றைக்கு வேலை கொடுப்பவர், வேலை செய்பவர் இருவருடைய மனநிலைகளும் கீழே போய்விட்டன. வேலை கொடுப்பவர் குறைந்த சம்பளம் கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறார். வேலை செய்பவன் உயர்ந்த ஊதியம் பெற வேண்டும் என்று நினைக்கின்றான். ஆனால் இந்த வேலைக்காரனின் மனநிலை உயர்ந்த மனநிலையாக இருந்தது. அவர் போட்டுத்தந்த சம்பளத்தை மகிழ்வோடு வாங்கிக்கொண்டான். அவன்சம்பளம்கூட்டிக்கேட்பான் என்று தொழில் அதிபர் எதிர்பார்த்தார். ஆனால் அவன் ஒன்றும் பேசாமல் வாங்கிக்கொண்டு போய்விட்டான். மேலும் ஒரு மாதம் சென்றது. இரண்டாவது மாதம் சம்பளம் போடும் தேதி வந்தது. தொழில் அதிபர் எண்ணியதாவது: "சென்ற மாதம் எழுபத்தைந்து ரூபாய் போட்டுத் தந்தோம். அவன் பேசாது வாங்கிக் கொண்டு போய்விட்டான். இம்மாதம் இன்னும் ஐந்து ரூபாய் குறைத்துப் போட்டுத்தந்தால் வாங்கிக்கொள்வானா என்பதைப் பார்ப்போம்," என்று எண்ணி எழுபது ரூபாய் சம்பளம் போட்டுத்தந்தார். வேலைக்காரன் சம்பளத்தை வாங்கிக்கொண்டு போய்விட்டான். அவன் திரும்பி வந்து கேட்பான் என்று நான்கு நாட்கள் தொழில் அதிபர் எதிர்பார்த்தார். ஆனால் அவன் கடமையில் கண்

னும் கருத்துமாக இருந்தான். தான் வாங்கிய சம்பளத்தைப்பற்றி மனதில் எந்தச் சிந்தனைக் கும் இடம் தரவில்லை. வேலைக்காரனுடைய போக்கு தொழில் அதிபருடைய மனதையே மாற்றிவிட்டது. அவனுடைய நேர்மையான உழைப்பும் பயன்கருதாத மனப்பான்மையும் தொழில் அதிபருடைய உள்ளத்தைச் சிந்திக் கும்படி செய்தது. வஞ்சகமற்ற இந்த வேலை யாளுக்கு வஞ்சகம் பண்ணக்கூடாது என்று தொழில் அதிபர் நினைத்தார். உடனே அவனைக் கூப்பிட்டு " நீ சென்ற மாதம் எவ்வ ளவு சம்பளம் வாங்கினாய்?" என்று கேட்டார். எழுபத்தைந்து ரூபாய் சம்பளம் வாங்கினேன் என்று அவன் கூறினான். "இந்த மாதம் எவ் வளவு சம்பளம் வாங்கினாய்?" என்று அவர் கேட்டார். "எழுபது ரூபாய் சம்பளம் வாங்கி னேன்" என்று அவன் கூறினான். "ஐந்து ரூபாய் குறைந்திருப்பதை ஏன் கேட்கவில்லை?" என்று கேட்டார். "நான் வேலையில் அமரும்பொழுதே நீங்கள் போட்டுக்கொடுப்பதை ஏற்றுக்கொள் கிறேன் என்று கூறினேன் அதன்படி நான் வேலையைச் செய்வேன். நீங்கள் தருவதை ஏற் றுக் கொள்வேன்" என்றான் வேலைக்காரனின் மனப்பான்மையையும் நேர்மையையும் வேலைத் திறமையையும் பார்த்த தொழிலதிபர் அவனைத் தம் மகனாக ஏற்றுக்கொண்டு சொத்து முழுவதையும் அவனிடம் ஒப்படைத்தார். பயன்கருதாப் பணிவிடையின் பயன் அத் தகையதாம்.

பயன் கருதாப் பணிவிடையைப் பார்க்கும் மனிதர்களுடைய மனமே பணிவிடைக் கேற்ற பயன்தரத் தவறுவதில்லை என்றால் கடவுள் அதற்கு எத்தகைய சன்மானம் தரு வார் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண் டும். பயன் கருதாது கர்மத்தைத் திறமையாகச் செய்பவர்கள் மனதைக் கடவுள் உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்கின்றார். தெய்வப் பணிவிடையைச் செய்துகொண்டே இருக்க வேண்டும். என் கடன் பணிசெய்து கிடப் பதே என்ற கோட்பாட்டின்படி தெய்வப்பணி செய்து வரவேண்டும். அப்படி உண்மையாகத் தொண்டு செய்கின்றபொழுது இறைவனுக் குகந்த நல்ல பக்தன் ஆகவேண்டும் என்ற உணர்வு உண்டாகிறது. " உற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம் மற்றை நம் காமங்கள் மாற்று ஏல் ஓர் எம்பாவாய்" என்ற கோட்பாட்டின்படி இறைவனிடம் பக்தி இருந் தால்போதும் என்ற மனநிலை உண்டாகும். அப்பொழுது தெய்வம் அந்த மனநிலையை நிறைவு செய்து வைக்கின்றார்.

பயன் கருதாது பணிவிடை செய்கிறவர் களுக்குச் சித்தசுத்தி ஏற்படுகிறது. சுத்தி அடைந்த மனதில் ஞானம் தானாக உதயமா கின்றது. இன்றைக்கு ஞானம் பெறுவதற் காக வாழ்க்கையின் பெரும்பகுதியைக் கல்வி கற்பதில் கழிக்கின்றார்கள். கல்விக்காக என்று ஏராளமாகப் பொருள் செலவும் செய்கின்றார் கள். அப்படிக் கற்கின்ற கல்வியின் மூலம் ஞானம் உண்டாவதில்லை. இன்றைய கல்வி யைக் கற்கின்றவர்களிடம் அக்ஞானம்தான் வளர்ந்து வருகிறது. வெறும் நூல்களைப் படிப்பதால் ஞானம் வந்துவிடாது. தெய் வத்துக்குத் தொண்டு புரிகின்றவர்களுக்கு, உயர்ந்த லட்சியத்திற்குத் தொண்டு புரிகின்ற வர்களுக்கு, உயர்ந்த ஞானிகளுக்குத் தொண்டு புரிகின்றவர்களுக்கு, பரநலம் கருதி ஞானி கள் ஸ்தாபித்த இயக்கத்துக்குத் தொண்டு புரிகின்றவர்களுக்கு ஞானம் தானாகவந்து அமைகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய நேர் சிஷ்யர்களுள் ஸ்ரீமத் அத்புதானந்த சுவாமிகள் ஒருவராவார். அவர் பள்ளிக்கூட எல்லைக் குக்கூடச் செல்லவில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவருக்கு வங்காள மொழியில் அக்ஷரங்களைச் சொல்லித்தந்தார். ஆனால் அவர் வாயிலிருந்து உச்சரிப்புச் சரியாக வரவில்லை; அவருக்கு இளமையில் லாட்டு என்பது பெயர். அவர் சிறுவனாக இருந்தபோது சமையல்காரனாக இருந்து காய்கறி நறுக்கிக்கொடுத்து ஸ்ரீ ராம கிருஷ்ணருக்குத் தொண்டு புரிந்து வந்தார் பயன் கருதாது செய்த தொண்டின் விளைவாக அவருக்கு ஞானம் வந்து வாய்த்தது. பிற் காலத்தில் ஸ்ரீமத்அத்புதானந்த சுவாமிகள் என்ற பெயருடன் விவேகானந்தருக்குச் சம மாகக் கூறும்படி ஞானம் பெற்று விளங்கினார்.

சாரதாதேவியார் பள்ளிசென்று படிக்க வில்லை. ஆனால் பெற்றோர்களுக்கும், தற்கொண் டார்க்கும், பக்தர்களுக்கும் வாழ்வு முழுதும் அவர் பயன்கருதாது தொண்டு புரிந்தார்.

அத்தகைய தொண்டின் விளைவாக அவருக்கு ஞானம் வந்து வாய்த்தது. ஒரு தடவை ஸ்ரீ ராமகிருஷ்ணர் சாரதாதேவியாரைப் பார்த்துக் கேட்டதாவது: "உன்னுடைய விருப்பம் என்ன என்பதை நீ தாராளமாக வெளியிடலாம். அக்னி சாட்சியாக நான் உன்னை மணந்துகொண்டு இருக்கின்றேன். உன்னுடைய விருப்பத்தை நிறைவேற்ற நான் கடமைப்பட்டு இருக்கிறேன்." சாரதாதேவியார் அதற்குக் கூறிய பதிலாவது: "நான் உங்களுக்குத் தொண்டு செய்து நீங்கள் அடைந்துள்ள உயர்நிலையை நானும் அடைவதற்குத்தான் விருப்பம் கொண்டுள்ளேன்." இங்ஙனம் சாரதாதேவியார் தொண்டின் மூலம் தம் வாழ்க்கையை விளக்கியிருக்கின்றார்.

பொருள் நிலைக்காது; புகழ் நிலைக்காது; பதவி நிலைக்காது. இறைவனின் மீது உண்டாகும் ஆசை மனக்குறை ஆகாது. மனக்குறை உடையவர்களுக்கு இல்லை என்னும் குறை இருந்துகொண்டே இருக்கும். நிலைபேறுடைய ஞானம் வரும்பொழுது இல்லை என்னும் மனக்குறை நீங்கி விடுகிறது. "ஞானம் வந்தால் பின் நமக்கென்ன வேண்டும்?" என்று பாரதியார் பகர்கின்றார். ஞானம் வரும்பொழுது மனம் நிறைவு பெறுகிறது. மன நிறைவு உண்டாகின்றவர்களுக்கு எல்லாம் நிறை நிலையில் இருக்கின்றன. மனக்குறை உடையவர்களுக்கு இல்லை என்னும் குறை இருந்து கொண்டே இருக்கும். கர்ணனிடம் என்ன வரம் வேண்டும் என்று கேட்டபொழுது எத்தனை பிறப்புக்கள் எடுத்தாலும் அப்பிறப்புக்களில் எல்லாம் யார் வந்து கேட்டாலும் இல்லை என்று சொல்லாத மனப்பான்மையை வரமாகக் கேட்கின்றான்.

பொருள் இல்லை, மக்கள் இல்லை, சீர் சிறப்பு இல்லை என்கின்ற குறைகள் எல்லாம் மனதில் இல்லாது போவதற்கு மனம் இறைவன் திருவருளைப் பெறுதல் வேண்டும். திருவருளைப்பெறுகின்ற மனதுக்கு நிறைநிலை வந்து அமைகின்றது. உள்ளத்தில் தெய்வ சாந்நித்தியம் உண்டாகும்போது அதில் உள்ள குறைகள் நீங்குகின்றன. ஸ்ரீராமகிருஷ்ணருக்கு அம்பிகை சித்துக்களைக் காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளச் சொன்னாள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்ததாவது: "தாயே, நான் சித்துக்களைப் பெறுவேனேயானால் உன்னை மறக்கநேரிடும். உன்னைமறந்தால் என்மனதுக்குக் குறை நிலைவந்துவிடும். ஆகையால் சித்துக்கள்எனக்கு வேண்டாம். அவற்றைக் காட்டி நீ என்னை மயக்க வேண்டாம். நீதான் எனக்கு வேண்டும்." இங்ஙனம் கடவுள் பேறு ஒன்றையே வேண்டும் என்று விரும்புகின்றவர்களுடைய உள்ளம் குறைநிலையிலிருந்து விடுபட்டு நிறை நிலையையடைகிறது.

ஸ்ரீ விவேகானந்தருக்குக் குடும்பத்தில் உள்ள வறுமை ஒரு குறையாக இருந்தது. குடும்ப வறுமை போகுமாறு தமக்காக ஸ்ரீ ராமகிருஷ்ணர் அம்பிகையினிடம் பிரார்த்தனை பண்ண வேண்டும் என்று ஸ்ரீ விவேகானந்தர் விரும்பினார். விவேகானந்தரே அம்பிகையிடம் அப் பிரார்த்தனையைச் செய்யலாம் என்று ஸ்ரீ ராம கிருஷ்ணர் தெரிவித்தார். விவேகானந்தர் அம்பிகையின் சந்நிதிக்குச் சென்றார். அம்பிகையின் சந்நிதிக்குள் நுழைந்தபொழுது அவருடைய உள்ளத்தில் இருந்த குடும்ப வறுமையைப்பற்றிய எண்ணம் அகன்று போய்விட்டது. அவர் அம்பிகையினிடம் "தாயே, ஞானம், பக்தி, வைராக்கியத்தை எனக்குக் கொடு" என்று பிரார்த்தித்தார். இரண்டு முறை குடும்ப வறுமை போக வேண்டும் என்று அம்பிகையிடம் பிரார்த்தித்து வரச்சென்ற விவேகானந்தர் அதைப் பிரார்த்திக்காது ஞானம், பக்தி வேண்டும் என்று பிரார்த்தித்து வந்தார். மூன்றும் முறை குடும்ப வறுமைபோக வேண்டும் என்று பிரார்த்தித்து வர இராம கிருஷ்ணர் அவரை அம்பிகையிடம் அனுப்பி வைத்தார். "குடும்ப வறுமை போவதற்குப் பிரார்த்திக்க வேண்டும் என்பதை இம்முறை ஞாபகப்படுத்திக்கொண்டே செல்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்லி அனுப்பினார். ஸ்ரீ விவேகானந்தர் அடிக்கடி அதை ஞாபகப் படுத்திக்கொண்டே அம்பிகையின் சந்நிதிக் குள் நுழைந்தார். அம்பிகையின் சந்நிதிக் குப் போனதும் அந்த எண்ணம் கீழ்த்தரமானது என்பதை உணர்ந்தார். அப்பொழுது அவர் தம் மனதைப் பார்த்து, "அற்ப மனமே! இந்த அற்ப எண்ணம் உன்னிடத்து எங்கிருந்து வந்தது? அகிலாண்டநாயகியின்

இடத்தில் இதுபோன்ற பிரார்த்தனை செய்ய லாமா? ஞானம், பக்தி, வைராக்கியத்தை மட்டும் தாயிடம் கொடுக்கும்படி கேள்'' என்று மனதுக்குப் புத்திபுகட்டி ஞானம், பக்தி, வைராக்கியம் வேண்டும் என்ற பிரார்த் தனையை அழுத்தம் திருத்தமாகக் கேட்டு வந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்து குடும்ப வறுமை போகவேண்டும் என்ற அற்பப்பிரார்த் தனையை நான் செய்ய முடியாது என்று சொன் னார். ''உன்னால் செய்யமுடியாத பிரார்த் தனையை என்னை எப்படி அம்பிகையினிடம் செய்யச் சொல்லுகிறாய்?'' என்று ஸ்ரீராமகிருஷ் ணர் கேட்டார். மேலோர்கள் யாண்டும் நிறை நிலையில் இருந்து வருகின்றார்கள். உலகக் குறைகள் எதுவும் அவர்களுக்கு இல்லை.

தெய்வத்தை நாடிப் போகின்றவர்கள் உள் ளம் நிறைநிலை உடையதாக ஆகிவிடுகின்றது. ஆனால் உலகை நாடிப்போகின்றவர்களுக்குக் குறை நீங்குவதில்லை. உலகை நாடிப் போகிற வர்களுக்கு ஆசை வளர்ந்து கொண்டே வருவ தால், குறையும் வளர்ந்துகொண்டே வரு கிறது. ஒருவனுக்குக் குபேரசம்பத்து வந்து வாய்த்தாலும் போதும் என்ற உள்ளத் திருப்தி உண்டாவதில்லை. ரசவாதத்தைத் தெரிந்து உலோகங்களை எல்லாம் பொன்னாக்கு வதற்கு உபாயம் என்ன என்பதைக் கண்டு பிடிப்பதில் அவன் மனம் அலைந்து கொண்டு இருக்கும். நூறு வயதிற்குமேல் வாழ்ந்தவர் களும், இன்னும் சில ஆண்டுகளுக்கு வாழ்ந் திருக்க உபாயம் என்ன என்பதைத்தேடி அலை வார்கள். இங்ஙனம் உலகத்தவருடைய மனக் குறைக்கு முடிவில்லை. ஈசன் வேண்டுதல் வேண் டாமை இலான் ஆகின்றார். யாண்டும் அவர் நிறைநிலையில் இருக்கின்றார். கொழுந்து விட் டெரியும் தீயில் போடப்படும் விறகு தானே தீ மயமாவது போன்று ஈசனிடம் செலுத்தப் படும் உள்ளம் நிறைநிலை என்னும் பண்பைப் பெற்று விடுகிறது.

நாராயணப்பிராந்தன் என்னும் ஞானி ஒரு வர் இருந்தார். அவர் ஓரிடத்திலும் நிரந்தர மாகத் தங்குவதில்லை. மாலைப்பொழுது வரு கிறபொழுது எந்த இடத்தில் இருக்கிறாரோ அந்த இடத்தில் அக்னி மூட்டித் தியானத்தில் அமர்ந்து விடுவார். அவர் ஒருநாளும் தியானம் செய்யத் தவறமாட்டார். ஒருசமயம் அவர் ஒரு கிராமத்தருகில் உள்ள சுடுகாட்டின் பக்கம் போய்க்கொண்டிருந்த பொழுது மாலை நேரம் வந்து விட்டது. தியானத்தில் அமருவதற்கு அக்னி மூட்டவேண்டிய அவசியம் அன்று அவருக்கு இல்லாது போய் விட்டது. அன்று அச்சுடுகாட்டில் பிரேதம் ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அதற்குப் பக்கத்தில் போய்த் தியானத்தில் அமர்ந்து கொண்டார். நள் ளிரவில் அம்பிகை சம்ஹாரத் தாண்டவம் நிகழ்த்துவதற்கு நாராயணப்பிராந்தனை அப் புறப்படுத்த வேண்டி இருந்தது. எனவே அம்பிகை தன் பூத கணங்களைஏவி நாராயணப் பிராந்தனை அப்புறப்படுத்த முயன்றாள். நாரா யணப்பிராந்தனைச் சுற்றி இருந்த அருள் வட்டத் திற்குப் பக்கத்தில் அப்பூதகணங்கள் செல்ல இயலவில்லை. அப்பூதகணங்கள் திரும்பி வந்து 'தாயே, அம்மகானிடத்தில் நாங்கள் நெருங்க முடியவில்லை' என்று சொல்லிப் போய்விட்டன. அம்பிகை தானே அவருடைய மனநிலையைச் சோதிப்பதற்கு விரும்பினாள். அவர் இருக்கு மிடத்திற்கு அம்பிகை வந்து சேர்ந்தாள். அம்பி கைக்கும், அவருக்கும் இடையில் நிகழ்ந்த சம்பாஷணையாவது:

அம்பிகை: "அங்கே தியானம் பண்ணுவது யார்?"

நாராயணப்பிராந்தன் : (கண்விழித்துப் பார்த்து) "நான்தான் தியானம் பண்ணுகின் றேன்."

அம்பிகை: "நான் இங்குச் சம்ஹாரத் தாண்ட வம் நிகழ்த்த வேண்டும். அப்பொழுது நரர் யாரும் இருக்கக் கூடாது. ஆகையால் நீ எழுந்து அப்பால் சென்றுவிடு."

நாராயணப்பிராந்தன்: "இப்பரந்த பிரபஞ் சத்தில் நான் தியானம் பண்ணும் இடம்தான் உனக்குச் சம்ஹார தாண்டவம் நிகழ்த்துவதற் குத் தேவைப்படுகிறதா? சற்றுத் தள்ளிப்போய் உன் சம்ஹார தாண்டவத்தை நிகழ்த்து."

இதைக் கேட்டதும் அவருடைய மனப் பாங்கை அறிந்துகொள்வதற்குப் பயங்கர வடி வங்கள் பலவற்றை அம்பிகை தோற்றுவித் தாள். அம்பிகையின் பயங்கர வடிவங்களைப் பார்த்து அவர் சிறிதும் அஞ்சவில்லை. "இவ் வளவுதானா உன்னுடைய கோர சொரூபம்!

இன்னும் உன்னிடம் பயங்கர வடிவங்கள் இருந்தால் அவற்றையும் காட்டு"என்றார் நாராயணப்பிராந்தன். அவருடைய உள்ளத்தை மயக்குவதற்கு அம்பிகை சுந்தர வடிவங்கள் பலவற்றைத் தோற்றுவித்தாள். அவ் அழகான வடிவங்களில் அவர் மயங்காது அவ் அழகை ரசிக்க ஆரம்பித்தார். "உன் தோற்றம் மிகவும் நன்றாக இருக்கிறது. உன்னுடைய அழகு இவ்வளவு தானா! இன்னும் எத்தகைய அழகை நீ காட்ட முடியும்! அதையும் காட்டு. நான் பார்த்து ரசிக்கிறேன்" என்றார் நாராயணப்பிராந்தன். அம்பிகையின் கோர வடிவங்களைக் கண்டு நாராயணப்பிராந்தன் சிறிதும் அஞ்சவில்லை. அம்பிகையின் கட்டழகைக் கண்டு அவருடைய உள்ளத்தில் சிறிதும் காமம் எழவில்லை. அச்சத்தையும், காமத்தையும் அவர் அறவே வென்றவராக இருந்தார். அச்சத்தையும், காமத்தையும் வென்றவர்களுக்கு அம்பிகை தன் தரிசனத்தைக் காட்டுகின்றாள். எனவே நாராயணப்பிராந்தனுக்கு அம்பிகையின் தரிசனம் கிடைத்தது. அம்பிகை அவருக்குத் தரிசனங்கொடுத்துத் தன் காட்சியை மறைப்பதற்கு முன்பு வரம் தருவதற்கு விரும்பினாள். நாராயணப்பிராந்தன் தமக்கு எந்த வரமும் வேண்டாமென்று கூறினார். வரம்கொடுக்காது காட்சியை மறைக்க முடியாது. ஆகையால், வரமொன்று கேட்டு வாங்கிக்கொள்ள வேண்டுமென்று அம்பிகை நாராயணப் பிராந்தனை வற்புறுத்தினாள். வரம் கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்றால் வலக்காலிலுள்ள விக்கத்தை இடக்காலில் மாற்றிவை என்று நாராயணப் பிராந்தன் கேட்டார். நாராயணப் பிராந்தன் நிறை நிலையில் இருந்தமையால் அவருக்கு ஒன்றும் தேவைப்படவில்லை. நிறைநிலை மனதுதான் குறையைப் போக்கக் கூடியது: உலக சம்பத்துக்களை எவ்வளவு பெற்றாலும் குறைநிலை உள்ளத்தை விட்டுப் போகாது.

கடவுள் கற்பதரு ஆகிறார். மனத் தூய்மையோடு நாம் விண்ணப்பிப்பதைக் கடவுள் நிறைவேற்றி வைக்கின்றார். அசுர சம்பத்து உடையவர்கள் கடவுளிடம் தங்கள் ஆசையை நிறைவேற்றிக் கொள்ளுகின்ற பாங்கில் வரம் கேட்கின்றார்கள். கடவுள் அவ்வரங்களை நிறைவேற்றி வைக்கின்றார். அவர்கள் கேட்கின்ற வரங்களின் மூலம் தங்களுக்குத் தாங்களே அழிவைத் தேடிக்கொள்கின்றார்கள். தெய்வச் சம்பத்து உடையவர்கள் தங்கள் விருப்பத்துக்கு இடம் தருவதில்லை. தங்களுக்கு நல்லது எது என்பதைத் தாங்கள் அறிவதை விடத் தெய்வம் நன்கு அறிகிறார் என்பதை அவர்கள் அறிந்து தெய்வத்திடம் தங்களுக்கு மாறாத பக்திவேண்டும் என்பதைப் பிரார்த்தனையாகச் செய்கின்றார்கள். இங்ஙனம் தெய்வத்திடம் நம்மை ஒப்படைத்துத் தெய்வ பக்தியை வளர்த்து வருவது நம்முடைய குறைகளைப் போக்குவதற்கு உபாயமாகும். நம்முடைய தேவைகளைப் பெருக்கிக் கொண்டே போவது நம் குறைகளை மேலும் வளர்த்துக் கொண்டே போவதாகும். நம் தேவைகளைக் குறைத்து மனதை உயர்ந்த லட்சியத்தில் செலுத்தும் பொழுது மனம் நிறை நிலையை அடைகிறது.

மனதை நிறைநிலை ஆக்குவது நம்முடைய குறிக்கோள். மனம் நிறைநிலை அடையும் வரையில் நாம் தொண்டு செய்யவேண்டும். தெய்வத்துக்கும், சான்றோர்களுக்கும், நல்லியக்கத்துக்கும் மனம், வாக்கு, காயத்தால் தியாகபுத்தியோடு தொண்டு செய்து வருவோமேயானால் அது சிறந்த சாதனையாகிறது. செயல். மூலம் தான் செயலற்ற நிலைக்குப்போகமுடியும். ஆரம்பத்திலேயே செயலற்ற நிலையை அடைந்து விடமுடியாது. தொண்டும், வைராக்கியமும் நம் உள்ளத்தை நன்கு பண்படுத்துகின்றன. உள்ளத்திலுள்ள சிற்றின்ப உணர்ச்சிகள் எல்லாம் தொண்டின் மூலமாகவும், வைராக்கியத்தின் மூலமாகவும் அகற்றப்படுகின்றன. மனம் அப்பொழுது நிறைநிலையை அடைகிறது. நிறைநிலை அடைந்த மனது தெய்வக்காட்சியைக் காண்கிறது. தெய்வக்காட்சிதான் நிலையான பேறு ஆகிறது. உலக சம்பத்துக்கள் நிலையற்றவை ஆகின்றன. நிலையற்றவைகளைத் தியாகம் செய்யவும் நிலையானதைப் பற்றிப் பிடித்துக்கொள்ளவும் நாம் முயல்வோமாக! நிலையானதைப் பற்றிப் பிடிக்கும் அளவு நாம் நிறைநிலை அடைகின்றோம். நிறைநிலையும் நிராசையும் ஒன்றே. நிராசையே தெய்வமாகும். நிலையற்ற உலகை ஒதுக்கிவிட்டுநிலையானதெய்வத்தைப் பற்றிக்கொள்வோமாக. (முற்றும்)

உள்ளே கேளுங்கள்

(9–1–81 அன்று திருச்சி வானொலி நிலையத்தில் ஒலிபரப்பப்பட்ட ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகளின் உரை)

அகம் புறம் என்ற இரு உலகங்கள் இருக்கின்றன. புறவுலகை அறிந்து கொள்வதற்கு மனமும் ஐம்பொறிகளும் உதவுகின்றன. மனதையும் ஐம்பொறிகளையும் கொண்டு நாம் புறவுலகை அனுபவித்து வருகிறோம். ஒரு பொறி கெட்டுப் போய்விட்டாலும் ஐந்தில் ஒரு பங்கு உலக அனுபவம் உங்களுக்குக் குன்றிப்போய் விடும். பொறிகளையும் மனதையும் புறவுலகில் முறையாகச் செலுத்துகின்றவர்கள் புறவுலகை அறிந்தும் அனுபவித்தும் வருகின்றார்கள். நீங்கள் மனதை முறைதவறிப் புறவுலகில் செலுத்துவீர்களானால் துன்பத்தை வரவழைத்துக் கொள்வீர்கள். நீங்கள் படும் துன்ப துயரங்களுக்கெல்லாம் மனதைப் புறவுலகில் முறைதவறிக் கையாளுவதே காரணம் ஆகும். நாம் பல பிறப்புக்கள் எடுத்திருக்கின்றோம். அப்பிறப்புக்களிலெல்லாம் நம் மனது புறவுலகின்பால் ஈர்க்கப்பட்டு வந்துள்ளது. நம் மனம் பல பிறப்புக்களில் புறவுலகின்பால் சென்று பயிற்சி பெற்றுள்ளது. எனவே அதைப் புறவுலகின்பால் செலுத்துவது நமக்குச் சுலபம். மானுடப் பிறப்பு எடுக்கும் வரையில் நாம் மனதைப் புறவுலகின்பால் செலுத்துவதன் மூலம் முன்னேற்றம் அடைந்து வந்திருக்கின்றோம். இனிமேல் நமக்கு மனதை உள்ளே செலுத்துவதன் மூலம்தான் முன்னேற்றம் ஏற்படவேண்டும். ஒடுங்கிக் கிடந்த மனது புறவுலகில் செலுத்தப்பட்டதின் மூலம் விரிவடைந்து வந்திருக்கின்றது. இதுவரையிலும் நாம் அறிவைப் பெறுவதற்குப் புறவுலகை நாடிச் சென்றோம். அஃதே போன்று நாம் இன்பத்தைப் பெறுவதற்கும் புறவுலகை நாடிச் சென்றோம். "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" என்று சொல்லப்பட்டிருக்கிறது. புறவுலகில் பெறுகின்ற அறிவுக்கு முடிவில்லை. புறவுலக அறிவு நமக்கு ஏற்படுவதற்கேற்ப மேலும் அறிய வேண்டிய பகுதி ஏராளமாக இருக்கிறது என்ற உண்மை நமக்கு விளங்குகிறது. இனி, புறவுலகில் நாம் தேடிச்செல்லும் இன்பத்திற்கும் ஒரு குறைபாடு இருக்கிறது. தினையளவு இன்பத்தைப் பெறப் பனையளவு துன்பத்தை நாம் அனுபவித்தாக வேண்டும். துன்பம் கலவாத இன்பத்தை நாம் இவ்வுலகத்தில் ஒருபோதும் பெற முடியாது.

புறத்தே மனதைச் செலுத்திப் புறவுலகை அறிந்து வந்த நீங்கள் உங்கள் அக உலகையும் அறிய வேண்டாமா? அக உலகை அறிந்து கொள்வதற்கு உள்ளத்தை உள்ளே செலுத்துங்கள். மனதை உள்ளே செலுத்துவதற்கு ஏகாந்தம் பொருத்தமான சூழ்நிலையாகும். தனிமையில் இருக்கும்பொழுதுதான் நம்முடைய உண்மையான இயல்பு வெளியாகும். ஏகாந்தத்தில் இனிமை காண்பவர்கள் தூய மனம் படைத்தவர்கள் ஆகிறார்கள். 'கண்மூடி மௌனி ஆகித் தனியே இருப்பதற்கு எண்ணினேன்' என்று தாயுமானவர் தம் விருப்பத்தை வெளியிட்டுள்ளார். எனவே தூய மனம் படைத்தவர்கள் தனிமையில் இனிமை காண்கிறார்கள். மனத்தூய்மை இல்லாதவர்கள் ஏகாந்தத்தில் இனிமை காணமுடியாது. ஏகாந்தத்தில் இருந்துகொண்டு உங்கள் உள்ளத்தில் என்ன இருக்கிறது என்பதை ஆராய்ந்து பாருங்கள். காமம், குரோதம், பொறாமை முதலிய கொடிய இயல்புகள் உள்ளத்தில் இருக்குமானால் அப்பொழுது அவை வெளிப்பட்டுவிடும். உங்கள் உள்ளம் அப்புல்லியல்புகளிலிருந்து விடுபட்டிருக்குமானால் ஆங்குத் தெய்வம் திகழ்வதைக் காண்பீர்கள். உள்ளிருக்கும் தெய்வம் உங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டிக்கொண்டு இருப்பதை அறிவீர்கள்.

மஹாத்மா காந்தியடிகள் நெருக்கடியான பிரச்னை ஏற்படும்போது புறவுலகில் யாருடைய யோசனையையும் கேட்கமாட்டார். அவர் தனிமைக்குச் சென்று அகங்காரத்தை அகற்றிவிட்டுப் பிரச்னைக்கு என்ன வழி என்பதைத் தம் உள்ளத்தையே கேட்பார். இந்த வழியில் போனால் பிரச்னை தீர்ந்துவிடும் என்று உள்ளே விடை கிடைக்கும். அவர் தம் உள்ளம்

காட்டித் தந்த வழியில் செல்வார். பிரச்னை தீர்ந்து காரியம் வெற்றிகரமாக முடியும்.

போகத்தையும் புகழையும் நாடிச் செல்பவர்கள் புறவுலகை நம்பி இருக்கின்றார்கள். வாழ்க்கையில் பிரச்னை ஏற்படும் போது அப்பிரச்னையைத் தீர்ப்பதற்குப் புறவுலகில் யார் அகப்படுவார்கள் என்று தேடியலைகின்றார்கள். அதற்குப் பதிலாக உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி பிரச்னையைத் தீர்ப்பதற்குரிய வழியை உள்ளத்தையே கேட்கவேண்டும். அப்படிக் கேட்பார்களானால் உள்ளம் சரியான வழியைக் காட்டித் தரும்.

மனம் போல வாழ்வு அமைகிறது. உள்ளத்தின் பான்மைக்கேற்ப நமக்கு உலகக் காட்சி அமைந்திருக்கின்றது. உலகத்தில் தென்படும் துன்ப துயரங்களுக்கு யார் காரணம் என்று நம் உள்ளத்தைக் கேட்கவேண்டும். அத்துன்ப துயரங்களுக்கு நாம் தாம் காரணம் என்று நம் உள்ளம் சொல்லும். ஜபம் தியானங்களின் மூலமாகவும், தன்னலமற்ற பணிவிடையின் மூலமாகவும் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துங்கள். தூய உள்ளம் உங்களுக்கு அரிய பெரிய விஷயங்களைப் புகட்டும். மனதைக் காது என்ற பொறியின் மூலம் சம்பந்தப்படுத்திப் புற உலகப் பேச்சைக் கேட்டுப் பழகி இருக்கிறீர்கள். உள்ளத்தைத் தூய்மைப் படுத்தி மனதை உள்ளே செலுத்தினால் பாரமார்த்திக விஷயங்களை உங்கள் உள்ளமே உங்களுக்குப் புகட்டும்.

சுவாமி விவேகானந்தர் இரவில் படுத்து உறங்கும்போது தம் உள்ளத்தில் யாரோ பேசுவதைக் கேட்பார். அவர் கேட்ட விஷயங்களெல்லாம் பாரமார்த்திக விஷயங்களாக இருந்தன. அப்படி அவர் தாம் கேட்டவற்றை அடுத்த நாள் தம் சொற்பொழிவில் பேசுவார். அவர் ஒவ்வொரு நாளும் அற்புதமான புதுப் புது விஷயங்களைப் பேசுவதாக மக்கள் உணர்ந்தார்கள். வேதங்களை வெளியிட்ட ரிஷிகளும் தம்மைப் போன்று அவர்களுடைய உள்ளத்திலிருந்துதான் வேதாந்த தத்துவங்களைக் கேட்டிருப்பார்கள் என்று விவேகானந்தர் எண்ணினார். பண்டைக்கால ரிஷிகள் யாரும் பள்ளி சென்று கற்கவில்லை. தவத்தின்மூலம் தங்களுடைய உள்ளங்களைத் தூய்மைப்படுத்தினார்கள். தூய்மையான உள்ளம் பெற்ற அவர்கள் தங்களுடைய உள்ளங்களில் அரிய பெரிய விஷயங்களைக் கேட்டார்கள். அப்படிக்கேட்ட விஷயங்களை நூல்களாக எழுதி வைத்துள்ளார்கள். கொலையும், கொள்ளையும் செய்து வந்த திருடன் ஒருவன் தேவரிஷி நாரதரால் திருத்தி அமைக்கப்பட்டான். நாரதர் "ராமா" என்னும் மந்திரத்தை ஜபிக்கும்படி அவனுக்கு உபதேசம் பண்ணினார். ஆனால் அவனுக்கு அந்த மந்திரத்தை 'மரா' என்றுதான் உச்சரிக்க முடிந்தது. 'மரா' என்ற உச்சரிப்பு நாளடைவில் 'ராம' என்று மாறிவிட்டது. ராம நாம உச்சரிப்பில் அவன் ஆழ்ந்து ஈடுபட்டான். அவ்வுச்சாரணையில் அவன் உள்ளம் அந்தர்முகப்பட்டது. புற்று ஒன்று கிளம்பி அவன் உடலை மூடிவிட்டது. அந்தர்முகப்பட்டிருந்த அவனுக்குப் புற்று மூடினது தெரியவில்லை. புற்றின்கண் இருந்து 'ராம' நாமத்தை ஓதி முற்றிலும் பக்குவப்பட்டு ரிஷியாக மாறிவிட்டார். புற்றின்கண் இருந்து பக்குவப்பட்டமையால் அப்பெரியாருக்கு வால்மீகி என்னும் பெயர் வந்தது. ஸ்ரீ ராமனுடைய பூலோக வரலாறு முழுவதும் அவர் உள்ளத்தில் உதயமாயிற்று. அவர் உள்ளத்திலிருந்து கேட்ட விஷயத்தை ராமாயணம் என்னும் தெய்வீக நூலாக அமைத்தார். உள்ளம் இறைவன் உறைகின்ற பெருங்கோயிலாகவும், ஊனுடம்பு ஆலயமாகவும் இருப்பதைத் திருமூலர் கண்டார். ஆகையால் அவர் "உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று, உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேன்" என்று பகர்ந்துள்ளார். நீங்களும் உங்கள் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி அதை உள்முகமாகத் திருப்புவீர்களானால் உள்ளே தெய்வீக விஷயங்களைக் கேட்பீர்கள். புற உலகை நாடிச் சென்று புற உலக விஷயங்களைக் கேட்டு மனித நிலையை அடைந்துள்ளோம். இனி, உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி உள்ளே சென்று தெய்வீக விஷயங்களைக் கேட்டுத் தெய்வீகம் நிறைந்தவர்களாக ஆவோமாக. உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி உள்ளே சென்றால் தெய்வீக விஷயங்களைக் கேட்கலாம் என்ற உண்மையை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

அனுமன் கண்ட சீதை

(திரு K. ராமமூர்த்தி M. Com)

15. செல்லும் நெறியறியாத நீசன்

பறவையிடமும் பரமனிடமும் ராவணன் தோற்ற கதையைச் சொன்ன சீதை, இப்போது அவன் மனிதனிடம் அடிபட்டுச் சிறைப்பட்ட வரலாற்றையும் நினைவூட்டுகின்றாள் அவனிடம்.

''செல்லும் நெறி அறியாத சிறுமைப் புத்தியுடைய நீசனே! மூவர்க்கும் முதலானவன் ராமன் என்று நான் சொல்வதில் நம்பிக்கை கொள்ளாமல் ராமனைக் கேவலம் மனிதன் தானே என்று நீ கருதினையானால் இதனைச் சிறிது சிந்தித்துப்பார். மூவரையும் வென்று மூவுலகையும் ஆட்சி செய்த நீ கார்த்தவீரியார்ச்சுனனிடம் தோற்றுப்போனதை மூவுலகமும் அறியும். காடுகளில் வளர்ந்துள்ள மூங்கில் புதர் போன்று ஆயிரம் கைகளுடைய கார்த்தவீரியன் உன்னுடைய இருபது கைகளையும் பற்றிக்கொண்டு, உன் வாயிலிருந்து ரத்தம் ஒழுகும்படி குத்தி, வென்று, உன்னைச் சிறையிலடைத்ததை மறந்துவிட்டாயா என்ன? அந்தக் கார்த்தவீரியனின் ஆயிரம் கைகளையும் தன் கோடாலிப் படையால் வெட்டி வீழ்த்தி அவனை வெற்றி கொண்ட பரசுராமன் என் ராமனிடம் பட்ட பாட்டினை நீ அறியாயோ? அப்படிப் பட்ட ராமபிரானைப் பகைத்துக்கொண்ட உனக்கு ஏற்படப்போகும் முடிவுபற்றிச் சிறிதும் சந்தேகமே இல்லை. இதனை உணராமல் என்னைச் சிறையெடுத்த உன் சிற்றறிவை என்னென்பேன்!

"ஆயிரம் தடக்கையால் நின் ஐந்நான்கு கரமும்பற்றி
வாய்வழிக் குருதி சோரக் குத்தி, வான்சிறையில் [வைத்த,
தூயவன் வயிரத் தோள்கள் துணித்தவன் [தொலைந்த மாற்றம்
நீ அறிந்திலையோ? ஏகும் நெறி அறிந்திலாத நீசா!"

—சுந்தர. நிந்தனைப் படலம் 58.

[ஐந்நான்கு கரம்-இருபது கைகள்; குருதி-ரத்தம்; தூயவன்-கார்த்தவீரியன்; துணித்தவன்-வெட்டியவன்; பரசுராமன் தொலைந்த மாற்றம்-கர்வம் அடங்கி ஒடுங்கிய செய்தி]

கார்த்தவீரியனை இங்குச் சீதை 'தூயவன்' என்று குறிப்பிடுவதற்குக் காரணம், அவன் தனக்குக் கேடு செய்த ராவணனை வென்ற வீரன் என்பதால்தான். கார்த்தவீரியனின் பெயரைக் கேட்டாலே ராவணனுக்கு நடுக்கம் தான். தன்னுடைய பிரபாவம் எல்லாம் அவன் முன் அடங்கிப்போய்விட்டதே யென்று வெட்கப்படுவான். அதனைக் குறித்து யாராவது அவனிடம் பேசினல் அவனுக்கு அடங்காத கோபம் வந்துவிடும். ஆரண்யகாண்டத்தில் ராவண சந்நியாசி சீதையிடம் இலங்கேசுவரனின் வீரத்தைப்பற்றிப் புகழ்ந்தபோது சீதை கார்த்தவீரியனிடம் ராவணன் தோற்ற கதையையும் பரசுராமனின் கர்வபங்கத்தையும் குறிப்பிட்டபோது ராவணனுக்கு ஏற்பட்ட கோபத்தில் அவன் போட்ட வஞ்சக வேடம் மறைந்துபோயிற்று. இதனை நன்கு கவனித்திருந்த சீதை ராவணனுடைய பலவீனத்தைப் பறைசாற்றும் கார்த்தவீரியன் கதையைச் சொல்லி அவனை நிலைகுலையும்படி செய்கின்றாள் இப்போது.

16. பிராமணை நயந்த பெரும் பாவி

மனிதனிடம் ராவணன் தோற்றதைச் சுட்டிக் காட்டிய சீதை, இலங்காதிபதியைவிட வர பலத்திலும் உடல் பலத்திலும் மன உறுதியிலும் ஓங்கியிருந்த இரணியன் அழிந்த கதையை எடுத்துக்கூறி அவனை இடித்துரைக்கின்றாள்.

''ராமனுக்குத் துணையாக இலக்குவன் ஒருவன்தானே இருக்கின்றான்; இந்த இருவர் மட்டும் என்னை எப்படி விடுவிக்க முடியும் என்று எண்ணுகின்றாய் போலும்! ராமன் தனியாக நின்று வில் ஒன்றினல் கடிகை மூன்றில் உன் தம்பியர் கர தூடணரையும் உடன் வந்த பதினாலாயிரம் அரக்கரையும் அழித்ததை மறந்துவிடாதே! 'கூட்டு ஒருவரையும் வேண்டாத கொற்றவன்' ராமன். 'யாவராலும் மூட்டாத காலக் கடைத்தீ' என முனைந்து செயலாற்றுபவன் இலக்குவன். ஊழிக் காலத்தில் உலகங்களை அழிக்க ராமன் ஒருவனே போதும்; உன்னை அழிப்பதற்கு என்ன தடை இருக்க முடியும்? உனக்கு முன் தோன்றிய, உன்னைவிடச் சீரும் சிறப்பும் செருக்கும் வரபலமும் கொண்ட இரண்யாட்சன், இரண்யகசிபு

முதலிய அசுரர் தலைவர்கள் அறவழியிலிருந்து மாறுபட்டு அதர்மத்தை வழிக்கொண்டிருந்து அழிந்தவர்கள்தாம். ஆனால் அவர்கள்கூடப் பிறர் மனைவியைக் கவரும் பெரும் பாதகத்தைச் செய்தார்களில்லை. எல்லையற்ற வரபலம் பெற்றிருந்தும் அறநெறி துறந்த அவ் அசுரர்கள் அழிந்தார்கள். அந்த அளவு வரபலமும் உன்னிடம் இல்லை; அதே சமயம் அவர்கள் செய்யாத பிறர்மனை விழையும் பெரும்பாபத்தையும் நீ செய்திருக்கின்றாய்; எனவே அழிவுப்பாதையில் நீ வெகுவேகமாகப் போய்க்கொண்டிருக்கின்றாய் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை."

இரணியன் முதலிய அசுரர்கள் பற்றிய சீதையின் கணிப்பு மிகப் பொருத்தமானதாக இருக்கின்றது. வரபலத்தில் ராவணனை விடப் பன்மடங்கு உயர்ந்தவன் இரணியன். மனிதனிடமும் குரங்கிடமும் ராவணன் தோற்றது உண்டு. ஆனால் இரணியன் வாழ்வில் தோல்வி என்பதே இல்லை; மேலும், ராவணனைப் போன்று பிறர் மனைவியைக் கவர அவன் நினைத்ததேயில்லை. ஏன், தன் உரிமைப் பெண்களிடமே கூடத் தன் பெருமைக்குக் குறைவு வருமாறு அவன் நடந்து கொண்டதே இல்லை. எந்த மனிதரின் தாக்குதலிலிருந்து தனக்கு அபாயம் வரக்கூடாதென்று வரம் கேட்பதே இழிவு என்று கருதினானோ, அந்த மனிதனின் மனைவியின் காலடியில் விழுந்து வணங்கிக் காதல் பிச்சை கேட்ட காமுகன் ராவணன். ஆனால் தன் உரிமை மனைவியிடம் கூடத் தாழ்ந்து வணங்காத வீரன் இரணியன். பிரகலாதனின் பிரார்த்தனைக்கு ஏற்ப நரசிம்மம் தோன்றித் தன் படைகளை வதம் செய்வதைப் பார்த்தும் கூட இரணியன் மனம் தளரவில்லை. தன் தந்தையைக் காப்பாற்றும் கடைசி முயற்சியாகப் பிரகலாதன் இரணியனிடம்,

> "வன் தொழில் ஆழிவேந்தனை வணங்குங்கள் !
> வணங்கினால் உம்முடைய புன் தொழில்
> [பொறுப்பன் !"

என்று வேண்டிக்கொள்கின்றான். தன் எதிரியான நரசிம்மத்தைத் தான் வணங்கவேண்டும் என்று தன்னிடம் கேட்டுக்கொண்ட தன்மகன் பிரகலாதனுக்கு இரணியன் கூறிய பதில் வீரத்திற்கு இலக்கணம் வகுத்தது போன்றதாகும்:—

> "கேள் இது ! நீயும் காணக்,
> கிளர்ந்த கோள் அரியின் கேழ்இல்
> தோளொடு தாளும் நீக்கி,
> நின்னையும் துணித்து, பின், என்
> வாளினைத் தொழுவது அல்லால்,
> வணங்குதல் மகளிர் ஊடல்
> நாவினும் உளதோ ?" என்று,
> அண்டங்கள் நடுங்க நக்கான் "

—யுத்த, இரணியன் வதைப் படலம். 146.

[கிளர்ந்த கோள் அரி—ஓங்கி எழுந்த வலிமை பொருந்திய சிங்கம்; நக்கான் — சிரித்தான்; கேழ் இல் தோள்—ஒப்பற்ற தோள்.]

இரணியனையும் இராவணனையும் ஒப்பிட்டு இருவரிலும் இராவணன் வரபலம், உடல் பலம் குறைந்தவனென்பதையும், அத்துடன் பிறர் மனை நயக்கும் பெரும் பழிக்கு உள்ளானவன் என்றும் எடுத்துக்காட்டி, இரணியனே அழிந்தானென்றால் இராவணன் அழிவு நிச்சயம் என்றும் அறிவுறுத்துகின்றாள் ஜானகி.

17. தருமத்தைக் காமியாயோ.

ராவணன் தன் வரபலத்தையும் அதனால் பெற்ற பேறுகளையும் தன்னிடம் தங்கவைத்துக்கொள்ள வேண்டுமாயின் அவன் பின்பற்ற வேண்டிய நெறி முறைகள் பற்றிப் பேசுகின்றாள் சீதாதேவி :

"உலகத்தில் பாவம் செய்வதிலிருந்து விடுபட்டவர் யார்? ஐம்புலன்களையும் அடக்கிய பிரமன் முதலிய தேவர்களா? அல்லது புலன்கள் வழிச் சென்று புன்செயல் செய்த அவுணர்களா? இப்போது நீ பெற்றிருக்கும் செல்வமும் கீர்த்தியும் முன் செய்த தவத்தினால் வந்தவை தானே? இப்போது அத்தவ நெறியினின்றும் விலகிப் பாவம் செய்தால் அச்செல்வமும் சீர்த்தியும் உன்னிடம் நிலைக்குமா? சிந்தித்துப்பார்! உனக்கு இப்பெரும் செல்வத்தை ஈந்த சிவபெருமான் நீ என்றென்றும் இதனை வைத்து அனுபவிக்க வேண்டுமென்ற எண்ணத்துடனேயே கொடுத்தார். பெறற்கரிய பேற்றை இழக்குமாறு அறத்துறை மறந்த அறிவிலியே! பிறர் மனைவியை விரும்புவதை விட்டு விட்டுத் தருமத்தை விரும்பமாட்டாயா? நீ வழிபடும் சிவபெருமானே சர்வகாலமும் தவத்தில் ஈடுபட்டிருப்பதை அறியாயோ? அவரே அவ்வாறு தவம் செய்வாரானால் நீ

எவ்வளவு முயற்சியுடன் இன்னும் தீவிரமான தவநெறியைப் பின்பற்ற வேண்டும் என்பதை நினைத்துப்பார்.''

ராவணன் மாட்சியெல்லாம் அவனுடைய பொருந்தாத காமத்தினால் வீழ்ச்சியடைகின்றதே என்ற இரக்கத்தினால் அவனுக்கு அறவுரை கூறுகின்றாள் அறத்தின் செல்வி. சீரும் செல்வமும் சேர்ப்பதற்குமட்டும் தவம் செய்தால் போதாது, சேர்ந்த செல்வமும் ஈட்டிய புகழும் நிரந்தரமாக இருக்கவேண்டும் என்றாலும் அறவழி நின்று தவம் புரிதல் அவசியம் என்பதைச் சீதை எடுத்துரைக்கின்றாள். அரக்கரின் குணம் ஐம்புலன்களை அடக்கி, கடுமையான தவம் செய்து வரங்களைப் பெறவேண்டியது; பெற்ற பின்னர் அறத்தையும் தவத்தையும் விட்டு விட்டு அநியாயம் செய்வது; அதன் விளைவாகத் தனக்கும் தன் சுற்றத்திற்கும் அழிவை ஏற்படுத்துவது. இந்தத் தவற்றையே தவச்செல்வி தசகண்டனுக்குச் சுட்டிக் காட்டுகின்றாள். இதனையே,

> "இந்திரப் பெரும்பதம் இழக்கின்றாய் என
> நொந்தனன் ஆதலின், நுவல்வது ஆயினேன்"
> —யுத்த, ராவணன் மந்திரப் படலம்-73.

என்று பின்னர் வீடணனும் ராவணனுக்கு அறிவுரை கூறும்போது எடுத்துரைப்பான். ஐம்புலன் அடக்கம் ராவணனுக்குப் புதிது அன்று; தவம் செய்த காலத்தில் கடைப்பிடித்தது தான். ஆனால் இப்போது அதனைக் காற்றோடு விட்டு விட்டான். அதன் விளைவாக அழியவும் போகின்றான். வான்மீகி ராமாயணத்தில் யுத்த களத்தில் ராவணனின் உயிரற்ற உடல்மீது விழுந்து கதறி அழுத மண்டோதரி இந்தக் கருத்தை வெளியிடுகின்றாள் :—

> इन्द्रियाणि पुरा जित्वा जितं त्रिभुवनं त्वया ।
> स्मरद्भिरिव तद्वैरमिन्द्रियैरेव निर्जितः ॥

पुरा—முன்பு, त्वया—தங்களால், इन्द्रियाणि—இந்திரியங்களை, जित्वा—வெற்றி பெற்று, त्रिभुवनं—மூவுலகமும், जितम्—வெற்றி கொள்ளப்பட்டது, तत्—அந்த, वैरम—விரோதத்தை, स्मरद्भिः इव—நினைவில் கொண்டவை போன்று, इन्द्रियैः एव—இந்திரியங்களாலேயே, निर्जितः—வெற்றி கொள்ளப்பட்டு விட்டீர்கள்.

ராவணன் தவம் செய்த காலத்தில் அவனால் தோற்கடிக்கப்பட்ட இந்திரியங்கள் தற்போது அந்த விரோதத்தினால் அவனைச் சிறிது சிறிதாக வென்று அவனைப் பழி வாங்கி விட்டன என்பது மண்டோதரியின் கருத்தால் காணலாம்.

இனி, ராவணன் தன்னைச் சிறையெடுத்த செயல் ராமன் மேற்கொண்ட விரதம் நன்கு நிறைவேற வழிவகுத்துவிட்டதென்று சீதை ராவணனிடமே அறிவிக்கின்றாள்:-

"தென் தமிழ் வளர்த்த அகத்தியர் முதலான முனிவர்கள் ராமபிரானிடம் வந்து 'அரக்கரின் கொடுமையைத் தாங்கமுடியவில்லை; தவமும் செய்ய இயலவில்லை; அவர்களை அழிப்பது உன் கடமை; உன்னால் அவர்கள் அழிவது உறுதி' என்று வேண்டிக்கொண்டதையும், அவர்கள் வேண்டியதைக் கருணைக்கடலான காகுத்தன் உடனேவாக்குறுதியாக அளித்ததையும் நானே நேரில்பார்த்தேன். அதற்கேற்றாற்போலவே உன் செயலும் அமைந்துள்ளது. எனவே உன் அழிவை நீயே விரைவுபடுத்திக் கொண்டாய். உன் வரபலம், படைபலம் எல்லாம் தெரிந்த பின்பே ராம இலக்குவர் உன் தங்கையைக் கண்டித்தனர்; உன் தம்பியரைக் கொன்றனர்; பதினாலாயிரம் அரக்கரை அழித்தனர் என்பதை நீ சிந்தித்துப் பார்க்கவில்லையா?"

அவன் எதிரியான ராமனின் பணி எளிதில் நிறைவேற அவனே வழிசெய்து கொடுத்துவிட்டான் என்பதை ராவணனிடமே எடுத்துரைக்கும் சீதையின் திறன் பாராட்டுதற்குரியது.

18. இடிப்பார் இல்லாத மன்னன்

ராவணன் அறம் கூறும் அமைச்சர்களை மதிக்காமல் இருக்கிறான் என்று சீதை அவனிடமே குற்றம் சாட்டியதாக வான்மீகத்தில் பார்த்தோம். கம்பனில் சீதை தன்னுடைய நீண்ட உரையின் இறுதியில் ஒரு அருமையான கருத்தை வெளியிடுகின்றாள்.

தர்ம நெறி தவறாத தந்தை ஜனகன் அரண்மனையிலும், மாமனார் தசரதன் அரண்மனையிலும் அறிவு சான்ற அமைச்சரின் தலையாய பணியைக் கவனித்தவள் சீதை. தசரதனுடைய அமைச்சர்கள் தங்கள் உயிரைப் பொருட்படுத்தாதவர்கள். அரசனுக்குப் பிடிக்காததாக இருப்பினும் நேர்மையான கருத்தை அவனிடம் எடுத்துரைக்கத் தயங்காதவர்கள்; செம்

மையின் வழியினின்றும் சிறிதும் விலகாதவர்கள்; முக்காலத்தையும் உணர வல்லவர்கள்; நன்மை தீமை இவற்றை ஆராய்ந்து நாட்டுக்கும் மன்னனுக்கும் நன்மைபயப்பனவற்றையே, ஒரு மருத்துவன் போன்று எடுத்துரைக்கும் வன்மை படைத்தவர்கள். அதனால்தான் தசரதன் ஆட்சி தலைசிறந்ததாக இருந்தது என்பதையும் சீதை அறிவாள். ஆனால் இலங்கையில் அவள் கண்ட காட்சி வேறு! அரசனை நெறிப்படுத்தும் அறங்கூறும் அமைச்சர்கள் இலங்கையில் இல்லை; அல்லது அப்படிப்பட்ட அமைச்சர்களின் அறிவுரையின்படி அரக்கர் கோன் நடப்பதில்லை என்பது சீதைக்குத் தெளிவாகத் தெரியவந்தது. இடிப்பாரை இல்லாத மன்னவனாக இலங்கேசுவரன் இருப்பதைக் கண்டாள் சீதை. அமைச்சர்கள் என்ற பெயர் தாங்கியவர்கள் அரக்கர் தலைவன் செயல்களுக்கு "ஆமாம்" போடக்கூடிய அசடர்களாக இருப்பதையும் சீதை புரிந்து கொண்டாள். தன்னுடைய நீண்ட பதில் உரையின் இறுதியில் சீதை ராவணனிடம் தன் கருத்தை வெளியிடுகின்றாள்:-

கொடிய விஷமுடைய பாம்புகளும்கூடச் சில மந்திரங்களுக்குக் கட்டுப்பட்டுத் தீண்டாமலிருக்கும். அதுபோன்று, அறங்கூறும் அமைச்சர்கள்இருந்தால் அவர்கள் மந்திராலோசனைக்குக்கட்டுப்பட்டு நீ நடந்திருப்பாய். தான்தோன்றித்தனமாகக் களியாட்டம் ஆடுகின்ற உனக்கு 'இது தக்கது; இது தகாதது' என்று அறிவு பூர்வமாக எடுத்துக்காட்டி நல்வழிப்படுத்தும் அமைச்சர்கள் இல்லை போலும்! உன்அமைச்சர்கள் நீ என்ன சொல்கின்றாயோ அதனையே ஏற்றுக்கொள்கின்றார்கள் போலும்! இந்தச் சூழ்நிலையில் அறந்துறந்து உன்னழிவுக்கான செயல்களையே செய்யும்போது நீ அழிந்து போவதை யாரால் தடுக்க முடியும்?"

சீதையின் இந்தக் கருத்தோவியத்தைக் கம்பனின் கவியில் காணலாம் :-

"கடிக்கும் வல் அரவும் கேட்கும் மந்திரம்; களிக்கின்றோயை,
'அடுக்கும், ஈது அடாது' என்று, ஆன்ற ஏதுவோடு அறிவு காட்டி,
இடிக்குநர் இல்லை; உள்ளார், எண்ணியது எண்ணி, உன்னை
முடிக்குநர்; என்றபோது, முடிவு அன்றி முடிவது உண்டோ?"

— சுந்தர. நிந்தனைப் படலம்-59.

[வல் அரவம்-கொடிய பாம்பு]

ராவணனுடைய அமைச்சரவையில் இருந்தவர்களைப் பார்க்கும்போது சீதையின் கணிப்பு எவ்வளவு பொருத்தமானது என்பது புரிகின்றது. ராமனின்படை கடலின்அக்கரைக்கு வந்து விட்டதென்று அறிந்து ராவணன் மந்திராலோசனை நடத்துகின்றான். அந்தச் சபையில் கும்பகர்ணனையும் விடணனையும் தவிர ஏனையவர்கள் ராவணனின் இழிசெயலை இடித்துரைப்பதற்கு மாறாக, ராவணனுடைய செயலை ஆமோதித்தும், அவனுடைய வீரத்தைப் புகழ்ந்தும், ராமனுடைய பலத்தைப் பழித்தும் பேசுகின்றனர். இந்தக் காட்சியைப் பாரதியார் தம் 'பாஞ்சாலி சபதத்தில்' பாஞ்சாலியின் சொற்களில் படம்பிடித்துக் காட்டுகின்றார்:—

பாதக துச்சாதனனால் பார்வேந்தர் சபை நடுவே இழுத்துவரப்பட்ட பாஞ்சாலி பாட்டனாரான பீஷ்மரிடம் நீதி கேட்கின்றாள். பீஷ்மர் சாஸ்திரங்களின்படி பாஞ்சாலியைத் தர்மன் அடிமையாக்கியது தவறில்லை என்று சொல்கின்றார். தியாக சிகரமான பீஷ்மருக்குத் திரௌபதி பதில் சொல்கின்றாள்:

"சால நன்கு கூறினீர் ஐயா, தருமநெறி!
பண்டோர் ராவணனும் சீதைதன்னைப் பாதகத்தால்
கொண்டோர் வனத்திடையே ஒளித்துப் பின் கூட்டமுற
மந்திரிகள் சாத்திரிமார் தம்மை வரவழைத்தே
செந்திருவைப் பற்றிவந்த செய்தி உரைத்திடுங்கால்
'தக்கது நீர் செய்தீர்; தருமத்துக்கு இச் செய்கை
ஒக்கும்' என்று கூறி உகந்தனராம் சாத்திரிமார்!
பேய் அரசு செய்தால் பிணந்தின்னும் சாஸ்திரங்கள்!"

— பாரதியார் பாடல்கள், பாஞ்சாலி சபதம்,
துகிலுரிதற் சருக்கம்-65.

அரசு செய்வது பேயாக இருந்தால் பிணந் தின்பது சட்டப்படி நல்ல செயலாகிவிடும் அல்லவா? அதுபோன்று ராவணன் ஆட்சியில் பிறர்மனை கவர்வது தர்மத்திற்கு ஏற்றதாகும் எனறு அமைச்சர்கள் அதனை ஆமோதிப்பது ராவணன் அழிவிற்கே என்று சீதை உறுதியாக எடுத்துரைக்கின்றாள்.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-150

870. अन्तर्मुख समाराध्या அந்தர் முக சமா ராத்யா—மனதை உள்முகமாகத் திருப்பி நன்கு ஆராதிக்கப்படுபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

மனதை உள்முகமாகத் திருப்புதல் எப்படி என்பதை நாம் முதலில் அறிந்துகொள்ள வேண்டும். பஞ்சேந்திரியங்கள் வாயிலாக மனது யாண்டும் புறத்திலேயே போய்க் கொண்டு இருக்கிறது. இந்திரியங்களின் அமைப்பும் புறத்தில் போவதற்கு ஏற்ற வாறே இருக்கிறது. வெளியுலகில் கிடைக்கும் பொருள்களை நா சுவை பார்க்கிறது. தன்னிடத் திருந்தே ஊற்றெடுத்து வருகிற உமிழ் நீரை அது சுவைப்பதில்லை. புறத்திலுள்ள பொருள் களே கண்ணுக்குப் புலனாகின்றன. மனிதன் தன் கண்ணைக்கொண்டு தன்னுடைய நெற் றியையோ, முகத்தையோ, முதுகையோ காண முடியாது. காதுகொண்டு மனிதன் கேட்ப தெல்லாம் புறவுலகினின்று வருகிற ஓசை யையே. தன்னுடைய சரீரத்தினுள் ஓசை இருக்கிறது. ஆனால் அந்த ஓசையைக் கேட்கும் வல்லமை காதுக்கு இல்லை. விரல்களை வைத்து இரண்டு காதுகளையும் நன்கு அடைத்துக் கொண்டால் உடலினுள் உண்டாகிற ஓசை எவ்வளவு பெரியது என்பதை மனது கிரஹிக் கிறது. ஊறு அல்லது ஸ்பரிச உணர்ச்சி ஓர ளவு தன்னுடலைத் தொட்டுணர்வதற்குப் பயன் படுகிறது. ஆனால் அதற்கு வருகிற இன்ப துன்பம் என்னும் அனுபவங்களெல்லாம் புறப் பொருள்களைத் தொட்டு உணர்வதாலேயே வருகின்றன. இனி, மூக்கால் புறவுலகிலுள்ள காற்றின் பாங்கை முகர்ந்து மனிதன் அறிந்து கொள்ளுகிறான். இங்ஙனம் ஐந்து இந்திரியங் களும் புறவுலகோடு தொடர்பு கொள்ளுதற்கே அமைந்துள்ளன. இதை முன்னிட்டே

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின்
வகை தெரிவான்கட்டே உலகு

என்னும் கோட்பாடு வந்துள்ளது.

மனது அம்பிகையைத் தன் உள்ளத்தினுள் ளேயே உள்குகின்றபொழுது இந்த ஐம்பொறி களுக்கும் அலுவல் ஏதுமில்லை. இவைகளின் துணை இல்லாமலேயே மனது அம்பிகையின் அழகான வடிவத்தைக் கிரஹிக்கிறது. காதின் துணையில்லாமலேயே அம்பிகைக்குரிய மந்தி ரத்தை மனது தனக்குத் தானே ஓதிக்கொள்ளு கிறது. பிறகு மானசீகமாக அம்பிகைக்குப் படைக்கப்படும் அமுதை நாவின் துணையில் லாது மனது தானே சுவைக்கிறது. அம்பி கைக்குப் பாகிய பூஜையில் சமர்ப்பிக்கும் நறு மணத்தை மானசீகமாகவே படைப்பது சாத் தியமாகிறது. மானசீக பூஜையில் சமர்ப்பிக் கப்படும் பொருள்களனைத்தும் வழிபாடனைத் தும் புற இந்திரியங்களின் துணையில்லாம லேயே நன்கு நிகழ்கின்றன. இத்தகைய மான சீக பூஜை உச்சநிலை எய்துங்கால்

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வர்

என்னும் கோட்பாடு நன்கு நிறைவேறுகிறது. நீடுவாழ்தல் என்பது அழியாப்பொருளாகிய ஆத்ம தரிசனம் அல்லது அம்பிகையின் தரிச னம் எனப் பொருள்படுகிறது. ஆதலால்தான் அன்னையின் வழிபாட்டை மேலான நிலைக்குக் கொண்டு போகிறவர்கள் புறக்கரணங்களை ஒதுக்கி வைத்துவிட்டு அந்தக்கரணத்தை உறுதிப்படுத்தவும், தெளிவுபடுத்தவும் வேண் டும். அது பூர்த்தியாகுமிடத்து 'ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானை' என் னும் ஆப்தமொழி நல்ல அனுபூதியாக வடி வெடுக்கிறது.

871. बहिर्मुखसुदुर्लभा பஹிர்முகசுதுர்லபா- புறக்கரணங்களைப் பயன்படுத்திப் பண்ணு கிற ஆராதனைகளின் வாயிலாக அன்னையை அடையப் பெறுவது சற்றுக் கடினமானது என்பது இந்த நாமத்தின் பொருள்.

ஜன்மாந்தரங்களில் மனிதனுடைய மனது பஞ்சேந்திரியங்களின் வாயிலாகப் புறவுலகி லேயே போய்க்கொண்டிருப்பது வெளிப் படை. புறவுலகில் புலனாகின்ற யாவும் பிர கிருதியின் பாங்குடையவைகளாம். அவை களை நுகர்வது மனதுக்கு எளியது. ஆனால் புலன்களின் துணையின்றி மனதால் கற்பனை பண்ணுவது சற்றுக் கடினமானது. சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். சர்க்கரை தித்திக்கிறது என்று கற்பனை பண்ணுவதை

விடச் சர்க்கரையை வாயில்போட்டுச் சுவைப்ப தன் வாயிலாக அப்பொருள் நன்கு நுகரப்படுகிறது. இத்தகைய பயிற்சிதான் ஜீவாத்மாவுக்குக் காலமெல்லாம் வந்துள்ளது. இனி, இந்தப் பயிற்சியையே கடவுள் வழிபாட்டுக்கும் பயன்படுத்தலாம். அன்னை பராசக்தியின் வடிவம் ஒன்றைப் புறப்பொருள்களைக் கொண்டு அமைக்கிறோம். அதன் வாயிலாகச் செய்யப்படும் வழிபாடு விக்ரஹ ஆராதனை எனப் பெயர் பெறுகிறது. விக்ரஹ ஆராதனையை மூடர்களுடைய முறைதவறிய வழிபாடு என்று அதை நிராகரிக்கும் சமயங்கள் பல இருக்கின்றன. களிமண்ணினால் செயற்கையாகப் பண்ணியிருக்கின்ற பழம் ஒன்று உண்மையான பழம் ஒன்றை ஞாபகமூட்டுகின்றது. அப்படி ஞாபகம் மூட்டுதற்குச் செயற்கைப் பழம் பயன்படுகிறது. உண்ணுதற்கு அது உதவாது. அதே பாங்கில் புறப்பொருள்களைக் கொண்டு அமைத்திருக்கும் அம்பிகையின் விக்ரஹம் அம்பிகையை ஞாபகமூட்டுவதற்கு உதவுகிறது. அந்த விக்ரஹம் தானே அம்பிகை ஆகமாட்டாது.

ஆனால் பிரபஞ்சத்தை நுகர்கின்ற பஞ்சேந்திரியங்களைப் பக்திபூர்வமாக அம்பிகையின் வழிபாட்டுக்குப் பயன்படுத்தினால் இந்த இந்திரியங்களும் அவைகளைப் பயன்படுத்துகிற மனதும் பண்பாடு அடைகின்றன. உண்ணும் உணவைத் தன்னுடைய சுக ஜீவனத்துக்காக அன்று; அம்பிகையின் வழிபாட்டுக்காகவென்று உண்பது சிறந்தது. அதன் வாயிலாக அந்தக்கரணமாகிய மனதும் புறக்கரணமாகிய நாவும் தூய்மையடைகின்றன. இதே விதத்தில் கண் கொண்டு காண்பவைகள் யாவற்றையும் அம்பிகை மயமாகக் கண்டு பழகுதல், கேட்கின்ற விஷயங்கள் யாவற்றையும் அம்பிகை மயமாகக் கேட்டுப்பழகுதல்-இந்தப் பாங்கில் பஞ்சேந்திரியங்களைப் பயன்படுத்துவது நல்ல சாதனையாகிறது. அதன் விளைவாகப் பிரபஞ்சமே படிப்படியாக அன்னை பராசக்தியின் வடிவமாக மாறியமைந்து ஆத்ம சாதகனுக்கு ஞானக்காட்சியளிக்கிறது. இந்தப்பாங்கில் ஆத்ம பரிபாகம் அடைவதற்குச் சாதகன் நெடுங்காலம் எடுத்துக்கொள்கிறான். ஆயினும் இந்த மார்க்கத்தில் பிசகு ஏதுமில்லை.

அந்தர்முகதிருஷ்டி, பகிர்முகதிருஷ்டி ஆகிய இவ்விரண்டுவித சாதனங்களுக்கிடையிலுள்ள தாரதம்மியத்தை விளக்குகிற புராண வரலாறு ஒன்று உண்டு. அம்மையப்பன் தரிசனத்திற்காக நாரதர் கைலாசத்திற்குச் சென்றார். அவர் கையில் கனி ஒன்று எடுத்துக்கொண்டு போனார். அம்பிகையின் செல்வர்களாகிய கணேசன், குமாரன் ஆகிய இருவருள் அக்கனியை யார்க்குக் கொடுக்கலாம் என்னும் கேள்வியை நாரதர் கிளப்பினார். இருவர்க்கிடையில் பந்தயம் ஒன்று வைத்து அதில் முந்துபவனுக்கு அப்பழத்தைத் தருவது என்று அவர் முடிவுகட்டினார். சகோதரர்களிருவரிடமும் அண்டங்களனைத்தையும் அளந்து விட்டு முதலில் வருபவனுக்குப் பரிசு என்று இயம்பி அவர்களை ஓடவைத்தார். மயில் வாகனன் விரைந்து ஓடினான். பெருச்சாளி வாகனனுக்கு அப்படி ஓட இயலவில்லை. அவன் அம்மை அப்பனை வலம் வந்து கனியைப் பெறுதற்குக் கை நீட்டினான். அண்டங்களனைத்தையும் அளந்தாய் விட்டதா என்னும் கேள்வி பிறந்தது. சிவ சக்திக்குப் புறம்பாக அண்டங்கள் எங்கே உள என்னும் கேள்வியைக் கணபதி கிளப்பினான். மூலப் பொருளாகிய சிவ சக்தியை அறிவது தோன்றியுள்ள யாவற்றையும் அறிந்துகொள்ளுவதற்கு நிகர். எனவே கணபதி கையில் கனியைத் தரப்போகும் தறுவாயில் குமரனும் அண்டங்கள் யாவையும் அளந்துவிட்டுத் திரும்பினான். மூத்தவன் செயல் சற்று முந்தியது. இளையவன் செயல் சற்றுப் பிந்தியது. மூத்தவன் கையாண்ட முறை கருவி கரணங்களையொடுக்கி அந்தர்முக திருஷ்டியில் போவது. இளையவன் கையாண்ட முறை கருவி கரணங்களைப் பரநாட்டத்துக்கென்றே பயன்படுத்துவது. அப்படிச் செய்வதால் பரம்பொருளையடைய புறக்கரணங்கள் பயன்படுகின்றனவெனினும் அதில் காலதாமதம் உண்டு. அதிகமாகச் சிரமப்பட்டும் ஆகவேண்டும். இக்கோட்பாடு எக்காலத்திலும் எல்லாச் சாதகர்களுக்கும் பொதுவானதே. எனவே பரம்பொருள் நாட்டம் பூணுகிறவர்கள் புறக் கருவி கரணங்களை ஒதுக்கித் தீவிரமாக அந்தர்முக நாட்டத்தில் ஆழ்ந்து செல்லுவது சாலச் சிறந்தது.

872. त्रय्यी த்ரய்யீ—ரிக், யஜுர், சாமம் என்னும் மூன்று வேதங்களின் வடிவத்தில் இருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என வேதங்கள் நான்கிருக்க அன்னை பராசக்தி நான்காவது வேதமாகிய அதர்வணத்தை ஒதுக்கி விட்டு ஏனைய மூன்று வேதங்கள் மயமாக இருக்கிருள் என்று இயம்புவதின் கருத்து யாது? முதல் மூன்று வேதங்களும் இயற்கையின் நடைமுறையை உயிர்களனைத்தும் காண்கிறவாறு விளக்குகின்றன. அதர்வண வேதத்திலோ இயற்கைக்குரிய அசாதாரணமான வல்லமைகள் பல விளக்கப்படுகின்றன. அவைகளை அறிந்துகொள்ளவோ கையாளவோ எல்லார்க்கும் சாத்தியப்படாது. இயற்கையின் நடைமுறையை இருக்கிறபடி கையாண்டு வருவது தக்ஷிணச்சாரம் என்னும் பெயர் பெறுகிறது. அத்தகைய தக்ஷிணச்சார மயமாக இருப்பது முதல் மூன்று வேதங்கள். அசாதாரணமான சாதனை முறை ஆகியவைகளுக்கு வாமாச்சாரம் என்னும் பெயர் வந்துள்ளது. ஆத்ம சாதகர்களுள் பெரும்பான்மையோர் வாமாச்சாரத்தைக் கண்டிக்கவும் புறக்கணிக்கவும் செய்கின்றனர். ஆதலால் அதற்கேற்றமுறைகள் அடங்கியிருக்கின்ற அதர்வண வேதமும் ஈண்டுப் புறக்கணிக்கப்படுகிறது. மேலே இயம்பியுள்ள அந்தர்முக திருஷ்டி பகிர்முக திருஷ்டி ஆகிய இரண்டினுள் அந்தர்முக திருஷ்டி மற்றதை விடச் சுலபமானது. அதே பாங்கில் தக்ஷிணச்சாரம் எல்லார்க்கும் பொதுவானது. பாராட்டுதற்குரியது. வாமாச்சாரமோ எல்லார்க்கும் பொது வழியாகாது. முறைதவறிக் கையாண்டால் கேடு மிக நேரிடும். ஆயினும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் அன்னையின் அருளால் வாமாச்சாரத்தையும் வெற்றிகரமாகச் சாதித்தார். அப்படிச் சாதித்தவர் தம்முடைய சிஷ்யர்களுள் யாருமே அதைக் கையாளவேண்டாம் என்றும் எச்சரிக்கை செய்தார். ஆதலால் அப்படி ஒரு மார்க்கம் இருக்கிறது என்பது எல்லார்க்கும் தெரிய வேண்டியதில்லை என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டே அன்னை பராசக்தி முதல் மூன்று வேதங்கள் மயமாக இருக்கின்றாள் என இயம்பப்படுகிறது.

873. त्रिवर्ग निलया த்ரிவர்க்கநிலயா—முப்பால் மயமாக இருப்பவள் என்பது இதன் பொருள்.

புருஷார்த்தங்கள் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என நான்கு உள. அவைகளுள் தர்மம், அர்த்தம், காமமாகிய மூன்றும் த்ரிவர்க்கங்கள் எனப்பெயர் பெற்றுள்ளன. அறம், பொருள், இன்பம் எனும் முப்பால் மயம் என இயம்புவது தமிழில் அமைந்துள்ள முறையாம். தமிழ் வேதம் எனப்பகரப்பெறும் திருக்குறள் முப்பால் நூலாக அமைந்திருக்கிறது. அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் சாதனத்துக்குரியவைகள் என்றும், வீடு அல்லது மோக்ஷம் சாத்தியம் என்றும் நூலோர் பொருள்படுத்துகின்றனர். சாதனத்தை முறையாகக் கையாளுகின்றவன் அதன் விளைவாக வருகிற சாத்தியத்தை அடைந்தேயாகவேண்டும். அதை விட்டுப்பிசக அவனால் இயலாது. வாழ்வாங்கு வாழ்வது திரிவர்க்கத்தை முறையாகக் கடைப்பிடிப்பதாகும். அறநெறி பிறழாது வாழ்ந்து வருகின்றவன் இவ்வுலகுக்கேதுவான பொருளை முறையான பாங்கில் பெறுகிறான். இவ்வுலகுக்குரிய ஆசைகளையும் முறையாக நிறைவேற்றுகிறான். நன்னெறியில் நிலைத்திருந்து நல்வாழ்வு வாழுகின்றவன் இவ்வையக வாழ்வைப்பற்றிய உண்மை ஒன்றை அறிய வருகிறான். பிரபஞ்சப் பொருள்கள் நிலையற்றவை. அவைகள் பாரமார்த்திகப் பண்புக்கு உதவமாட்டா. அதே பாங்கில் சரீர சம்பந்தமான சுகங்களனைத்தும் கருவிகரணங்கள் வாயிலாக நுகரப்படுகின்றன. அங்ஙனம் பெறுகிற ஒவ்வொரு சுகமும் இறுதியில் துக்கமாக வடிவெடுக்கிறது. எனவே இவ்வையக வாழ்வில் வாய்க்கிற பொருளும் போகமும் நிரந்தரமானவைகள் அல்ல. இவ்வுண்மையை நீண்டகால வாழ்க்கைக்குப் பிறகுசாதனத்தின் மூலம் மனிதன் அறிகிறான். அறிந்தான பிறகு இவைகளிடத்து ஆத்ம சாதகனுக்கு விரக்தி தானாக வந்தமைகிறது. த்ரிவர்க்கங்கள் ஆத்ம சாதகனைமோக்ஷத்திற்குப்பண்படுத்துகின்றன. பண்பட்டவன் மோக்ஷத்தை அடைவது திண்ணம் என்னும் கருத்து த்ரிவர்க்க நிலயா என்னும் நாமத்தில் அடங்கியிருக்கிறது.

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

(திரு. V. சோமு B. Sc., M. Ed.,)

9. உலோகக் கலப்பும் உலக வாழ்வும்:

நாம் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் பலகருவிகள் தனித்த உலோகங்களால் ஆனவையல்ல. பெரும்பாலான கருவிகள், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உலோகங்களின் கலவையினால் ஆனவையாகும். தேவையான உலோகங்களை உருக்கி, தகுந்த விகிதத்தில் கலந்து குளிரச் செய்து உலோகக் கலவைகள் (Alloys) தயாரிக்கப்படுகின்றன.

சமையல் பாத்திரங்கள், பூட்டுக்கள், கைப்பிடிகள், நாணயங்கள், உருவச்சிலைகள், பீரங்கி எந்திரங்கள், ஆலயமணிகள் போன்றவைகளைச் செய்யத் தாமிரம், துத்தநாகம், வெள்ளியம் ஆகியவை கலந்த கலப்பு உலோகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

கலப்பு உலோகங்களான டைப்மெட்டலும், டியூராலுமினும் (Duralumin) முறையே அச்சு எழுத்துக்கள் செய்யவும், ஆகாயவிமானங்கள் செய்யவும் பயன்படுகின்றன.

எஃகு என்னும் உலோகக் கலவையில் இரும்புடன் கார்பன் கலந்துள்ளது. இதைக் கொண்டு தண்டவாளங்கள், பாலங்கள், கப்பல் தளங்கள், நிலைக்காந்தங்கள், பிளேடுகள், கடிகாரவில்கள் போன்ற பல பொருட்கள் செய்யப்படுகின்றன.

இனி, இவ்வுலோகக் கலவைகளின் பண்புகளைப் பற்றி ஆராய்வோம். உலோகக் கலவையின் உருகுநிலை அதில் கலந்துள்ள உலோகங்களின் உருகு நிலையைவிடக் குறைவு. வீட்டில் மிகுதிய மின்னோட்டத்தினால் ஏற்படும் தீவிபத்துப்போன்ற ஆபத்துக்களைத் தவிர்க்க வீட்டின் பிரதான சுவிட்சில் (Main Switch) மின் உருகு கம்பி (Fuse Wire) வைக்கப்பட்டுள்ளது. இது காரீயம், வெள்ளீயம் என்ற இரு உலோகங்களால் ஆன உலோகக் கலவையாகும். இதன் உருகுநிலை (melting point) மிகவும் குறைவு. அதனால் மிகுதிய மின்னோட்டத்தினால் ஏற்படும் வெப்பத்தால் கம்பி உருகி, அறுந்து மின் சுற்றைத் துண்டிக்கிறது. ஆபத்தும் தவிர்க்கப்படுகிறது.

உலோகக் கலவையின் மின் கடத்தும் திறன் (electrical conductivity) மிகக் குறைவு. தாமிரம் ஒரு சிறந்த மின் கடத்தி (good conductor of electricity). இதனுடன் துத்தநாகமும், நிக்கலும் கலந்து தயாரிக்கப்படும் ஜெர்மன் வெள்ளியின் (German Silver) மின் கடத்தும் திறன் மிகக் குறைவு.

இரும்பு எளிதில் துருப்பிடிக்கும் ஓர் உலோகம். ஆனால் இரும்புடன் குரோமியம், நிக்கல் கலந்து தயாரிக்கப்படும் உலோகக் கலவையான எவர்சில்வர் (Stainless steel) துருப்பிடிக்காது.

ஓர் உலோகக் கலவை அதில் கலந்துள்ள உலோகங்களைவிடக் கடினமானது. உதாரணமாகத் தூயதங்கம் மிகமென்மையானது; அதை எளிதில் வளைத்துவிடலாம். ஆனால் அதனுடன் சிறிதளவு (சுமார் 8%) தாமிரத்தைக் கலந்து உருக்கினால் சவரன் என்ற உலோகக் கலவை கிடைக்கிறது. சவரன் மிக உறுதியானது; கடினமானதும்கூட. இதைக்கொண்டு அணிகலன்கள் செய்யலாம்.

தூய தங்கத்துடன் சிறிதளவு தாமிரத்தைச் சேர்த்தால்தான் நகைகள் செய்யமுடியும். தூய தங்கம் போன்றவர் பரம்பொருள். ஆபரணங்கள் செய்வதற்காகத் தங்கத்துடன் சிறிதளவு தாமிரம் கலப்பதுபோல, பரம்பொருளுடன் மாயை கலக்கும்போது உலக வாழ்வு நிகழ்கிறது. உடல் இவ்வுலகில் இருக்கும் வரையில் மாயை மனிதனை மயக்கியே தீரும். தாமிரத்தைக் கலக்கவில்லையானால் தங்கம் அணிகலன்கள் செய்ய உதவாததுபோன்று மாயை இல்லையெனில் உலக வாழ்வு நிகழ்வதில்லை. ஆதலால் இவ்வுலக வாழ்க்கைக்கு மாயையின் கலப்பு தேவைப்படுகிறது.

"தூய தங்கத்தினால் நகைகள் பண்ண முடியாது. அதில் தாமிரம் சிறிது கலந்தால் நகை செய்வதற்கு அது உதவுகிறது. அதே விதத்தில் மாயை கொஞ்சம் கலந்திருந்தால் தான் மனிதன் உலகில் வாழ்ந்திருக்க முடியும். மாயை இல்லையென்றால் மானுட சரீரம் இருபத்தொரு நாளுக்குமேல் நிலைத்திருக்காது."

— ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (264) ''நாராயணனே எல்லாம்'' என்று போக்கிரியின் செயலைக் கண்டிக்காவிட்டால் அவன் தீய செயல் அதிகரிக்காதா?

பரம்பொருள்தான் உலகனைத்தும் ஆயிருக்கிறது என்பது உண்மை. உலகனைத்தும் ஆனாய் நீயே, என்று பக்தர் ஒருவர் பகர்கிறார். ஆதிபகவன் முதற்றே உலகு என்பது குறளின் கோட்பாடு. என்னுடைய ஓர் அம்சத்தைக் கொண்டு ஜீவலோகமும் பூதங்கள் யாவும் ஆகியிருக்கிறேன் என்பது பகவத்கீதை வாக்கியம். சிருஷ்டியிலே நலமும் கேடும் நிறைந்திருப்பது கண்கூடு. இது உலகைப் பற்றிய உண்மை. ஆயினும் இவ்வுலகில் வாழ்ந்து வருகிற நாம் நலனை நாடவும், கேட்டைத் தவிர்க்கவும் செய்கிறோம். மரம் ஒன்றில் முள்ளும் இருக்கிறது, கனியும் இருக்கிறது. முள்ளைத் தவிர்க்கவும் கனியை ஏற்றுக்கொள்ளவும் செய்கிறோம். மக்களுள் நல்லவர்களும் இருக்கிறார்கள். கெட்டவர்களும் இருக்கிறார்கள். நலனை நாடும் நாம் கெட்டவர்களிடத்திலிருந்து விலகியிருக்கவும் வேண்டும். கெட்டவர்களிடத்திலிருக்கும் ஒழுக்கமின்மை அவர்களோடு நின்றுவிடுமாகில் நாம் அவர்களை விட்டு விலகி இருப்பது போதுமானது. ஆனால் கெட்டவர்களுடைய கேடு நிறைந்த செயல் ஏனையவர்களை வந்து பாதிக்குமானால் அக்கெட்டவனைக் கண்டிப்பது முற்றிலும் அவசியம். இக்கேள்வியில் அடங்கியுள்ள கருத்துப்படியே துஷ்ட நாராயணனைக் கொடியவன் எனக்கருதி அவன் மீது நடவடிக்கை எடுப்பது முற்றிலும் பொருந்தும். அவனை நாராயணனாகக் கருதுதலில் பலன் ஒன்று உண்டு. அன்னவன் மீது எடுத்துக்கொள்ளும் நடவடிக்கை யாண்டும் வரம்புக்குட்பட்டதாயிருக்கும். அவனும் நாராயணன் என்னும் அடிப்படை உண்மையை அறியாதிருந்தால் அல்லது அதை மறந்து போனால் அவன்மீது எடுத்துக்கொள்ளும் நடவடிக்கை பெரிதும் வரம்பு கடந்ததாய்ப் போய்விடும். கெட்டவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவது அறச்செயல். ஆனால் அந்த நடவடிக்கை மட்டும் அவர்களைத் திருத்தியமைத்தற்பொருட்டு இருத்தல் வேண்டும். அவனை ஒழித்தல் முறையாகாது. நாராயணனே அனைத்துமாய் இருக்கிறான் என்னும் அடிப்படை உண்மையை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும் அளவுக்கு நம்முடைய நடவடிக்கை செயல் வரம்பு கடந்து போகாது. அந்த ஞானம் அந்த அளவில் ஆத்ம சாதகனுக்குப் பயன்படுகிறது.

கேள்வி: (265) நல்ல எண்ணங்களை மனதில் நினைத்தாலும், அவற்றைச் செயலுக்குக் கொண்டு வர முடியவில்லையே! அதற்குக் காரணம் என்ன?

எண்ணத்தையும் செயலையும் ஒன்றுபடுத்துவது யோகசாதனத்துக்கு நல்ல அடிப்படையாகிறது. ஆனால் எண்ணத்தையும் செயலையும் ஒன்றுபடுத்துவது மிகக் கடினம். இதையொட்டிய ஆங்கிலப் பழமொழி ஒன்று உண்டு. **The spirit is willing; but the flesh is weak.** நல்லதையே செய்ய வேண்டுமென்று மனது எண்ணுகிறது. ஆனால் உடல் கூறு அதற்கு இடம் தருவதில்லை. இதற்கு நல்ல சான்று ஒன்று சொல்லலாம். புதியதாக (உந்துவண்டி) சைக்கிள் ஓட்டிப் பழகுகிறவன் ஆரம்ப தசையில் ஒரு பிழைக்குப் பெரிதும் இலக்காவான். பாதையில் தென்படும் குழியில் சைக்கிளை ஓட்டலாகாது என்று தீர்மானம் பண்ணிக் கொள்ளுவான். ஆனால் நிகழ்வது யாது? அவன் எண்ணியதற்கு மாறாக அக்குழியினுள்ளேயே சைக்கிளை ஓட்டித்தள்ளுவான். நல்ல பயிற்சி பெற்றான பிறகு இந்தப் பிழை அவனிடத்து நடைபெறாது. அதே விதத்தில் நன்னெறியில் நிலைநிற்க முயலுபவர்கள் ஆரம்பத்தில் நிலை தடுமாறிப் போவார்கள். நல்லொழுக்கம் இன்னதென்று தெளிவுற மனது அறிகிறது. ஆனால் செயலிலோ மனிதன் எப்படியோ வழுவிப் போகிறான். அப்படி வழுவுவதை முன்னிட்டு முயற்சியைக் கைவிடலாகாது. தீயவழியில் போகலாகாது என்னும் எண்ணத்தைத் தீவிரமாக நினைக்கவேண்டும். பிழைபோகிற ஒவ்வொரு தடவையும் மனிதன் தன்னைத் தானே தீவிரமாகக் கடிந்துகொள்ளவேண்டும். இங்ஙனம் எண்ணுகிற எண்ணத்தையும் செய்

கிற செயலையும் முற்றிலும் ஒன்றுபடுத்தினால் அது யோகசாதனத்துக்கு நல்லதோர் அடிப்படைப் பயிற்சியாகிறது.

கேள்வி: (266) முருகனும், வீரபத்திரனும் சிவன் அம்சங்கள் என்றாலும் நாம் ஏன் வீரபத்திரனை மட்டும் வழிபடுவதில்லை?

இக்கேள்விக்கு விடையாக உலக நடைமுறையொன்றைச் சான்றாக எடுத்துக்கொள்ள வேண்டும். மானுடன் ஒருவனிருக்கிறான். அவன் அரசாங்கத்தில் போலீஸ் அதிகாரியாக உத்தியோகம் பார்க்கிறான். அந்த உத்தியோகஸ்தனுக்கு மகன் ஒருவன் இருக்கிறான். உத்தியோகம் பண்ணுகிற தந்தை சமுதாயத்திலுள்ள கெட்டவர்கள் மீது கண்டிப்பான நடவடிக்கை எடுக்கிறான். இத்தகைய தந்தையும் மகனும் ஓர் உறவினர் வீட்டுக்கு உறவாட அழைக்கப்பட்டனர். அங்கு வந்தவர்களுள் போலீஸ் உத்தியோகஸ்தர் ஏன் அழைக்கப் படவில்லை என்னும் கேள்வி எழலாகாது. தந்தையின் ஓர் அம்சமே மைந்தனானான் என்பது உண்மை. தந்தையின் ஓர் அம்சமே போலீஸ் உத்தியோகஸ்தன் ஆனான் என்பது உண்மை. தந்தை தானே போலீஸ் உத்தியோகஸ்தனாகச் சமுதாயக் கடமையைச் செய்தான். வீட்டுக்கு வந்தபிறகு யாண்டும் உள்ள பழைய மனிதனாகவே நடந்துகொண்டான். அதற்கிடையில் அவனுக்குப் பிள்ளையாகப் பிறந்தவன் மற்றும் ஒரு மூர்த்தியாயிருக்கிறான். அந்த விதத்தில் போலீஸ் உத்தியோகஸ்தனாக இருந்தது புதிய மூர்த்தியல்லன். இந்த உவமானத்துக்கு ஒப்ப தக்ஷப்ரஜாபதியின் பொருந்தாத செயலைக் கண்டிக்கச் சிவபெருமான் தாமே வீர பத்ர மூர்த்தியாக வடிவெடுத்தார். அந்தச் செயலை முன்னிட்டுச் சிவன் தாமே வீரபத்ரன் என அழைக்கப்படுகிறார். சிவக்குமாரனாக வந்துள்ள முருகனோ சிவ மகிமைகளோடு கூடிய மற்றும் ஒரு மூர்த்தியாகிறான். ஆதலால்தான் சிவனை வழுத்துவதற்கொப்பச் சிவக்குமாரனாகிய முருகனை வழுத்துகிறோம். ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காகச் சிவன் தாமே வீரபத்திரனாக வடிவெடுத்தார். அக்காரியம் முற்றுப் பெற்றதும் வீரபத்திர சொருபம் சிவ சொருபத்தில் ஒடுங்கலாயிற்று. அப்படி ஒடுங்கிப்போன அம்சத்தை ஒரு தனித் தெய்வமாக வைத்து வழிபடவேண்டிய அவசியமில்லை. அப்படி வழிபடுவது பொருந்தாது என்றே பகரலாம்.

கேள்வி: (267) இல்லாத பொருளைத் தோற்றுவிக்கும் சித்தி உண்மையா?

இல்லாத பொருளை இருப்பது போன்று காண்பிக்கும் திறமை இயற்கைக்கு உண்டு. அதற்குச் சான்றொன்று எடுத்துக்கொள்ளுவோம். சிறிது சிறிதாக வானத்தில் மேகங் கட்டியுள்ள நாட்களில் வெட்ட வெளியில் வானவில் காண்கின்றோம். உண்மையில் அப்படி வானவில் ஏதும் இல்லை. ஹிமாசலம் போன்ற மலைப் பிரதேசத்தில் இதை நமக்கு நாமே நன்கு நிரூபித்துக்கொள்ள முடியும். மேகங் கட்டியுள்ள வேளையில் சற்றுத் தூரத்தில் வானவில் தரையில் ஒட்டிக்கொண்டிருப்பதை அங்குக் காணலாம். காண்பவர்களுள் ஒரு மனிதனை அந்த வானவில் இருக்கும் இடத்துக்கு அனுப்பிவைத்தால் ஆங்கு அவன் அந்த வில்லைக் காணமாட்டான். பழைய இடத்தில் நிற்கின்றவன் அந்த வில் ஆங்குச் சென்ற மனிதன்மீதும் படிந்திருப்பதைக் காண்கின்றான். எனவே இந்திர தனுசு என இயம்பப்பெறும் வானவில் வெறும் தோற்றமே யொழிய அத்தகைய வில் ஏதுமில்லை. ஜாலவித்தைக்காரன் மாங்கொட்டை ஒன்றைத் தரையில் போட்டுக் கூடையால் மூடுகிறான். கூடையை நீக்கியவுடனே ஆங்கு மாஞ்செடியை மற்றவர்கள் பார்க்கிறார்கள். அச்செடியை மறுபடியும் கூடையால் மூடித் திறக்கிறான். கனிந்த மாம்பழம் அச்செடியில் ஒட்டியிருப்பதை மற்றவர்கள் காண்கிறார்கள். இந்த விதத்தில் சித்தி என்பது வெறும் மதிமயக்கம். அது காரியத்துக்கு உதவாது. இதே விதத்தில் நாம் கனவில் காணும் தோற்றங்களும் வெறும் மன விகாரங்களாம். விகாரத்துக்குப் புறம்பாகப் பொருள் ஏதும் கனவில் இல்லை. இதேகோட்பாட்டை நனவில் கொண்டுவருகிறபொழுது அது ஜாலம் எனப்படுகிறது. சித்திகளால் நமக்குப் பயன் ஒன்றுமில்லை. சாதனத்தில் மேலே செல்லுவதற்குச் சித்திகள் தடையாகவிருக்கின்றன. சித்திகளைக் கண்டு மதிமயக்கம் அடையக்கூடாது. கனவை ஒதுக்குவது போன்று சித்திகளையும் ஒதுக்கவேண்டும்.

பகவத்கீதையும் காந்தியடிகளும்

(35ஆம் பக்கத் தொடர்ச்சி)

[சுவாமி துருவானந்தர்]

கீதை என்ற பெயரில் பல நூல்கள் இருக்கின்றன. அவை ரிபுகீதை, வியாதகீதை, அஷ்டாவக்ரகீதை என்றெல்லாம் சொல்லப்படுகின்றன. பகவானால் அர்ஜுனனுக்கு உபதேசிக்கப்பட்டதால் இது பகவத்கீதை என்றே வழங்கப்படுகிறது. பாண்டவர்களும், கௌரவர்களும் குருக்ஷேத்திரம் என்ற இடத்தில் போர்புரிவதற்காக எதிரெதிரே அணிவகுத்து நின்றனர். போர்க்களத்தில் எதிரிகளைக் கண்ட மாத்திரத்தில் அர்ஜுனன் முகத்திலே துயரம் குடிகொண்டது. எதிரிகளை வெல்ல முடியாது என்ற பயத்தால் அன்று, போற்றுதற்குரியவர்களைப் போர்க்களத்தில் கொல்லப்போகிறோமே என்ற மயக்கம் அவனைக் குழப்பத்தில் ஆழ்த்தியது.

வில்லுக்கு விஜயன் என்ற சிறப்புப் பட்டம் பெற்றவன். சிவபெருமானோடு போர்புரிந்தவன். தேவலோகம் சென்று தெய்வீக சக்தி வாய்ந்த ஆயுதங்களைக் கொண்டுவந்த வீரன். எவ்வளவு கம்பீரமாகப் போர்க்களத்துக்கு வந்தானோ அர்தக் கம்பீரமும், எத்தனை ஆண்டுகளாகக்கௌரவர்களைஒழிக்கவேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்தானோ அந்தத் துடிப்பும் இப்போது இருந்த இடம் தெரியாது மறைந்து போயின. அவனுடைய உடல் நடுக்கமுற்றது. மேனியில் மயிர்ச்சிலிர்ப்பு ஏற்பட்டது. உடம்பு எரிவது போன்று உணர்ந்த அவனுடைய கையிலிருந்து காண்டீபம் நழுவுகிறது. உற்றாரைப் பார்த்த அவனுடைய உறுப்புக்கள் சோர்வடைகின்றன. எதிரிகளைக் கொன்று குவிக்கவேண்டும் என்று பற்களை நெரித்த அவனுடைய வாயும் வறள்கிறது. மேன்மையனைத்தும் பொருந்திய அர்ஜுனனுக்கே பற்றுதலின் விளைவாக உள்ளச் சோர்வும், மனத்தளர்ச்சியும் வந்தனவென்றால் மற்றவர்களைப்பற்றிக் கேட்கவாவேண்டும்! இத்தகைய இழிவான உள்ளச் சோர்வையும், மனத்தளர்ச்சியையும் ஒழிக்க வேண்டுமென்றே கண்ணபிரான் கீதோபதேசத்தை ஆரம்பித்தார்.

"அர்ஜுனா, உத்தமர்களுக்குத் தகாததும், சொர்க்கத்தையோ, புகழையோ அடைவதற்கு இடம் இல்லாததுமான இந்த மதிமயக்கம் நெருக்கடியான நேரத்தில் உன்னை எப்படி ஆட்கொண்டது?"

"பார்த்தா, பேடித்தனத்திற்கு இடம்கொடுக்காதே. உனக்கு இது தகுதியன்று. பரந்தபா, இந்த இழிவான கோழைத்தனத்தை உதறித் தள்ளிவிட்டு எழுந்திரு."

இங்ஙனம் பகவான் வாயிலிருந்து வந்த முதல் வாசகமே கீதா சாஸ்திரத்திற்கு மூல மந்திரமாகத் திகழ்கிறது.

இந்த உலகம் ஒரு பயிற்சிச்சாலை. நம்மைத் திருத்தியமைப்பதற்கே இந்த உலகிற்கு வந்திருக்கிறோம். நம் வாழ்வில் நடைபெறும் சம்பவங்கள் நம் மனதைப் பண்படுத்தவே நிகழ்கின்றன.

எல்லா உயிர்களுக்கும் பிறப்பிடமாக இந்த மண்ணுலகம் இருக்கிறது. இவ்வுலகில் பிறந்த அனைவரும் மேதைகளாகவோ, சான்றோர்களாகவோ, தீர்க்கதரிசிகளாகவோ, அறிஞர்களாகவோ ஆகிவிடுகிறார்களா என்று ஆராய்ந்தால் இல்லை என்ற முடிவுக்குத்தான் வர வேண்டும். வள்ளுவர் பகர்வதாவது :

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று."

எல்லாருமே புகழோடு பிறந்து, புகழோடு வாழ்ந்து, புகழோடு இவ்வுலகை விட்டுப் போக முடியுமா? முடியாது.

இராமன், கிருஷ்ணன், புத்தர், இயேசு, இராமகிருஷ்ணர், விவேகானந்தர் ஆகியவர்களைப் போன்ற அசாதாரணப் பிறவிகள்தாம் பிறந்தது முதற்கொண்டு உடலை உகுக்கும் வரையில் தங்களின் பெரு நிலையிலேயே யாண்டும் இருந்தவர்கள். இவர்கள் அடைந்த மகோன்னத நிலை எடுத்த எடுப்பில் அவர்களுக்கு வாய்க்கக் கிடையாது ஒவ்வொரு பிறவியிலும் ஓயாது முயன்று தங்களைத் திருத்தியமைத்தவர்களே அடுத்தடுத்து வருகிற பிறவிகளில் இயல்பாகச் சான்றோர்களாக ஆகிவிடுகிறார்கள். மீன் குஞ்சுக்கு நீரில் நீந்துவது

இயல்பாய் அமைவதுபோன்று மேற்கண்ட மகான்கள் சிலத்திலும், த வ த் தி லு ம் ஈடு பட்டனர்.

பிறந்தபொழுது நம்மைப்போன்று மிகச் சாதாரணமானவராகப் பிறந்து, வளர்ந்து வந்தவர் காந்தி. அறிவு வளர்ச்சி பெற்றவுடன் தம்மைத் திருத்தியமைப்பதில் தீவிர கவனம் செலுத்தி, தமது ஆயுள் காலத்திற்குள்ளேயே மகாத்மா ஆ ன வ ர். ராமகிருஷ்ணரைப் போன்றோ, விவேகானந்த சுவாமிகளைப் போன்றோ எடுத்த எடுப்பில் சமாதி நிலையில் அவர் இருந்தது கிடையாது. அவதார புருஷர்களின் வாழ்க்கையில் சிறுவயதிலிருந்தே ஒரு சிறு குறை கண்டுபிடிக்க முடியாது. அவர்கள் தூய்மையின் இருப்பிடம். நடமாடும் தெய்வங்களாக இலங்கினர்கள். ஆனல் காந்தியடிகள் அறிந்தோ அறியாமலோ இளம் வயதில் தவறுகள் செய்துள்ளார். சாதாரண சிறுவனைப் போன்றுதான் அவரும் சிறுவனாகவிருந்த பொழுது வாழ்ந்தார். ஆனல் தவறுகள் பல புரிந்தாலும் உண்மையே பேசும் குணம் மட்டும் அவருடைய உள்ளத்தைவிட்டு நீங்காதிருந்தது. சிறுவயதில் கூச்சமே வடிவெடுத்தவர் காந்தியடிகள். பிறரின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கக் கூச்சப்பட்டு இருந்த அவருக்கு அந்தக் கூச்சமே பெரிய பாதுகாப்பாய் அமைந்தது என்று கூறுகிறார். இருளைக் கண்டு பயப்படும் அளவுக்குச் சிறுவயதில் கோழையாக இருந்தார் என்றே சொல்லவேண்டும். பள்ளி விட்டதும் உடற்பயிற்சி வகுப்பிற்குக் கூடப் போகாது விட்டிற்கு ஓடி வந்துவிடுவார். பயம் அகல விட்டிலே வேலைபார்த்த ரம்பா என்ற அம்மையார் ராம நாமத்தை ஓதும்படி தூண்டினர். நீதிமன்றத்தில் வழக்காட ஆரம்பித்தவுடனே தலை சுற்றியது. எதைப் பேசுவது என்பது தெரியாமல் திகைத்தார். இவருடைய உடல் நடுக்கம் எடுத்தது. எல்லாரையும் பரிதாபமாகப் பார்த்தார். அவருடைய நிலை அனைவர்க்கும் சிரிப்பூட்டியது.எல்லாருடைய திகைப்பிற்கு ஆளான பிறகு இனி அங்கு இருப்பது நல்லதன்று என்று உணர்ந்து அவ்விடத்தை விட்டு விரைவாகப் புறப்பட்டார். இவ்வாறு பல தடவை பல இடங்களில் பேசுவதற்கு இயலாது தவித்தவர் அவர். கீதையின்கோட்பாட்டை உறுதியாகக் கடைப்பிடித்தார். ஆண்மைத்தனமும், அஞ்சாமையும், பலமும் நாளுக்கு நாள் அவரிடம் ததும்பின. ராம நாமத்தை ஜபிப்பதிலும், கீதையின் கோட்பாட்டைக் கடைப்பிடிப்பதிலும் தீவிரமாக இருந்ததின் விளைவாக அடிமைப்பட்டுக் கிடந்த நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கித் தரமுடிந்தது. ‘இக்கலியுகத்தில் சத்தியம் பேசுவதின் மூலம் கடவுளை அடைய முடியும்’ என்ருர் ராமகிருஷ்ணர். சத்தியம் பேசுபவன் சிங்கத்தின் பலம் படைத்தவனுகவிருக்கவேண்டும்என்ருர் காந்தியடிகள்.

பகவத்கீதையைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விவேகானந்த சுவாமிகளிடம் ஒரு மெலிந்த இளைஞன் சென்ருன். அவன் தன் விருப்பத்தை அவரிடம் தெரிவித்தான். விவேகானந்தர் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு அவனிடம் முதலில் “சத்துள்ள உணவைச் சாப்பிடு. பிறகு கால்பந்து முதலிய விளையாட்டு விளையாடி உடலைப்பலப்படுத்தினுல் அதன் பிறகு உனக்குக் கீதையைப் புகட்டுகிறேன்’” என்ருர்.

மகாத்மாகாந்தியடிகளிடம் ஒருவன் கீதையின் ரகசியத்தைப் புகட்டவேண்டுமென்று விண்ணப்பித்தான். அவன் வந்தபோது காந்தியடிகள் தம் அருகே இருந்த செங்கல் குவியலைக்காட்டி ‘இவையனைத்தையும் எண்ணிச் சொல்’ என்ருர். வந்தவரும் பாபுஜிக்கு ஓய்வு இல்லையாதலால் இந்த வேலையைக் கொடுத்துள்ளார். இந்த வேலையை முடித்து விட்டால் பிறகு அவர் நமக்குக் கீதையைப் புகட்டுவார் என்று எண்ணினர். நான்கைந்து நாட்களாக அவன் செங்கற்களை எண்ண எண்ணப் புதிது புதிதாக அங்குச் செங்கற்கள் வந்து கொண்டேயிருந்தன. வந்தவருக்குக்கோபம் வந்துவிட்டது. “இதென்ன அநியாயம்! நான் கீதை படிக்க வந்தேனு! இல்லை செங்கற்கள் எண்ண வந்தேனு? செங்கற்களை எண்ணி என் நேரம் வீணகப்போனதுதான் கைகண்ட பலன்” என்று முணுமுணுத்துக்கொண்டே இருந்தான். இந்த முணுமுணுப்பைப்பற்றி ஆஸ்ரமவாசி ஒருவர் காந்தியிடம் சொன்னுர். உடனே காந்தி கீதை கற்க விரும்பியவரை அழைத்தார். கீதையின் ரகசியம் உமக்கு

இன்னும் புரியவில்லையா? சுயநலம் கருதாமல் செயல் புரியவேண்டும். கடவுளின் மீது பாரத்தைப் போட்டுக் கடமையைச்செய்யவேண்டும். இதுவே கீதையின் சாரம்; அதன் ரகசியம் என்றார்.

உயர்ந்த நோக்கமும், தூக்கி வினைசெய்யும் ஆற்றலும், எதையும் முன்யோசனையோடு ஆற்றும் திறனும், கொண்ட குறிக்கோளில் ஒரே உறுதியாக இருப்பதுவும் பலவான் ஒருவனுக்கே சாத்தியமாகும். பலம்படைத்தவன் யார் என்பது தெரியுமா? தோற்றத்தளவில் பயில்வான்போன்றுகட்டுமஸ்தான சரீரத்தைப் படைத்தவன்தான் பலம் படைத்தவன் என மக்கள் தவருகக் கணிக்கின்றனர். தோற்றத்தளவில் உடல் உறுதி பெற்றவனுக இருந்து மனத்தளவில் அஞ்சி ஓடும் கோழிக்குஞ்சின் இதயம் படைத்திருந்தால் ஆவதென்ன? உடலைவிட உள்ளமே உறுதிபடைத்திருக்க வேண்டும். உறுதியான உள்ளத்தை உடையவன் தான் எதையும் சாதிக்கும் ஆற்றல் படைத்தவன் ஆவான். ஸ்தூலத்தைக் கட்டியாளும் தன்மை சூட்சுமத்திற்கு யாண்டும் உண்டு. நீரானது பனிக்கட்டியாகக்கிடக்கின்றபொழுது அது வெறுமனே செயலற்றுக் கிடக்கிறது. ஆனல் அதே பனிக்கட்டி உருகி நீராகிற பொழுது யானையையே உருட்டிக்கொண்டு போகும் ஆற்றல் அதற்கு வருகிறது. பிறகு அதே நீரை நீராவியாக்கி அந்நீராவியை இயந்திரங்களில் செலுத்தினல் பெரிய பெரிய காரியங்களுக்கு அது பயன்படுகிறது. உறுதியான உடல் படைத்தவனிடம் நோய் வராது. ஆனல் நோய் வந்தால் அந்த உறுதியான உடலும் சிதைந்து மெலிந்துவிடும். ஆனல் உறுதியான உள்ளம் படைத்திருந்தாலோ எந்த நிலையிலும் அவ்வுறுதி நம்மிடமிருந்து அகலாது. மகாத்மா காந்தியின் உடல் தோற்றத்தில் மிகவும் இளைத்ததுபோன்று காட்சியளித்தது. ஆனல் அந்த மெலிந்த சரீரத்தினுள்ளே எதற்கும் அசையாத உறுதியான மனம் இருந்ததை அறியாதவருண்டோ? அந்த வைரநெஞ்சத்திற்குப் பின் துணையாக இறைவன் இருந்தான் என்பதை யாரே அறிய வல்லவர்! காந்தியடிகள் சாதித்த காரியங்களனைத்துக்கும் உறுதுணையாயிருந்தது அவருடைய வஜ்ரம் போன்ற உள்ளமே.

அந்த உள்ளமே இங்கிலாந்தில் ஆடம்பர வாழ்க்கையில் திளைத்து அதில் சில நாட்கள் ஊறிக்கிடந்தது. பண்பட்டுப்போன அவர் தொண்டிலே ஈடுபட்ட பிறகு தமிழகச் சுற்றுப் பயணத்தின் பொழுது மதுரையில் மேலமாசி வீதியில் ஒரு வீட்டிலே தங்கியிருந்த பொழுது தான் தம் மேலாடையை ஒதுக்கி விட்டு ஓராடையையே உடுத்திக்கொண்டு உலகத்திலுள்ள ஏழைகளின் உள்ளங்களில் உன்னத இடம் பெற்ருர்.

காயாக இருப்பதை விடக்கனியாகஇருக்கிற போதுதான் பழம் ஒன்றுக்குப் பெருமை வருகிறது. அது போன்று இளம் வயதில் பயிற்சி பெற்றுப் பெற்று மேல் நிலைக்கு வந்து, வயது முதிர்ந்தாலும் அந்த முதிர்ச்சியிலும் ஒரு விதப் பொலிவு இருப்பதைக் காணலாம். வயது முதிர்ந்தாலும், பொக்கை வாய் தெரிந்தாலும் அவர் முகத்திலே மிளிர்ந்த சாந்தம் உள்ளம் அடைந்த பெரிய நிலையை விளக்கிய வண்ணமாயிருந்தது. இறை எண்ணத்தில் மூழ்கியுள்ள மாந்தரின் உடலிலே ஒருவிதத் தெய்வீக எழில் தோன்றுவதைக் காணலாம். காந்தியடிகளின் உள்ளம் பெரும் கோயிலாகவும், ஊனுடம்பு ஆலயமாகவும் இவ்வுலகில் உலவி வந்தன. நாமும் காந்தியடிகள் போன்றும், அவர் போன்ற பெரிய தொண்டர் போன்றும், இராமகிருஷ்ணர், விவேகானந்தர் போன்ற மூர்த்திகள் போன்றும் ஆக முடியுமா என்று பலர் வியக்கின்றனர்: இவ்வுலக மக்கள் பணத்துக்காகவும், பதவி, புகழ் ஆகிய உலக இன்பத்திற்காகவும் பைத்தியம் பிடித்து அலைகின்றனர். அது கிட்டாதபோது இவ்வுலகமே அவர்களுக்கு நரகமாகத் தென்படுகிறது. ஆனல் சான்ேறோர்கள் உலக ஆசையை ஒதுக்கி எப்போதும் இறைவனைப் பற்றிய எண்ணத்திலும், துயருற்றவர்களுக்குச் சேவை செய்வதிலும் இன்பத்தைக் காணுகின்றனர். அத்தகைய வாய்ப்புக் கிடைத்தால் எத்தனை பிறவிகள் எடுக்கவும் தயாராக உள்ளனர்.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி [என்மனத்தே
வழுவாதிருக்க வரம்தர வேண்டும்.

என்பது அன்னருடைய பிரார்த்தனையாகும்.

(தொடரும்)

குமரகுருபரர்

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.)

"அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுக்கும் தொழும்பர் உளக் கோயிற்கு ஏற்றும் விளக்கே" என ஸ்ரீ மீனாட்சியம்மையை அழைக்கிறார் குமரகுருபரர்.

தங்களின் உள்ளத்திலே வேர் ஊன்றிப் பதிந்திருக்கும் ஆணவமாகிய கிழங்கைத் தோண்டி எடுத்து எறிந்துவிடக்கூடிய, அடியார்களின் உள்ளம் என்னும் கோயிலுக்கு ஏற்றப்படுகின்ற ஒளிவிளக்கே என்கிறார்.

அகந்தை என்பது ஆணவம் ஆகும். "நான்" என்பது அகப்பற்று "எனது" என்பது புறப்பற்று. "நான்" என்று சொல்லுவது அகங்காரம். நானே பெரியவன்; எனக்கு எல்லாம் தெரியும்; என்னால்தான் எல்லாம் நடக்கிறது என எண்ணுகின்ற எண்ணம் அகந்தை ஆகும். "நான்" என்னும் நினைப்பே மிகப் பெரிய அகந்தை.

அகந்தை, உலகத்தில் தோன்றிய எல்லாரிடத்திலும் அமைந்துள்ளது. கிழங்கு மண்ணுக்குள்ளே அழுந்தி மறைந்திருக்கும்; வெளியே தெரியாது.

அகந்தை என்னும் ஆணவமும் உள்ளத்துக்குள்ளே நன்றாகப் பதிந்திருக்கும். நம்மிடத்திலே ஆணவம் உள்ளது என்னும் உணர்வு பலருக்குத் தெரியாது. இந்த உணர்வு இல்லாதவர்கள், அகந்தைக் குணத்தின் மூலமாக ஏற்படும் விளைவுகளால் வாழ்க்கையில் துன்பம் உறுவார்கள்.

மண்ணுள் நன்றாக வேர் ஊன்றிப் புதைந்து கிடக்கும் கிழங்கை எடுப்பதற்கு, மண்ணை நன்றாகத் தோண்டி, வெளியே கிழங்கை எடுக்க வேண்டும். முளையாகக் கிளைத்து வரும்போது, கண்ணுக்குப் புலனாகின்ற கிழங்கை அகழ்ந்து எடுப்பதற்குப் பல கருவிகளைப் பயன்படுத்துகின்றோம்.

அகந்தையாகிய கிழங்கும், ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் எடுக்க இயலாதபடி பதிந்திருக்கும். பக்தி என்னும் அரிய கருவியால்,அதை வேருடன் தோண்டி எடுத்து எறிய வேண்டும்; அவ்வாறு எடுத்து எறிந்துவிடுவது பக்தர்களின் இயல்பு. அவ்வாறு எடுத்த பிறகு அது மீண்டும் உருவாவதற்கு இடம் இல்லாது போய்விடுகின்றது.

இறை உணர்வு உடைய அடியார்களின் உள்ளத்தில் ஆணவத்துக்கு இடம் சிறிதும் இல்லை. ஒளி உள்ள இடத்தில் இருளுக்கு இடம் இல்லை. அதுபோன்று, இறை ஒளி உள்ள இடத்தில் ஆணவம் என்னும் இருளுக்குச் சற்றும் இடமில்லை.

அகந்தையாகிய ஆணவ அழுக்குச் சிறிதும் இல்லாதவர்கள் உண்மையான அடியார்கள். அவர்கள் தங்களுடைய உள்ளத்தை இறைவன் எழுந்தருளியிருக்கும் ஆலயமாக அமைத்துக் கொள்கிறார்கள்.

அன்பர்களின் உள்ளமாகிய ஆலயத்தில் சுடர்விட்டுப் பிரகாசிப்பவள் மீனாட்சியம்மை. உள்ளக் கோயிலிலே, தெள்ளத் தெளிவாக அம்பிகையை விளக்காக ஏற்றி வைத்துக் கொள்கிறார்கள். அஞ்ஞான இருளைப் போக்கும் ஆத்மஞானச் சுடராக, திருவருள் பிரகாசமாக, ஒளிவிளக்காகத் திகழ்பவள் மீனாட்சியம்மை.

சித்தத்துள் தித்திக்கும் தேனாக ஆரம்பநிலையில் குமரகுருபரருக்கு அனுபவம் தந்த அம்மை, எல்லாப் படித்தரங்களையும் கடந்து மேலாம் பரம்பொருள் இன்பம் நுகருகின்ற நிலையில் தீபமங்கள ஜோதியாகத் தரிசனம் தருகிறாள்.

எல்லாம் கடந்த மேலான நிலையில் சக்தி என்றோ சிவம் என்றோ பாகுபாடு ஞானியருக்குத் தோன்றாது. பரம்பொருள் ஒன்றே அவர்கள் அனுபவத்துக்குத் தெரியவரும்.

சக்தியைச் சுடராகச் சொன்னது போல, சிவத்தைச் சுடராக, ஜோதியாக, ஒளியாக ஞானியர் சொல்லியிருக்கிறார்கள்.

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்" என்கின்றபோது, சிவன் சோதி வடிவமாகக் காட்சி தருகிறான். "சொல்லக விளக்கது சோதி உள்ளது" என்னும் போது, திரு ஐந்தெழுத்தாகிய பஞ்சாட்சரம் சோதி வடிவமாக இலங்குகிறது. சிவம் என்னும் சொல்லிற்குச் செம்மை என்னும் பொருளும் உண்டு. "சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான்"

என்பது சிவன் செந்நிறத்தை உடையவன் என்பதனைக் குறிக்கிறது.

"எல்லாம் சிவன் என்ன நின்றாய் போற்றி; எரிசுடராய் நின்ற இறைவா போற்றி" என்பதில், எரிசுடராய் எம்பெருமான் இலங்குகின்றான் என்று காட்டுவதை உணர்கிறோம்.

"தூண்டு சுடர் அனைய சோதி கண்டாய்"— இதில் சிவபெருமான் சுடரும் சோதியாகத் திகழ்கிறான் என்பது விளங்குகிறது. "ஞானச் சுடர் விளக்காய் நின்றாய் நீயே" எனச் சிவபெருமான் சொல்லப்படுகிறார்.

இவையெல்லாம் அப்பர் சுவாமிகளின் திருவாக்குகள் ஆகும்.

"சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே" என்று அப்பனைப் போற்றுகிறார் மணிவாசகர். "ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே" என இறைவனை ஒளி விளக்காகப் போற்றுகிறது திரு இசைப்பா.

அம்பிகையை, உள்ளக் கோயிலிலே ஏற்றப்படும் விளக்காகக் கூறினார் குமரகுருபரர். அவ்வாறு, உள்ளக் கோயிலில் ஒளி விளக்கு ஏற்றினால் கிடைக்கப்பெறும் ஆத்ம லாபம் என்ன?

இதற்கு விடை திருமந்திரம் சொல்லுகிறது.

"விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்கு உடையார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே.

— உள்ளமாகிய கோயிலில், ஆத்ம ஜோதி என்னும் ஒளியை ஏற்றி வெட்ட வெளியாகிய பரம்பொருளை அறியவேண்டும். அந்தப் பரம் பொருளின் முன்னே பிறவி வேதனை தீரும் என்பது திருமூலர் எண்ணம்.

இத்தகைய அனுபவம் திருமூலருக்குக் கிடைத்துள்ளது. "மாலை விளக்கும் மதியமும் ஞாயிறும், சாலை விளக்கும், தனிச்சுடர் அண்ணல், உள் ஞானம் விளக்கிய நாதன் என் உள் புகுந்து ஊனை விளக்கி உடன் இருந்தானே"—நான் யார்? உள்ளம் எத்தகையது? என்று என்னைப்பற்றி அறியும் உணர்வினை, அப்பேரொளிப் பிழம்பு எனது உள்ளத்துக்குள்ளே இருந்து விளக்கியது என்கிறார் திருமூலர்.

"வானவர்க்கு வெள்ளத்தே தோன்றிக் கழுமலத்தே வீற்றிருந்து, என் உள்ளத்தே நின்ற ஒளி, மானும் மழுவும் திருமிடற்றில் வாழும் இருள்தானும், பிறையுமே தாங்கி நிற்கும்."— பிரளயகால வெள்ளத்தில், தோணிபுரம், திருக்கழுமலம் என்னும் பெயர் தாங்கிய சீர்காழிப் பதியிலே, வானவர்களுக்கு வெள்ளத்திலே வீற்றிருக்கும் பெருமானைக் காட்சி தந்த எம் இறைவன், என் உள்ளத்திலே ஒளியாகத் திகழ்ந்து நின்றான்; அவன் மானும் மழுவும் தாங்கிய சிவபிரான் என்கிறார் பட்டினத்துச் சுவாமிகள்.

"அருள்ஒளி விளங்கிட ஆணவம் எனும்ஓர்
இருள்அற, என்உளத்து ஏற்றிய விளக்கே;"
"துன்புறு தத்துவத் துரிசுஎலாம் நீக்கிநல்
இன்புற என்உளத்து ஏற்றிய விளக்கே;"
"மயல்அற அழியா வாழ்வு மேன்மேலும்
இயல்உறு என்உளத்து ஏற்றிய விளக்கே."

— அருளாகிய ஒளி சிறந்து திகழவும், ஆணவமாகிய இருள் அகலவும் என் உள்ளத்து இறைவனாகிய சுடரை ஏற்றினேன்; வறட்டுத் தத்துவ விசாரணைகளாகிய பயனற்ற விவாதங்களிலிருந்து விடுபட்டு, உண்மையான பேரின்பத்தை அடைந்திட எனது உள்ளத்தில் இறைவனாகிய சுடரை ஏற்றினேன்; அறியாமை நீங்க, அழியாத பேரின்ப பெருவாழ்வு எய்திட எனது உள்ளத்தில்இறைவனாகியசுடரைஏற்றினேன்—என்கிறார் இராமலிங்க சுவாமிகள்.

"ஓங்காரத்து உள் ஒளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு"— உள்ளத்துள்ளே இலங்கிடும் பேரொளி ஓங்காரமாகிய ஒளி எனவும், அவ்வொளியில் முருகப்பெருமான் திருவுருவைக் கண்டேன் எனவும் கந்தரலங்காரத்தில் அருணகிரிநாதர் கூறுகிறார்.

"இடம்படு ஞானத் தீயால், எரிகோள இருந்து நோக்கில்,
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே."

— உள்ளத்தில் ஏற்பட்ட ஞான ஜோதியால், முருகப்பெருமான் தந்தை சிவபெருமானின் திருவடிகளைக் காணலாம் எனத் தமது சுயானுபவத்தை இயம்புகின்றார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

சிவபெருமானும், அம்பிகையும், முருகப் பெருமானும் ஜோதி வடிவாய் இலங்குவதை நாயன்மார்கள் தங்கள் அனுபவத்தில் கூறி இருப்பது போன்று வைணவ பக்தர்களான

ஆழ்வார்களும் தங்கள் அனுபவத்தை இயம்புகின்றார்கள். "மின் உருவாய் முன் உருவில் வேதம் நான்காய் விளக்கு ஒளியாய் முளைத்து எழுந்த திங்கள் தானாய்" விளக்கு ஒளியாய்த் திகழ்பவன் திருமால் என்கிறார் திருமங்கையாழ்வார். "ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு" என்கிறார் பூதத் தாழ்வார்.

அங்கத்தை மண்ணுக்கு ஆக்கி ஆர்வத்தை ஆண்டவனுக்குப் படைத்த அன்பர்கள் அனைவரும் இறையை ஒளியாக உள்ளத்திலே இருத்திப் போற்றியவர்கள் ஆவார்கள்.

"அனாதியாகப் பற்றியிருந்த மலங்கள் உன் அருள் வெள்ளத்தில் கழுவி நீக்கப்பட்டன; கடைசியில் என் பிறவி நோயும் தீர்ந்தது" என்று தேவி உபாசனையால் பெறும் பேற்றை அபிராமிப்பட்டர் கூறுவது இங்கே கருதத் தக்கது. சித்தியடைந்த உபாசகர்கள், யாவற்றிலும் தேவியின் உருவத்தையே கண்டு அன்பு பூண்டு ஒழுகுவர்.

"அகந்தைக் கிழங்கு" என்பதற்கு, உயிரை அனாதியாகப் பற்றியிருக்கும் மும்மலங்கள், அவற்றால் விளைகின்ற காமக்குரோதாதிஷ்ட வர்க்கங்கள், விபர்யம் [சிப்பியில் வெள்ளியைக் காணும் விபரீத புத்தி] விகல்பம் [சந்தேகம்] நித்ரை அல்லது அபாவம் [உண்மையை அறியாது பொய்யில் ஆழ்ந்து கிடத்தல்] ஸ்மரணம் [ஞாபக சக்தி] ஆகிய நான்கு மனோ விகாரங்கள் இவற்றைக் குறிக்கும் என்றும் சொல்லுவது உண்டு.

சைவ சமயாச்சார்யார்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் அம்மையப்பனை அபேதமாய் வழிபட்டவர்கள் ஆவார்கள். அவர்களுடைய பசுகரணம் மாறி, பதிகரணம் ஆனவர்கள். "அவனே தானே" ஆகிய சித்தி அடைந்தவர்கள்.

அவர்களைப் போன்று குமரகுருபர சுவாமிகளும் சித்தி கைவரப் பெற்றவர்கள் ஆவார்கள்.

"எறிதரங்கம் உடுக்கும் புவனம் கடந்து நின்ற ஒருவன் திரு உள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிர் ஓவியமே!" என்று மீனாட்சியம்மையைக் குறிப்பிடுகின்றார் குமரகுருபரர்.

கடல் சூழ்ந்த இந்த உலகத்திற்கு அப்பாற்பட்டவனாய் நிற்கும் ஒப்பற்ற இறைவன், தனது உள்ளத்தில் அழகு பொங்கி வழியும் படியாக, உயிர் ஓவியமாக அம்பிகையைத் தீட்டி வைத்து மகிழ்கிறான். எப்பொழுதும் அம்பிகையை மனத்தில் இறைவன் எண்ணிக் கொண்டிருக்கிறான் என்பது பொருள்.

இறைவனுடைய சங்கல்ப மாத்திரத்தில் தோன்றியவள் சக்தி. ஆதலால், அவளுக்குச் "சித்சக்தி" என்னும் பெயர் வழங்கப்படுகிறது.

குமரகுருபர சுவாமிகள் பாடியருளிய நூல்களுள் ஒன்று மதுரைக் கலம்பகம். கலம்பகம் என்னும் சொல்லுக்குக் கதம்பம் என்பது பொருள். பல வண்ண மலர்களால் தொடுக்கப்படுவது மலர்க் கதம்பம். அதுபோன்று, பல வகைப் பாடல்களால் ஆன நூல் கலம்பகம்.

தமிழில், பாடல்களின் எண்ணிக்கையில் குறைந்த அளவில் கொண்ட நூல்களையெல்லாம் வகைப்படுத்தித் தொகுத்திருக்கிறார்கள். இவ்வகை நூல்களின் தொகுதிக்குப் பிரபந்தங்கள் என்பது பெயர். தமிழில் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் உண்டு. இச்சிற்றிலக்கியச் செல்வங்களுள் ஒன்று கலம்பகம்.

மதுரைக் கலம்பகத்தில் பாட்டுடைத் தலைவராக இலங்குபவர் மதுரையம்பதியில் எழுந்தருளியுள்ள சொக்கநாதர் ஆவார். கலம்பக நூலுக்கு உரிய புயவகுப்பு, தவம், அம்மானை, சித்து, ஊசல், பிச்சியார் முதலான பதினெட்டு உறுப்புக்களும் இந்நூலில் அடங்கியுள்ளன.

மதுரைக் கலம்பக நூலைப்பற்றிப் பாடவந்த குமர குருபரர் மதுரையில் எழுந்தருளியுள்ள சொக்கநாதரை இவ்வாறு போற்றுகின்றார்.

"விண் அரசும் பிற அரசும் சிலர்எய்த விடுத்து ஒருநீ
பெண் அரசு தரக்கொண்ட பேர்அரசு செலுத்தினையே."

—விண் அரசாகிய இந்திரலோகப் பதவி, பிற அரசுகளாகிய பிரமலோகம், வைகுண்டம் ஆகியவற்றை ஆளக்கூடிய ஆட்சி உரிமைப் பதவி இவற்றைத் தேவேந்திரனுக்கும், பிரம்மனுக்கும், திருமாலுக்கும், அஷ்டதிக்குப் பாலகர்களுக்கும் எம்பெருமானே! நீ வழங்கி விட்டாய். பெண்களுள் சிறந்தவளாகிய மீனாட்சியம்மை அரசாட்சிதர, அந்த அரசாட்

சியை ஏற்றுக்கொண்டு நீ ஆண்டு வருகின்றாய்! இது உனது பெருமைக்கு ஏற்றது ஆகுமா?

மீனாட்சியம்மை மலயத்துவச பாண்டிய மன்னன் மகளாகப் பிறந்தாள். தடாதகைப் பிராட்டி என்னும் திருப்பெயர் கொண்டு வளர்ந்து வந்தாள். பிறகு, அபிஷேகவல்லி என்னும் மகுடாபிஷேகப் பெயர் ஏற்று, மகுடம் சூடிப் பாண்டிய நாட்டை ஆண்டுவந்தாள்.

சிவபெருமான், சுந்தரபாண்டியன் என்னும் திருநாமம் கொண்டு மீனாட்சியம்மையைத் திருமணம் செய்துகொண்ட பிறகு, தம் கணவருக்கு ஆட்சியை அளிக்க, அவர் அதனை ஏற்றுக்கொண்டு அரசராக ஆட்சிபுரிந்து வந்தார்.

இதனையே குமரகுருபரர் இங்கே, தேவலோகப் பதவி, சத்தியலோகப் பதவி, வைகுண்டப் பதவி ஆகிய பதவிகளை மற்றவர்களுக்கு வழங்கிவிட்டு, ஒரு பெண் வழங்கிய அரசாட்சியை நீ ஏற்றுக்கொண்டிருக்கிறாய் என்கிறார்:

"தேப்பழுத்த கற்பகத்தின் நறுந்தெரியல்
சிலர்க்கு அமைத்து
வேம்பு அமுத்தும் நறைக்கண்ணி முடிச்சென்னி
மிலேச்சினையே!"

—தேவலோகத்தில் முளைத்தெழுந்த சிறப்புப் பொருந்திய கற்பக விருட்சத்தின் இனிமையான மலர்மாலையைத் தேவர்கள் சிலர் அணிந்துகொள்ளுமாறு வழங்கிவிட்டு, வேப்ப மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை நீ தலையிலே சூட்டிக்கொண்டாய்!

சுந்தரபாண்டிய மன்னனைச் சிவபெருமான் வந்த காரணத்தால், பாண்டிய மன்னர்க்குரிய வேப்ப மாலையைத் தலையிலே அணிந்துகொண்டார்.

"பொழிந்து ஒழுகும் முதுமறையின் சுவைகண்டும்
புத்தமுதம்
வழிந்து ஒழுகும் தீம்தமிழின் மழலைச்செவி
மடுத்தனையே"

—மிகவும் தொன்மையான வேத நூல்களிலிருந்து பெருக்கெடுத்து வரும் சிறந்த இன்பத்தை அனுபவித்துப் பார்த்தும், புதிய அமுதம் போன்ற இனிமை பொருந்திய தமிழ் மொழியின் மழலைச் சொல்லை நீ திருச்செவியில் ஏற்றருளினாய்! எனச் சிவபெருமானிடத்துக் கூறுகிறார் குமரகுருபரர்.

வடமொழி, தென்மொழி என்னும் வேறுபாடு இறைவனைப் பொறுத்தமட்டில் இல்லை. எம்மொழியும் அவனுக்கு உகந்த மொழியே ஆகும்.

"அவன் அவள் அதுஎனும் அவைகளில் ஒரு
பொருள்
இவன் என உணர்வுகொடு எழுதரும் உருவினை"

—இறைவனுடைய வடிவம் எத்தகையது? அவன் என்னும் ஆண்பாலில் கூறமுடியாது. அவள் என்னும் பெண்பாலில் கூறமுடியாது. அது என ஒன்றன் பாலில் சொல்ல இயலாது. உயர்திணை என்றோ அஃறிணை என்றோ திணை அறிய இயலாதவன் இறைவன். இறைவன் எத்தகைய பொருளாக இருக்கிறான் எனச் சாதாரண மானிட அறிவால் உணர்ந்து சொல்லுவதற்கு இயலாத வடிவத்தை உடையவன் அவன்.

சிவம், சக்தி, நாதம், விந்து ஆகிய நான்கும் இறைவனுக்கு அருவ வடிவம். அதாவது உருவம் அற்ற வடிவம் அருவ வடிவம் ஆகும்.

மகேஸ்வரன், ருத்ரன், திருமால், பிரமன் ஆகிய நான்கும் இறைவனுக்குரிய உருவ வடிவங்கள் ஆகும்.

சதாசிவம், இறைவனுக்கு உரிய அருஉருவ வடிவம் ஆகும். ஒருவிதத்தில் உருவமாகவும், ஒருவிதத்தில் உருவம் அற்றதாகவும் திகழ்வது அருஉருவ வடிவம் ஆகும்.

அருவம், உருவம், அருவுருவம் என்னும் மூன்று உருவங்களையும் சிவன் தன் வடிவங்களாக உடையவன். யோகியரும், சித்தரும் தாங்கள் நினைத்த உருவத்தைத் தாங்களே எடுப்பதைப்போன்று, இறைவனும் தன் திருவுள்ளத்தில் பொருந்திய உருவத்தைத் தானே எடுப்பான்.

பக்தர்களின் திருப்திக்காக அவர்கள் விரும்பும் வடிவங்களில் இறைவன் அவர்களுக்குக் காட்சியளிக்கின்றான். வடிவத்தைக் கடந்த நிலையில் அவன் அகண்ட சச்சிதானந்தமாய் இருக்கின்றான். எனவே உருவத்துடனும், உருவமற்ற நிலையிலும் இறைவனை வைத்து வழிபடலாம்.

8—3—81 ஞாயிறன்று ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஜன்ம தினமாகும்.

அமரநாத யாத்திரை

(39ஆம் பக்கத் தொடர்ச்சி)

[சுவாமி குஹானந்தர்]

பத்தொன்பதாம் தேதி காலை தீன்மூர்த்தி பவனுக்குச் சென்றோம். இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களின் நிகழ்ச்சிகளைக் காட்டும் அரிய புகைப்படங்கள் கண்காட்சியாக ஆங்கே வைக்கப்பட்டிருந்தன. ஜவஹர்லால் நேருவின் அலுவலக அறை, மரணகாலத்தில்அவர் இருந்த அறை ஆகியவற்றைப் பார்வையிட்டோம். அங் கிருந்து ராஜ்காட் வந்து சேர்ந்தோம். பெரிய புல்வெளியின் நடுவே காந்திஜியின் சமாதி அழ காகக் காணப்பட்டது. அதன்மேல் ஹே ராம் என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அணையாத விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருந் தது. பிறகு செங்கோட்டைக்குச் சென்றோம். அங்கு தர்பார்ஹால், முத்துமசூதி ஆகியவற் றைப் பார்த்துவிட்டு ரயில் நிலையத்திற்குத் திரும்பினோம். மூன்று மணிக்கு ஜம்முதாவுக் குப் புறப்பட்ட பிரத்தியேக எக்ஸ்பிரஸில் எங்கள் பெட்டி இணைக்கப்பட்டது.

மூன்று நாட்கள் இடைவெளிக்குப் பிறகு பல மணிநேரம் தொடர்ந்து நாமஜபம், பஜனை, பிரார்த்தனை செய்து நேரத்தை நல்ல விதமாகக் கழிக்க முடிந்தது. சோனிபட், அம்பாலா, ஜலந்தர், லூதியானு, கதுவா வழியாக ரயில் சென்று மறுநாள் இருபதாம் தேதி பிற்பகல் 1-30 மணிக்கு ஜம்முதாவி அடைந்தோம். ஜம்முதாவி கடல் மட்டத்திலிருந்து 305 மீட்டர் உயரத்தில் உள்ளது. ஜம்மு பிரதேசத்தைப் பற்றி அங்கு ஒரு கதை வழங்குவதாவது : "அயோத்தி மன்னன் ஸ்ரீ இராமச்சந்திரபிரான் மரபின் வழிவந்த ஜம்புலோசனன் என்ற அரசன் ஒரு சமயம் இப்பிரதேசம் வந்தபோது ஓர் அதிசய நிகழ்ச்சியைக் காணலுற்றான். இங்கு ஒரு குளக்கரையில் ஒரு சிங்கமும் ஆடும் பக்கம் பக்கம் நின்று நீர் அருந்திக்கொண்டிருந்தன. இதைக்கண்டதும் அம்மன்னன் இந்த இடத்தில் விலங்குகள் தங்கள் கொடிய இயல்பை மறந்து சாந்தமாக இருப்பதென்றால் இந்த ஸ்தலத்தில் மகிமை இருக்க வேண்டும் என்று எண்ணி இங்கு ஒரு நகரை அமைத்தான். அது அவன் பெயரால் ஜம்மு என்று அழைக்கப்படுகிறது.

மாலை நான்கு மணிக்கு டாங்காக்கள் மூல மாக ஐந்து கி.மீ. தூரத்திலுள்ள ஸ்ரீ ரகுநாதஜி மந்திரையடைந்தோம். ராஜா ரந்தீர்சிங் என்ற மன்னனால் கட்டப்பட்ட இந்த ஆலயத்தில் ஒரு கோடி சாலக்கிராமங்கள் உள்ளன. அந்த ஆலயத்தில் அமர்ந்து கூட்டு வழிபாடும் சிறிது நேரம் தியானமும் செய்தோம். மூலஸ்தானத்தில் ஸ்ரீ ராமர், ஸ்ரீ லக்ஷ்மணர், ஸ்ரீ சீதை ஆகியோரின் விக்கிரஹங்கள் ஆறு அடி உயரத்தில் சலவைக் கல்லால் செய்து அமைக்கப்பட்டிருக்கின்றன. அனைவருக்கும் இனிப்பு பிரசாதமாகக் கோவிலில் இருந்து வழங்கப்பட்டது. பிறகு அருகில் இருந்த ஸ்ரீ சங்கரர் மந்திர்க்குச் சென்றோம். மூலஸ்தா னத்தில் ஏழு அடி உயரமுள்ள ஸ்படிகலிங்கம் உள்ளது. அதைச் சுற்றிலும் பலவித மரகத லிங்கங்கள் உள்ளன. மூலஸ்தானத்திலேயே அமர்ந்துகூட்டுவழிபாடு செய்துவிட்டு ரயில்வே ஸ்டேஷனுக்குத் திரும்பினோம். காஷ்மீரில் ஸ்ரீ நகருக்கு அடுத்தபடியாக உள்ள நகரம் ஜம்முதாவி ஆகும். இங்கு இந்துக்கள் அதிகம். முன்பு காஷ்மீர் அரசர்கள் குளிர்காலத்தில் ஜம்முவிலும், கோடைக்காலத்தில் ஸ்ரீ நகரிலும் தங்கி வந்திருக்கிறார்கள்.

காஷ்மீரம்

காஷ்மீர நாட்டை 'பூலோகத்தின் சுவர்க்கம்' என்றால் மிகையாகாது. பனிபோர்த்த வானளா விய மலைச்சிகரங்களும், 'சலசல'வென்று ஒலித் துக்கொண்டு விரைந்தோடும் நதிகளும், வைரத் தைப் பொடியாக்கி வாரி இறைத்தாற் போலக் காட்சிகொடுக்கும் நீர்வீழ்ச்சிகளும் பல வண்ண முள்ள மலர்கள் அடர்ந்த பூங்காக்களும், தேவ தாரு, சீல், சினர் மரங்கள் அடர்ந்த காடுகளி லிருந்து வரும் மணம் நிறைந்த காற்றும், ஆழம் காணமுடியாத அழகான ஏரிகளும் உண்மை யிலேயே மனிதனுக்குச் சுவர்க்கத்தையே நினைவு படுத்துகின்றன.

வரலாற்று உண்மை ஒன்று உண்டு. மொக லாய மன்னன் ஜஹாங்கீர் காஷ்மீரத்திலிருந்து டில்லி நோக்கி வந்து கொண்டிருந்தான். வழி

யிலேயே கடும் நோயுற்ருன். மன்னன் பிழைக்க மாட்டான் என்பதை அறிந்த மந்திரிகள் அவனது கடைசி விருப்பம் என்னவென்று கேட்டனர். அதற்கு அவன் 'காஷ்மீர்' என்று கூறினன். இந்த 'காஷ்மீர்' என்ற சொல்லைக் கொண்டு பாரசீகக் கவி ஓர் அழகான கவிதை இயற்றினன்.

இறந்த பிறகு சொர்க்கத்தைக் கண்டவர் எவரும் விண்டிலர். ஆனல் உயிருள்ளபோதே ஒருவர் காஷ்மீரத்தை ஒருமுறை கண்டுவிட்டால், அவர் மன்னராக இருந்தாலும் சொர்க்கத்தையா நாடுவார்! இல்லை, காஷ்மீரத்தையே காணவிழைவார். அதனலன்ரோ பாதுஷா ஜஹாங்கீர் 'காஷ்மீர்' என்று பகர்ந்தார்.

காஷ்மீரம் இமவான் என்ற மலை அரசனின் மார்பில் கிடக்கும் மலைத்தொடராகிய மணிமாலையில் நடுவிலுள்ள விலைமதிக்கவொண்ணு ரத்தினப்பதக்கம்! காஷ்மீரப்பள்ளத்தாக்கு தென்மேற்கில் கிழக்கு நோக்கிச் செல்லுகிறது. இது 84 மைல் நீளமும் 25 மைல் அகலமும் உள்ளது. 'பஞ்சால்' மலைத்தொடர் இந்த அழகிய பள்ளத்தாக்கைப் பஞ்சாபிலிருந்து பிரிக்கிறது.

பதினன்காம் நூற்ருண்டிற்குப் பிறகு காஷ்மீரம் ஹிந்து மன்னர்களின் ஆட்சியிலிருந்து முஸ்லீம் மன்னர்களின் ஆட்சிக்கு மாறிற்று. அக்பருக்குப் பிறகு ஜஹாங்கீரும் அவன் மைந்தன் ஷாஜஹானும் இங்குப் பல அழகிய கட்டடங்களையும், பூங்காக்களையும் அமைத்தனர். 'டல்'ஏரி அருகிலுள்ள ஷாலிமார், நஸீம், நிஷாத் பூங்காக்கள் இன்றும் அதற்குச் சான்று பகருகின்றன. மொகலாயர்களின் காலத்தில் 'ஜஜியா' என்ற (தலைவரி) விதிக்கப்பட்டு ஹிந்துக்கள் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டனர். பெரும்பாலோர் பலவந்தமாக மதமாற்றம் செய்யப்பட்டனர். ஆங்கிலேயர் தம் ஆட்சியின்பொழுது டோக்ரா சர்தார் மஹாராஜா குலாப்சிங்கு என்பவருக்குக் காஷ்மீரத்தை எழுபத்தைந்து இலட்சம் ரூபாய்க்கு விற்றுவிட்டனர்.

1947ல் இந்தியா விடுதலை பெற்றதும் பாகிஸ்தானின் உதவிபெற்று 'கபாயலீ' என்ற கொள்ளையர்கள் காஷ்மீரத்தைச் சூறையாடினர். அந்நிலையில் மஹாராஜா ஹரிசிங்கு காஷ்மீரத்தை இந்தியாவுடன் இணைத்துவிட்டார். அன்றிலிருந்து பாரத அரசு நாட்டின் மகுடம் போன்ற காஷ்மீரத்தைப் பாதுகாத்து வருகிறது.

21ஆம்தேதி காலை 7 மணிக்கு ஜம்மு காஷ்மீர் அரசுபஸ்கள் இரண்டின் மூலமாக ஸ்ரீநகருக்குப் புறப்பட்டோம். அமரநாத் சென்று திரும்பும் வரை பத்து நாட்களுக்கு இனி ரயில் பிரயாணம் இல்லை என்பதால் மிகவும் அத்தியாவசியமான சில சாமான்களை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றவைகளை எங்கள் பெட்டியிலேயே வைத்து விட்டோம். ரயில் பெட்டிக்கு இருவரைக் காவலுக்கு அமர்த்திவிட்டுச் சென்ருேம். ஜம்மு தாவியிலிருந்து ஸ்ரீ நகர் 305 கி. மீ. தூரத்தில் உள்ளது. செல்லும் வழி மலைப்பாதையாக இருந்தது. ஆனலும் அதிக வளைவுகள் இல்லை. இயற்கை அழகும், நல்ல சீதோஷ்ண நிலையும் இருந்ததால் களைப்பு ஏற்படவில்லை. வழி நெடுகிலும் ஆங்காங்கே சிற்றுண்டிச் சாலைகள் உள்ளன. தேவைப்பட்ட இடத்தில் பஸ்ஸை நிறுத்தி யாத்திரிகர்கள் தாகசாந்தி செய்து கொள்ள வசதியாக உள்ளது.

ஜம்முதாவியிலிருந்து 127 கி. மீ. தூரத்தில் உள்ள படோட்என்னும்ஊரில் உள்ளபயணியர் விடுதியைப் பகல் ஒரு மணிக்கு அடைந்தோம். அங்கு எங்களுடன் எடுத்துச் சென்றிருந்த புளி சாதம், தயிர் சாதம் ஆகியவற்றைச் சாப்பிட்டோம். அங்கு இடவசதி, தண்ணீர் வசதி நன்ருக இருந்தன. உடனே ஸ்ரீநகரை நோக்கிப் புறப்பட்டோம். சுமார் மாலை நான்கு மணிக்கு 'நேரு குகைப்பாதை'யை அடைந்தோம். உலகிலேயே நீண்ட குகைப்பாதைகளில் இது முக்கியமானது ஆகும். இதன் நீளம் 2547 மீட்டர். போக ஒரு பாதையும் வர ஒரு பாதையுமாக அமைத்திருக்கிருர்கள். உள்ளே பகலிலும் மின் விளக்கு எரிந்துகொண்டிருக்கிறது. உள்ளே தண்ணீர் வடிந்துகொண்டிருக்கிறது.

குகை வழிப்பாதையைக் கடந்த உடனே மலைப்பாதை முடிந்து காஷ்மீர் பள்ளத்தாக்கை அடைந்தோம். சமவெளியில் பாதை செல்கிறது. சாலையின் இருமருங்கிலும் மிக உயர்ந்த பைன் மரங்கள் அழகாக ஓங்கி வளர்ந்து கண்ணுக்கு இனிய காட்சி கொடுத்துக்கொண்டிருக்கின்றன.

(தொடரும்)

ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் கும்பாபிஷேகமும் குருபூஜையும்

திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் இராமநாதபுரத்தில் ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் திருப்பணியைச் சென்ற ஆண்டில் துவக்கி இவ்வாண்டு பூர்த்தி செய்தது. 29—1—81 புதன்கிழமையன்று ஸ்ரீ தாயுமான சுவாமிகளின் குருபூஜையாகும். அப்புண்ணிய தினத்தில் கோயில் கும்பாபிஷேகமும் சிறப்பாக நடந்தேறியது. தமிழ் நாட்டின் பலபகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் கும்பாபிஷேக விழாவில் பங்குகொண்டு விழாவைப் பக்திபூர்வமாக நிறைவேற்றி வைத்தார்கள். கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பைப் பெறுதமக்களுக்குக் கும்பாபிஷேக விழாவைப்பற்றிய விவரணத்தை இக்கட்டுரையில் வெளியிடுகின்றோம். பக்தர்களும், பக்திமதிகளும் இக்கட்டுரையைப்படித்துக் கும்பாபிஷேகத்தில் தாங்களும் கலந்துகொண்டதாகப் பாவித்து ஆத்மசாந்தி அடைவார்களாக.

22—12—80 திங்கட்கிழமை அதிகாலை 3-30 மணியிலிருந்து 4-30 மணிவரையில் தபோவனத் துறவிகள் ருத்திரயக்ஞமும், விரஜா ஹோமமும் செய்து தாயுமானசுவாமிகள் சமாதி மூலஸ்தானத்தில் மூர்த்திப் பிரதிஷ்டை செய்தார்கள். அன்று முதல் அங்கு நித்திய வழிபாடு முறையாக நடைபெற்று வருகிறது.

ஜனவரி மாதம் 28, 29 தேதிகளில் தாயுமானவர் கோவில் கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் திட்டமிட்டபடி முறையாக நடந்தன.

"மூர்த்திதலம் தீர்த்தம் முறையால் தொடங்கி
[னர்க்கு ஓர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும்
[பராபரமே"

என்பது தாயுமானவர் வாக்கு. இடத்தின் மகிமையும், மூர்த்தியின் மகிமையும், தீர்த்தத்தின்மகிமையும் ஓர் இடத்தைப் புண்ணிய ஸ்தலம் ஆக்குகின்றன. தாயுமானவர் தவம் செய்து அவ்விடத்தில் சமாதி அடைந்திருப்பதால் அவ்விடம் மகிமையுடையது ஆகிறது. ருத்திர ஹோமமும், விரஜா ஹோமமும் செய்து ஆங்கு மூர்த்திப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதால் அம்மூர்த்தி மகிமை உடையதாகிறது. கும்பாபிஷேகத்தன்று கங்கை, காவேரி, வைகை, தாமிரபரணி, கோடிக்கரை தீர்த்தம், குற்றால அருவி முதலியவைகளிலிருந்து தீர்த்தம் கொண்டுவரப்பட்டு, அவைகள் ஐந்து கும்பங்களில் கலந்து வைக்கப்பட்டன. ஏழு புண்ணிய நதிகளின் தீர்த்தங்களையும் அக்கும்பங்களில் ஆவாஹனம் செய்யப்பட்டது. எனவே தீர்த்தமும் மகிமையுடையதாகிறது. தாயுமானவர் கருத்துப்படி மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றும் ஆங்கு மகிமையுடையவைகளாக அமைந்திருக்கின்றன.

29-1-81 அதிகாலை 4 மணியிலிருந்து 5 மணிவரையில் தபோவனத்துறவிகள் ருத்திரயக்ஞமும், விரஜா ஹோமமும் செய்தார்கள். காலை 5-30 மணிக்கு ஐந்து கும்பங்களில் கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, சிந்து, காவேரி ஆகிய ஏழு புண்ணிய நதிகளும், மற்றுமுள்ள புண்ணிய நதிகளும் எழுந்தருளச் செய்யப்பட்டன.

28-1-81 காலை ஆறுமணியிலிருந்து 29-1-81 காலை ஆறுமணிவரையில் வேதங்களின் சாரமாகிய "ஓம் நமசிவாய" என்னும் பஞ்சாட்சர ஜப யக்ஞம் இடைவிடாது தொடர்ந்து நிகழ்ந்தது. ஜப யக்ஞத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டார்கள். உரு ஏறத் திரு ஏறும் என்பது ஆப்தவாக்கியம். ஜப யக்ஞத்தின் மூலம் பஞ்சாட்சர உரு ஏற ஏற அவ்வருள் கோட்டம் மேலும் புதுப்பிக்கப்பட்டது.

இனி, வாசகர்களைக் கும்பாபிஷேக நிகழ்ச்சிகளுக்கு அழைத்துச் செல்கின்றோம். நிகழ்ச்சிகளைக் காணுங்கள். பக்தகோடிகள் ஆர்வத்துடன் கும்பாபிஷேகத்தைப் பார்த்து நிற்கும் கூட்டத்தைக் காணுங்கள். அவர்களுடைய முகவிலாசத்தில் ஆனந்தத்தின் அறிகுறி இருப்பதைக் காணுங்கள். இவ்வருட்காட்சியிலே உங்கள் மனதை ஈடுபடுத்தினால் போதுமா? துறவிகள் மூவர் மூன்று கும்பங்களை எடுத்துக்கொண்டு தாயுமானவர் ஆலயத்தை வலம் வருவதைக் காணுங்கள். மேளவாத்தியம் மங்கள இசையைக் கிளப்புவதைக் காதால் கேளுங்கள். ஆலயத்தை வலம் வந்த மூன்று துறவிகளும் கும்பங்களுடன் கோயில் கோபுரக் கலசத்தை நோக்கி ஏறிக்கொண்டு

இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஒருமுகப்பட்ட மனதுடன் கோயில் கலசத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் காட்சியைக் கண்டு களியுங்கள். சூரியன் உதயமாகப்போகிறது. கும்பாபிஷேகம் நிகழ்கிறது. மூன்று துறவிகளும் கும்பங்களிலுள்ள தீர்த்தங்களைக் கலசத்துக்கு அபிஷேகம் பண்ணுகிறார்கள். அடுத்து, கலசத்துக்குத் தீபாராதனை நிகழ்கிறது. பக்தகோடிகள். "நம: பார்வதி பதயே, அரஹர மஹாதேவா" என்று பக்தி பரவசத்துடன்அருள்முழக்கம் செய்வதைக் கேளுங்கள். பக்தர்களுடைய உள்ளங்களெல்லாம் பரவச நிலையிலிருந்து கும்பாபிஷேகத்தைப் பார்க்கும் அக்காட்சியைக் கண்டு களியுங்கள். இனி கோபுரக் கலசத்துக்கு அபிஷேகம் நிகழும் போது ஆலயத்திலுள்ள மூர்த்திக்கும் துறவி ஒருவர் கும்பத்திலுள்ள தீர்த்தத்தை அபிஷேகம் செய்கிறார். அதையும் கண்டு களியுங்கள். கண்ணுக்கும் காதுக்கும் உங்களுக்கு அருள் விருந்து கிட்டியது. இனி உங்கள் மேனியும் புனிதமடைய வேண்டுமல்லவா? புண்ணிய தீர்த்தங்களும், பக்தர்களின் அருள் நோக்கும், ஜப யக்ஞத்தின் மகிமையும் சேர்ந்து கோபுரக் கலசத்தை அபிஷேகம் செய்தன. அவ்வபிஷேக தீர்த்தம் உங்கள் மேனியில் பட்டு நீங்கள் புனிதமடைய வேண்டுமல்லவா? அக்காட்சியையும் உங்கள் மனக்கண் முன் கொண்டு வருகிறோம். ஆலயத்துக்குள்ளே, சந்நிதியின்முன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் பக்தர்களுக்குக் கும்பாபிஷேகத் தீர்த்தத்தைப் புரோட்சணம் செய்கிறார்கள். அப்புரோட்சணத்தைப் பெற்றுக் கொள்ளப் பக்தர்கள் பக்தி பரவசத்துடன் செல்லும் காட்சியைக் காணுங்கள். மக்கள் பெருங்கூட்டம் ஆலயத்துக்கு வெளியில் அமைதியான முறையில் புரோட்சணத்துக்காகக் காத்துக் கொண்டு அமர்ந்திருக்கிறார்கள். இரண்டு துறவிகள் அப்பக்தர்களுக்குப் புரோட்சணம் செய்யும் காட்சியையும் கண்டு களியுங்கள். வாசகர்கள் தங்கள் மனதில் மேற்கூறிய காட்சிகளைக் கொண்டுவந்து இன்பமடைவார்களாக.

இனி, அன்று நிகழ்ந்த தாயுமானவர் குருபூஜை விழா நிகழ்ச்சிகளையும் காண்போம். கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்ட வெளியூர் பக்தர்களும் பக்திமதிகளும் சுமார் ஆயிரத்தைந்நூறு பேர் தாயுமானவர் தபோவனத்தில் சிற்றுண்டி எடுத்துக் கொண்டார்கள். சிற்றுண்டிக்குப் பின் காலை 7-30 மணியிலிருந்து 9 மணிவரையில் ஸ்படிக லிங்கத்தின் வாயிலாகத் தாயுமான சுவாமிக்குப் பால், தேன், இளநீர், பஞ்சாமிர்தம் முதலிய அபிஷேகங்கள் நிகழ்ந்தன. அபிஷேகப் பொருள்கள் யாவும் பக்தர்களுக்குப் பிரசாதமாக விநியோகிக்கப்பட்டன. அபிஷேகம் நிகழ்ந்துகொண்டிருக்கும் பொழுது பக்தர்கள் பஜனையும் செய்தார்கள். காலை 9 மணியிலிருந்து 9-15 மணிவரையில் தாயுமானவர் பாடல் சமர்ப்பண நிகழ்ச்சி நடந்தேறியது. காலை 9-15 மணியிலிருந்து 11-45 மணிவரையிலும் சிவசஹஸ்ரநாம அர்ச்சனை நிகழ்ந்தது. அர்ச்சனையில் ஒவ்வொரு நாமம் சொல்லும்பொழுது பக்தர்களும் பக்திமதிகளும் வரிசையாக நின்று தனித்தனியாகத் தாயுமானவருக்கு மலர் சாத்தி வணங்கினர்கள். காலை 11-45 மணிக்குத் தாயுமான சுவாமிக்குத் தீபாராதனை நிகழ்ந்தது. தீபாராதனைக்குப் பின் சமாராதனை நிகழ்ந்தது. சமாராதனையில் வெளியூர் மக்களும் உள்ளூர் மக்களுமாகச் சுமார் மூவாயிரத்தைந்நூறு பேர் பிரசாதம் எடுத்துக்கொண்டனர். ஜபயக்ஞத்தில் பயன்படுத்தப்பட்ட அட்சதை உணவாகத் தயாரிக்கப்பட்டுப் பிரசாதமாக வழங்கப்பட்டது. பிற்பகல் 4 மணியிலிருந்து 5 மணிவரை பக்தர்களும் பக்திமதிகளும் பக்திப் பரவசத்துடன் பஜனை பண்ணினர்கள். மாலை 5-30 மணியிலிருந்து இரவு 7-30 மணிவரையில் தெள்ளி எடுத்த சொற்பொழிவாளர்கள் நான்கு பேர் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் தலைமையில் தாயுமானவரைப் பற்றியும், தாயுமானவர் பாடலைப் பற்றியும் விரிவுரைசெய்து செவிக்கு உணவு வழங்கினர்கள். ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் கூட்டத்தின் தலைமை உரையிலும், முடிவுரையிலும் அருள் கோட்டத்தை மக்கள் பயன் படுத்தவேண்டிய விதத்தையும் அருள் கோட்டத்தில் நிகழப்போகும் ஞான யக்ஞத்தைப் பற்றியும் விளக்கமாக எடுத்துக் கூறினர்கள். இரவு 8மணிக்கு மங்களத்துடன் குருபூஜைவிழா முடிந்தது.

குறிப்புகள்

கற்றவர்களும் கிராமசேவையும்

கற்றவர்கள் கிராமப்பணிவிடையில் ஈடுபடுதல் கிராம முன்னேற்றத்திற்குப் பயன்படும். இவ்வாண்டு தைப் பொங்கல் அன்று அத்தகைய திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டது.

திருச்சி கைலாசபுரத்தில் இருந்து பாய்லர் பிளாண்ட் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், அன்பர்களுமாக இருபது பேர் "ஹரே ராம ஹரே ராம ராமராம ஹரே ஹரே; ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே" என்ற நாமஜபம் சொல்லிக் கொண்டு கிருஷ்ணசமுத்திரம் என்ற சேரிக்குச் சென்றோம். ஆங்கு நர்சரிப் பள்ளி ஒன்று அமைப்பதற்காக இருந்த புறம்போக்கு நிலத்தில் செடிகொடிகளும் முள்ளும் புதர்களும் மூடிக்கிடந்தன. அவற்றை வெட்டிச் சுத்தம் பண்ணிக்கட்டடம் அமைப்பதற்கேற்பத் திருத்தி அமைக்கவேண்டும் என்று எண்ணிச் சென்றோம். ஆனால் அவ்வூர்ப் பொதுமக்கள் நாங்கள் அப்பகுதியைத் திருத்த வருகின்றோம் என்பதை முன்கூட்டியே அறிந்து அப்பணியை அவர்கள் நாங்கள் செல்வதற்கு முன்பே செய்துமுடித்துவிட்டார்கள். பொது நலப்பணியில் தூண்டுதல் கொடுத்தால் பணியாற்றத் தயாராக இருக்கின்றோம் என்பதை அச்செயல் மூலம் அவர்கள் நிரூபித்துக் காட்டினார்கள். பாய்லர் பிளாண்ட் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் அவ்விடத்திற்குப் பக்கத்தில் இருந்த குழியை மண்போட்டு நிரப்பும் பணியில் ஈடுபட்டார்கள். பக்கத்தில் இருந்த மண்மேட்டைக் கொந்தாளங்களைக் கொண்டு வெட்டிப் பத்து வண்டி மண் கொண்டுபோய்க் கொட்டினார்கள். அவ்வூர் மக்களும் வண்டிகொடுத்து உதவி அப்பணிக்கு ஊக்கம் காட்டினார்கள். ஒருமணி நேரம் சிரமதானம் இம்முறையில் செய்தான பிறகு அம்மக்களை ஒன்று கூட்டி நாமாவளி சொல்லும்படி செய்தோம். அவ்வூர் நர்சரிப் பள்ளியில் படித்து வந்த குழந்தைகள் நாமாவளியும், தேவாரப் பாடல்களும் சொல்லி அனைவரையும் மகிழ்வித்தார்கள். பஜனையும் நாமாவளியுமாக முக்கால் மணி நேரம் அவ்வூர் மக்களோடு கலந்து வழிபாடு செய்தோம். வழிபாடு முடிந்தபின் முக்கால் மணிநேரம் அவர்களுக்கு நல்லுரை வழங்கப்பட்டது. இறுதியில் சமாராதனை நிகழ்ந்தது. சமாராதனையில் சர்க்கரைப் பொங்கல், புளிச்சாதம், தயிர் சாதம் யாவருக்கும் சமபந்தி போஜனமாக வழங்கப்பட்டன.

பாய்லர் பிளாண்ட் மேல்நிலைப்பள்ளி மாணக்கர்களால் வீடுவீடாகச் சென்று சேகரிக்கப்பட்ட அரிசியையும் பணத்தையும் கொண்டு *14–1–81* பொங்கல்அன்று அவ்வூர்மக்களுக்குச் சர்க்கரைப் பொங்கல், புளிச்சாதம், தயிர்சாதம் வழங்கப்பட்டன.

குழந்தைகளும் பெரியவர்களுமாகச் சுமார் அறுநூறு பேர் அமைதியாக அமர்ந்து அன்று உணவு அருந்தினார்கள். உணவுபரிமாறும் பொழுது நாமாவளி சொல்லிக்கொண்டு இருந்தார்கள். உணவு உண்டான பிறகு ஒவ்வொரு வரிசையாக ஒருவர்பின் ஒருவராக எழுந்து நின்று கலைந்துசென்றார்கள். நர்சரி குழந்தைகளுக்கு அன்று சீருடைகளும் வழங்கப்பட்டன.

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களும், ஆசிரியைகளும் மாணவ மாணவிகளும், கிராமசேவையும்

வெறும் ஏட்டுக் கல்வி கல்வியாகிவிடாது. சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் பணிவிடை செய்யக் கற்றுக் கொடுப்பது விளையாட்டுப் போன்று நிகழ வேண்டும். இளம் உள்ளத்தில் பொதுமக்களுக்குப் பணிவிடை செய்யும் பயிற்சியைப் புகுத்திவிட்டால் பிற்காலத்தில் அது அவர்களுக்கு நல்ல பலனைக் கொடுக்கும். அதை நடைமுறையில் கொண்டு வருவதற்கு ஒரு திட்டம் உருவாக்கப்பட்டுச் செயல் படுத்தப்பட்டது.

திருச்சி கைலாசபுரத்தில் உள்ள பாய்லர் பிளாண்ட் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களும் மாணக்கர்களும் ஆண்டுதோறும் ஸ்ரீ விவேகானந்த ஜயந்திவிழாக் கொண்டாடுவார்கள். இவ்வாண்டு அவ்விழாவை அவர்கள் பள்ளிக்கு ஒருமைல் தூரத்தில் உள்ள நாவல்பட்டு என்னும் ஊரில் வைத்துக் கொண்டாடினார்கள். *1—2—81* ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் மூன்று மணிக்கு பாய்லர் பிளாண்ட் ஆரம்பப்

பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியைகள், மாணவர்கள், மாணவிகள் சுமார் நூற்றைம்பது பேர்

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண [ஹரே ஹரே

என்ற நாமம் சொல்லிக்கொண்டு பள்ளியிலிருந்து நாவல்பட்டுக் கிராமத்திற்கு அணிவகுத்து நடந்து சென்றனர். அக்கிராம மக்கள் அவர்களை அன்புடன் வரவேற்றனர். அக்கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோவிலில் விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

புறத்தூய்மையாகவும், அகத்தூய்மையாகவும் வாழ்வதற்கு மக்கள் கற்றுக்கொள்ள வேண்டும். உடலையும், வாழும் இடத்தையும், சுற்றுப்புறங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல் புறத்தூய்மை எனப்படுகிறது. மனதில் உள்ள கீழான ஆசைகளை அகற்றி விடுதல் அகத்தூய்மை ஆகிறது. நாவல்பட்டுச் சேரியில் வாழ்ந்த மக்கள் அவர்கள் வாழும் இடத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்குத் தூண்டுதல் தரப்பட்டது. ஆசிரியர்களும், ஆசிரியைகளும், மாணவர்களும், மாணவிகளும் அன்று துப்புரவு செய்யும் பணியில் மகிழ்ச்சியோடு ஈடுபட்டார்கள். அவ்வூரில் மாரியம்மன் கோவில் ஒன்றும், கிறிஸ்தவர்களுக்கான மேரியன்னை கோவில் ஒன்றும் பக்கம் பக்கமாக இருக்கின்றன. அவ்விரு ஆலயங்களையும், அவர்களுள் சிலர் பெருக்குதலிலும், வெள்ளையடிக்கும் பணியிலும் சிரத்தையோடு ஈடுபட்டுப் பரந்த மனப்பான்மையைச் செயலில் காட்டித்தந்தார்கள். அவ்வூர்த் தெருக்களைச் சுத்தம் பண்ணுவதிலும், தெருவில் உள்ள முள் செடிகளை வெட்டித் தெருவை விசாலப்படுத்துவதிலும் சிலர் தீவிரமாக ஈடுபட்டனர். அவ்வூர்ப் பொதுமக்களும் அவர்களுக்கு உதவியாக இருந்து நல்ல முறையில் பணியாற்றி முடித்தனர்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர், ஸ்ரீ விவேகானந்தர், ஸ்ரீ சாரதாதேவியார் ஆகிய மூவரின் திருவுருவப் படங்களை எடுத்துக்கொண்டு அவ்வூரில் உள்ள தெருக்கள் தோறும் ஊர்வலம் வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஊர்வலம் நாமாவளியுடன் சிறப்பாக நடந்தது. ஊர்வலத்தில் ஆசிரியர்களும், மாணவர்களும் ஊர்ப் பொதுமக்களும் கலந்துகொண்டனர். ஊர்வலம் ஒரு தெருவிலிருந்து மற்றொரு தெருவிற்குப் போவதற்குள் அத்தெருவில் உள்ள மக்கள் தங்கள் வீட்டுக்கு முன்பு கூட்டி நீர் தெளித்துக் கோலம் போட்டு அழகுபடுத்திவிட்டார்கள். சமயத்தின்மூலம் சமுதாயச் சீர்திருத்தம் நிகழ்தல் வேண்டும் என்பதற்கு அன்றைய நிகழ்ச்சி எடுத்துக்காட்டாக இருந்தது. தெருக்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றும், சுகாதாரமாக வாழ வேண்டும் என்றும் எவ்வளவு எடுத்துக் கூறினாலும் நம் நாட்டு மக்கள் அதைப் புரிந்து கொண்டு செயல்படமாட்டார்கள். சமயசம்பந்தமான விழாக்கொண்டாடுகிறோம் என்றால் அவர்கள் தாங்களாகவே சுத்தமாக இருப்பதிலும் தெருக்களை அழகுபடுத்திச் சுத்தமாக வைத்துக்கொள்வதிலும் ஈடுபட்டுவிடுவார்கள் என்பதை அன்று அவ்வூர் மக்கள் நிரூபித்துக் காட்டினார்கள்.

மனிதனைத் திருத்தி அமைப்பதற்கு அவனுடைய உள்ளத்தைத் திருத்துவது அவசியமாகிறது. உள்ளம் திருந்தினால் மனிதனுடைய எண்ணம் திருந்துகிறது. எண்ணம் திருந்தினால் செயல் தானாகவே திருந்தி அமைகிறது. உள்ளத்தைத் திருத்துவதற்கு ஓசை மிகவும் பயன்படுகிறது. இறைவனுடைய நாம முழக்கம் அவ்வூர் மக்களின் செவிகளில் சென்று விழும்படி ஆசிரியர்களும், மாணவர்களும், ஊர்வலத்தில் கலந்து கொண்ட பொதுமக்களும் ஒன்று சேர்ந்து உச்சரித்து வந்தார்கள். தூய எண்ணம் காற்றில் அலையாகக் கிளம்பி மக்களுடைய உள்ளத்தில் உணர்வாகப் புகுந்து அவர்களுடைய உள்ளத்தை உயர்த்துவதற்கு ஊர்வலத்தில் உச்சரித்து வந்த நாமத்தின் ஓசை பயன்பட்டது. நாமத்தின் ஓசையைக் கேட்டதும் மக்களுடைய உள்ளத்தில் உறங்கிக் கிடந்த நல்லுணர்வு விழித்தெழுந்தது என்பதில் ஐயமில்லை. மக்களுடைய உள்ளத்தில் நல்லுணர்வை விழிப்படையச் செய்வதே அவர்களுக்குச் செய்யும் பணிகளுள் எல்லாம் மேலான பணியாகிறது. அப்பணி சிறப்பான முறையில் அன்று நடந்தேறியது.

ஊர்வலம் சிறப்பாக முடிந்ததும் ஆசிரியைகளும், மாணவிகளும் மக்களுடைய உள்ளத்

தில் தெய்வீக உணர்வைத் தட்டி எழுப்பும் வண்ணம் பதினைந்து நிமிடம் பஜனை பாடினார்கள். பஜனைக்குப் பிறகு ஒருமணி நேரம் பள்ளிக் குழந்தைகள் கலா நிகழ்ச்சிகளும், நாடகங்களும் நடத்திக்காட்டிக் கண்ணுக்கும் காதுக்கும் நல்ல விருந்தளித்தனர். சுயநலமற்று வாழ்வதின் சிறப்பையும், தூய்மையின் சிறப்பையும், சத்தியம், தர்மம் ஆகியவற்றைக் கடைப்பிடிப்பதின் சிறப்பையும் இராமாயணம், மகாபாரதம் இவற்றிலிருந்து எடுத்துக் காட்டுக்கள் காட்டி அவர்களுக்கு ஒருசொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. சொற்பொழிவின் மூலம் அவர்களுடைய அறிவிற்கு விருந்தளிக்கப்பட்டது.

எழுநூறு பேர் உண்பதற்கு வேண்டிய உணவு ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் தயார் செய்து கொண்டு வந்திருந்தார்கள். அக்கிராமத்தில் உள்ள குழந்தைகளும், பெரியவர்களும் பாய்லர் பிளாண்ட் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களும், மாணவர்களும் சமபந்தி போஜனம் செய்தார்கள். அவ்வூர் மக்கள் அனைவரையும் கட்டுப்பாட்டுடனும், ஒழுக்கத்துடனும், அமர்ந்து உண்ணும்படி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆசிரியர்கள் அனைவரையும் அமைதியாக உட்கார வைத்தார்கள். சர்க்கரைப் பொங்கல், புளிச்சாதம், தயிர் சாதம், கண்டல் முதலானவை அவர்கள் தயார் செய்து கொண்டு வந்த உணவுப் பொருள்களாகும். உணவு பரிமாறி முடியும்வரை அவர்கள் அமைதியாக அமர்ந்திருந்து 'ஓம் நம சிவாய' என்னும் பஞ்சாட்சரத்தை உச்சரித்துக் கொண்டிருந்தார்கள். அனைவருக்கும் உணவு பரிமாறி முடிந்தபின் மந்திரம் சொல்லி உணவைத் தூய்மைப்படுத்தி ஈசுவரப் பிரசாதமாக எண்ணி உணவை அருந்தினர். உணவு அருந்தி முடிந்தபின் அமைதியான முறையில் ஒருவர் பின் ஒருவராக வரிசையாகக் கலைந்து சென்றனர்.

வெறும் ஏட்டுக்கல்வியின் மூலம் இன்றைய சமுதாயத்தில் மக்களுடைய உள்ளத்தில் ஊடுருவியிருக்கும் சுயநலத்தைப் போக்கிவிட முடியாது. மேற்கூறிய முறையில் மக்களுக்குப் பயிற்சியளிப்பதன் மூலமாகவே அவர்களிடமுள்ள சுயநலத்தைப் போக்குவது சாத்தியம். சுயநலம் ஒழிந்து மக்கள் தூய உணர்வும், ஊக்கமும் பெறுவார்களானால் இன்றைய சமுதாயத்தில் உள்ள சீர்கேடுகள் எல்லாம் மறைந்து போகும். எதிர்காலத்தில் சீரிய சமுதாயம் அமையச் சிறுவர்களும் சிறுமிகளும் தன்னலமற்ற பணி செய்வதற்கு பயிற்சி பெறுவார்களாக. அவர்களுக்கு அத்தகைய பயிற்சி தருவதில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் அரசாங்கத்தினரும் துணைபுரிவார்களாக.

செய்திகள்

நிகழ்பவை :

பிப்ரவரி மாதம் 14, 15 தேதிகளில் முறையே சிவகாசியிலும், ராஜபாளையத்திலும் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் ஒருநாள் அந்தர் யோகங்கள் நடாத்துவார்கள்.

பிப்ரவரி 21, 22 தேதிகளில் மதுரை ஜில்லா காமயகவுண்டன்பட்டி அய்யனார் கோயிலில் மாலை 7 மணிமுதல் 8 மணிவரை ஸ்ரீமத் அசலானந்த சுவாமிகள் கீதை நடாத்துவார்கள்.

4—3—81 புதன்கிழமை மகாசிவராத்திரி ஆகும். அன்று குருகுல மாணவர்கள் உபவாசம் இருந்து இருபத்து நான்கு மணி நேரம் அகண்ட நாமபஜனை செய்வார்கள்.

8—3—81 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ ராமகிருஷ்ணர் திதி பூஜை ஆகும். அன்று குருகுல மாணவர்கள் இருபத்து நான்கு மணிநேரம் அகண்ட நாம பஜனையும், பகல் 11-00 மணி முதல் 12-00 மணிவரை ஐக்கிய வணக்கமும் செய்வார்கள்.

15—3—81 ஞாயிற்றுக்கிழமை அன்று ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவரின் ஜயந்திவிழா தபோவனத்தில் சிறப்பாகக் கொண்டாடப் பெறும். அன்று காலை 6-00 மணிக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திரு உருவப் படத்தைத் திருப்பராய்த்துறை சிவாலயத்திற்கு நாமபஜனையுடன் குருகுல மாணவர்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்வார்கள். அன்று காலை 9-00 மணிக்குக் குருகுல மாணவர்களின் பெற்றோர் கூட்டம் ஸ்ரீவிவேகானந்த வித்யாவன உயர்நிலைப்பள்ளியில் நடைபெறும்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை	பிரசார விலை	ரூ. 16-00
திருவாசகம்	பிரசார விலை	... 14-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,,	... 6-00
இராமாயணம்	,,	... 5-00
தினசரி தியானம்	,,	... 3-25
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ	,,	... 3-00
கர்மயோக விளக்கம்		... 10-00
ஞானயோக விளக்கம்		... 8-00
ராஜயோக விளக்கம்		... 8-00
பக்தியோக விளக்கம்		... 6-00
பரமஹம்சரின் பெருமை		... 6-00
விவேகானந்த விவரணம்		... 4-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்		... 4-00
விவேகானந்த உபநிஷதம்		... 4-00
கடவுளின் வடிவங்கள்		... 4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I		... 3-50
சந்தேகம் தெளிதல் பாகம்-II		... 3-50
அனுஷ்டான வேதாந்தம்		... 3-00
எதிர்கால இந்தியா		... 3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்		... 3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை		... 3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)		... 2-00
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம்		... 2-00
கண்ணன் என்னும் கடவுள்		... 2-00
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள்	விரிவுரை	... 3-50
பரிபூரணானந்தம்	ஷை	... 3-00
சின்மயானந்த குரு	ஷை	... 3-00
ஆனந்தமானபரம்	ஷை	... 3-00
சுகவாரி	ஷை	... 3-00
மௌனகுரு வணக்கம்	ஷை	... 3-00
எங்கும்நிறைகின்றபொருள்	ஷை	... 2-50
பரசிவ வணக்கம்	ஷை	... 1-00
பஜனைப் பாடல்கள்		2-50
விரதவீரர் பீஷ்மர்	(நாடகம்)	... 1-50
விபீஷணன் சரணாகதி	ஷை	... 1-50
பரமஹம்சர் பாமாலை		... 1-50
சந்நியாசி		... 1-25
குழந்தைகளின் களிக்கூடம்		... 1-00
சகோதரி நிவேதிதை		... 1-00
காயத்ரீ		... 1-00
இராவண தத்துவம்		... 1-00
வாலி மோட்சம்	(நாடகம்)	... 1-00
நவப்புதல்வர்கள்	(நாடகம்)	... 1-00
ஏகலைவ்யனின் குருபக்தி	(நாடகம்)	... 1-00
தானவீரன் கர்ணன்	(நாடகம்)	... 1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்		... 1-00

பிரஹ்லாதன்	(நாடகம்)	ரூ. 1-00
மார்க்கண்டேயன்	(நாடகம்)	... 1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்		... 1-00
பாண்டவ கௌரவபெருமை	(நாடகம்)	... 0-80
நன்மக்களைப் பெறுதல்		... 0-80
நோய்க்கு இடம் கொடேல்		... 0-80
பாதுகா பட்டாபிஷேகம்	(நாடகம்)	... 0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?		... 0-75
*ஆத்ம சக்தி		... 0-75
*சக்தி தத்துவம்		... 0-70
*சிவதத்துவம்		... 0-70
மனிதனது நிஜசொரூபம்		... 0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்		... 0-60
*ஆலய வழிபாடு		... 0-60
*சூரிய நாராயணன்		... 0-50
*முருகக் கடவுள்		... 0-50
*விஷ்ணு தத்துவம்		... 0-50
தெய்வீக மகிமைகள்		... 0-50
சைவன் யார்?		... 0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?		0-50
*கணபதி		... 0-40
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்		... 0-40
வர்ணாச்ரம தர்மம்		... 0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்		... 0-30
The Bhagavad Gita (10th Imp.)		...20-00
Sri Lalitambika Sahasranama Stotram		...10-00
The Indian National Education		... 8-00
Ramakrishna Lives Vedanta		... 8-00
Facets of Brahman or The Hindu Gods		... 5-00
Daily Divine Digest (DELUXE)		... 4-50
Daily Divine Digest (Ordinary)		... 2-50
Mahabharata (with plastic cover)		... 4-00
Ramayana	(do)	... 4-00
The man Making Message of Vivekananda (with Plastic cover)		... 4-00
Sri Vishnu Sahasranama Stotram		... 4-00
The Bahagavad Gita (Small Size)		... 4-00
Siva Sahasranama Stotram		... 3-50
Bheeshma The Superman		... 3-50
Hinduism Hosts Christianity		... 3-00
Holy Bible—In the Light of Vedanta		... 1-50
*Introducing the Gita		... 1-50
The Garland of Paraaparam		... 1-50
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami		... 1-00
*Key to Higher Life		... 0-75

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதை, திருவாசகத்திற்கு ரூ. 3-25ம் மஞ்ஜரிக்கு ரூ. 1-40ம் இராமாயணத்திற்கு ரூ. 1-30ம் தினசரி தியானத்திற்கு ரூ. 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரையும் சேர்த்து அனுப்புங்கள்.

*இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

அந்தர்யோக விவரங்கள்

மதுரை ஜில்லா—பண்ணைபுரத்தில் 14—2—81 சனிக்கிழமை

இடம் : காமுகுல ஒக்கலிக மகாஜன சங்கக் கட்டடம்
நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

தஞ்சை ஜில்லா—மாயூரத்தில் 15—2—81 ஞாயிற்றுக்கிழமை

இடம் : குமாரசாமி உடையார் உதவி ஆரம்பப்பள்ளி (ரயிலடி காவேரி நகர்)
நேரம் : காலை 10-30 மணி முதல் மாலை 4-00 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

சென்னை-புரசவாக்கத்தில் 22—2—81 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸர் M. CT. முத்தையா செட்டியார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி
நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—கம்பத்தில் 22—2—81 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸ்ரீ முத்தையா பிள்ளை ஞாபகார்த்த உயர்நிலைப்பள்ளி
நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்
உணவு வசதி : நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-00 செலுத்தி சீட்டுப்பெற்றுக் கொள்ளவும்.

திருநெல்வேலி ஜில்லா—செட்டிமேடு டோனவூரில் 22—2—81 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸ்ரீ சீனிவாசப் பெருமாள் கோவில்
நேரம் : காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

திருச்சி ஜில்லா—தாத்தய்யங்கார்பேட்டையில் 28—2—81 சனிக்கிழமை

இடம் : கன்னிகா பரமேஸ்வரி பஜனைமடம்
நேரம் : இரவு 7-00 மணி முதல் 9-30 மணி வரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—சித்திரச்சாவடியில் 1—3—81 ஞாயிற்றுக்கிழமை

இடம் : ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த ஆச்ரமம்
நேரம் : காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி : நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-00ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்தி சீட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

சேலம் ஜில்லா—மேச்சேரியில் 1—3—81 ஞாயிற்றுக்கிழமை

இடம் : சன்மார்க்க சங்கக் கட்டடம்
நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

Edited by SWAMI NITHYANANDA
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.